
# பாரதிதாசன் கவிதைகள்

## தொகுதி-௩



பதிப்பாசிரியர்
அரங்க. நலங்கிள்ளி எம்.ஏ.

# வாணிதாசன் கவிதைகள்

## தொகுதி—3

# வாணிதாசன் கவிதைகள்

தொகுதி—3

பதிப்பாசிரியர்

அரங்க. நலங்கிள்ளி, எம்.ஏ.

வாணிதாசன் பதிப்பகம்
சேலியமேடு 607 402
புதுவை மாநிலம்

முதற் பதிப்பு : ஆகஸ்ட்டு, 1984
உரிமை : ஆதிலட்சுமி வாணிதாசன் (1984)

| | | |
|---|---|---|
| Title | : | Vanidhasan Kavithaigal—Vol. 2 |
| Language | : | Tamil |
| Author | : | Poet Vanidhasan |
| Subject | : | Collected Verses |
| Edition | : | First Edition |
| Printer | : | Moovendhar Achagam, Madras-14 |

**Price : Rs. 10-00**

இந்நூல் கவிஞரின் பத்தாவது
நினைவு ஆண்டையொட்டி வெளிவருகிறது.

*(இந்நூல் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி இயக்ககம்
அளித்த நிதி உதவியுடன் வெளிவருகிறது).*

*விற்பனை உரிமை*

பாரி நிலையம்
184, பிராட்வே சாலை,
சென்னை-600 001.

# பதிப்புரை

"வாணிதாசன் கவிதைகள் தொகுதி-3" எனும் இந்நூல் கவிஞரின் மறைவிற்குப் பின் வெளி வருகின்ற இரண்டாவது நூலாகும். "வாணிதாசன் கவிதைகள் தொகுதி-2" எனும் பெயரில் 1981 ஆம் ஆண்டில் ஒரு நூல் வெளி வந்துள்ளமை இங்கு நினைவு கூரத்தக்கது.

இதுவரை கவிஞரின் படைப்புகளாக வெளிவந்துள்ள "தமிழச்சி, கொடி முல்லை, தொடுவானம், எழிலோவியம், இன்ப இலக்கியம், குழந்தை இலக்கியம், சிரித்த நுணா, இரவு வரவில்லை, பாட்டரங்கப் பாடல்கள்" முதலாய பதினாறு கவிதை நூல்களிலும் இடம் பெறாமல் எஞ்சியிருந்த கவிதைகளின் தொகுப்பே "வாணிதாசன் கவிதைகள்தொகுதி-3" என்ற பெயருடன் இப்போது வெளிவருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலுள்ள கவிதைகளெல்லாம் அவ்வப்போது பாட்டரங்குகளிலும், இதழ்களிலும், பிறரால் வெளியிடப் பட்ட நூல்கள், மலர்கள் ஆகியவற்றிலும் வெளியாகித் தமிழ் கூறு நல்லுலகத்து மக்களால் படித்துச் சுவைக்கப் பட்டவையாகும். கவிதைகள் வெளிவந்த இதழ்கள், மலர்கள் ஆகியவற்றின் விவரங்களை விரிவாகத் தர இயல வில்லை. எனினும் இயன்றவரை கவிதைகள் பிறந்த தேதி யினை அவ்வக் கவிதைகளின் கீழே கொடுத்துள்ளேன்.

இந்நூலில் இடம் பெற்றுள்ள கவிதைகளைத் தேர்வு செய்யத் தொடங்கியபோது கவிஞரை மனதில் கொண்டு கவிஞர் இருந்திருந்தால் எத்தகைய பாடல்களை முதலில் அச்சாக்க முனைந்திருப்பாரோ அத்தகைய பாடல் களையே இந்நூலில் இணைக்க முயன்றுள்ளேன்.

இந்நூலும் இதற்கு முன்னர் (1981) நான் பதிப்பித்து வெளிவந்த வாணிதாசன் கவிதைகள் தொகுதி-2 எனும் நூலும் வெளிவர உண்மையான தமிழ் உணர்வோடு இடை

விடாது எனக்கு ஊக்கமூட்டி எனது நிலையான வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி வரும் மனிதப் பெருந்தகை டாக்டர் பொற்கோ அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றி என்றென்றும் உரியது.

தந்தை விட்டுச் சென்ற படைப்புகளைத் தமிழுலகின் கையில் ஒப்படைப்பது தனயன் கடமை எனும் உணர்வினை மறைமுகமாக ஊட்டி வளர்த்தவரும் கவிஞரின் நெருங்கிய நண்பருமான புலவர் ந. அறிவழகன் அவர்கட்கும் இந்நூலாக்கத்தின் பல்வேறு பணிகளுக்கும் உடனிருந்து அவ்வப்போது நல்ல திட்டங்களைத் தந்துதவிய திரு மருதூர். அரங்கராசன் எம்.ஏ., எம்ஃபில், திரு. சுதர்சன் எம்.ஏ., செல்வி வசந்தாள், எம்.ஏ., எம்ஃபில்., திரு இரா. குலோத்துங்கன் எம்.ஏ., எம்ஃபில்., ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வெளிவர நிதி உதவி செய்து ஊக்கப்படுத்திய தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கும் நூலின் அச்சாக்கத்திற்குப் பெரிதும் உதவிய மூவேந்தர் அச்சக உரிமையாளர் திரு. மூவேந்தர் முத்து அவர்கட்கும் இங்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டவன்.

என் தந்தையார் தமது இறுதிக் காலத்தில் "நினைத்துப் பார்க்கின்..." என்ற தலைப்பில் எழுதி வைத்துச் சென்ற வாழ்க்கைக் குறிப்பினை இந்நூலோடு இணைத்து வெளியிடும் வாய்ப்பு கிடைத்தமை குறித்து மன நிறைவு கொள்கிறேன்.

இந்நூலை இயன்றவரை சொற்பிழை, பொருட்பிழையின்றிப் பதிப்பிக்க முயன்றுள்ளேன். இதற்கு முன் கவிஞரது படைப்புகளாக வெளிவந்த கவிதை நூல்களுக்கு ஆதரவும் ஊக்கமும் கொடுத்து வரவேற்ற தமிழுலகிற்கும் தமிழன்பர்கட்கும் எனது மனமார்ந்த நன்றி. அதே போன்று இப்போது வெளிவருகின்ற இக்கவிதை நூலுக்கும் ஊக்கமும் ஆதரவும் கொடுத்து வரவேற்பார்கள் என நம்புகிறேன்.

சேலியமேடு
ஆகஸ்ட்டு 1984

அரங்க. நலங்கிள்ளி

# உள்ளே


I நினைத்துப் பார்க்கின் ... vii

II வேட்கை

வளமிகு வாழ்வுக்கு இலக்கியம் சமைப்போம் ... 1
பாடுபடும் தொழிலாளி—கவிஞர் ... 10
ஒக்கும் பிறப்பு ஒவ்வாச் சிறப்பு ... 15
இன்பக் குடும்பம் ... 20
கருத்துடை வேண்டும் ... 23

III இசைக்குரியார்

அறிஞர் அண்ணா வாழியரே ... 25
நமதண்ணா வாழியரே ... 27
ஞாயிறு நம் அண்ணா ... 29
சுவைகுன்றாச் சொல்லாளர் அண்ணா ... 31
காக்கும் கரம் ... 33
அமைச்செனப்படுவது நினதே ... 35
புலவராற்றுப் படை ... 36
நாவலர் போற்றும் காவலன் ... 38
மாலை வாங்கி வாயேன் ... 39
அண்ணா அறுபது ... 41
விஞ்சு புகழில் விளங்கக் காண்பாரே ... 44
கலைஞர் நாற்பத்தாறு ... 46
அஞ்சுகத்தாய் மகன் வாழ்க ... 53
என் பாடல் போல வாழ்க ... 55
இன்னும் பன்னூறாண்டிரும் ... 56
தாத்தா எனத் தமிழ் பாடுவேனே ... 56
சொற்பொழிவு மலை ... 57
சிதம்பரனாரே பிள்ளை ... 59

## IV கதைப்பாட்டு

இதுதான் மருத்துவம் ... 61
உலகப் பாடம் ... 65
கைதி ... 70
பிறைமதி ... 73

## V வாழ்த்து

மலைத்தேன் ... 77
சீர்பெற வேண்டும் செழித்தே ... 78
குளிரிளநீர்ச் சுவைப்பாட்டு ... 79
தங்கப் பாடல் ... 80
தமிழ் வீசும் கதிர் ... 81
நல்வாழ்வைத் தூண்டும் கவிகள் ... 81
தந்தை பெயர் நாட்டுக ... 82
எண்ணத் தூண்டும் ஏடு ... 83
இன்றே போல் வாழ்க ... 84
தூய தமிழ்போல் வாழ்க ... 86
புது மகிழ்வில் வாழ்க ... 88

## VI பல்சுவை

பொன் மாலை ... 89
என் றன் வீடு ... 91
குயில் ... 94
கலங்கவில்லை ... 97
நான் கண்ட கவிஞர் ... 99
சீர்ப் புதுவை ... 101
சௌமிய ஆண்டுச் செய்தி ... 102

## VI I பிற்சேர்க்கை

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை ... 105

# நினைத்துப் பார்க்கின்...

—கவிஞரேறு வாணிதாசன்—

1915 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 22 ஆம் நாள் புதுவையை அடுத்த வில்லவ நல்லூரில் (வில்லியனூர்) திருக்காமுவுக்கும் துளசியம்மாளுக்கும் மகனாகப் பிறந்தேன். இன்று கவிஞரேறு, பாவலர் மணி, பாவலர் மன்னன், புதுமைக் கவிஞர் வாணிதாசன் என்கின்ற பாராட்டுப் பெயர்களைப் பெற்று நான் நடமாடுகின்றேன்.

என் பெற்றோர்கள் எனக்கிட்ட பெயர் அரங்கசாமி; அழைத்த பெயர் எத்திராசன். என் ஏழாவது வயதில் என் துணைக்கு ஒரு பெண் மகவை ஈன்று என் அன்னை என்னை விட்டு மறைந்தார்கள். தந்தையை ஈன்ற அம்மாயி என்ற என் பாட்டியால் செல்லமாக வளர்க்கப் பட்டேன். அந்நிகழ்ச்சி எனது கீழ்க்கண்ட பாடலால் விளங்கும்.

என் அன்னை சிற்றூராள்! எழுதாத பாடல்
இல்லறத்தின் வழிகாட்டி! புகழ்ச்சியில்லை! உண்மை!
மின்னலிடைத் தேயாத வெண்மதியம்! நீங்கள்
விரும்புகின்ற என் பாட்டின் ஆதியவள்! அந்தத்

தென்னவளைத் தீந்தமிழை என்னுயிரை அன்பைச்
சிறுவயதில் நானிழந்தேன்! ஆனாலும் அந்த
முன்னவர்கள் தீந்தமிழை மறக்கவுமா கூடும்?
முழுநேரம் அவள்கனவே! கனவும் ஒரு கானல்!

என் தந்தை என் தந்தை என் தந்தை என்றே
எழுதுகின்ற வேளையிலும் எண்ணுகின்ற போழ்தும்
தென்னவர்கள் தமிழ்காத்த சிறுத்தையின் மக்கள்
தெரிகின்றார்! ஆனாலும் என் தந்தை போல

அந்நாளில் இருந்தாரோ என்கின்ற அய்யம்
அகத்திலெழும்; அவர்பேச்சோ என்காதில் கேட்கும்!
எந்நாளும் என்னருகில் ஏதேதோ பேசி
இருப்பதைப்போல் கனாக்காண்பேன் கனவும் ஒரு
கானல்!

இளவயதில் தாயற்றுத் தத்தளித்த போழ்து
யார்யாரோ எனைத்தூக்கிச் சிரிப்பூட்டப் பார்த்தார்!
தளதளத்த என்பாட்டி 'அம்மாயி' என்றன்
தனிச்சொத்து! நானவளின் தணியாத காதல்!

உளத்தினிலே குடியேறிப் போன அவள்காட்சி
உயிர்பிரியும் வேளையிலும் நான்மறக்க மாட்டேன்!
வளர்த்தஅவள் எனைப்பிரிந்தாள்! அவளன்புச் சாயல்
மாறாத பெருங்கனவு! கனவும் ஒரு கானல்!

## இளமைக் காலம்

என் தந்தை பிரெஞ்சு அரசாங்க அலுவலர்; அவர் ஒற்றை மாட்டு வண்டியிலேயே தம் அலுவலுக்குச் செல்வார்; அடம்பிடித்து அவரோடு வண்டியிலே செல்வேன்; அவர் போகும்போதும் வரும்போதும் எனக்கு உறக்கம் வரும் வரை கதைகள் பல சொல்வார். அவரோர் திருமாலன்பர். அவர் ஆண்டாள் திருப்பாவைப் பாடல் வரிகளில் ஒரு சிலவற்றை எனக்குச் சொல்லிக் கொடுத்ததுண்டு.

என் அன்னையின் மறைவுக்குப் பின் அய்ந்தாண்டுகள் கழித்து என் அன்னையின் நெருங்கிய உறவுப் பெண்ணை என் தந்தையார் மறுமணம் செய்து கொண்டார். என் சிற்றன்னை பெயர் செல்லம்மாள்.

நான் முதன்முதல் எழுத்தறிவிக்கும் சடங்கோடு ஒரு திண்ணைப் பள்ளியில் சேர்க்கப்பட்டேன். நினைத்துப் பார்க்கின் அது ஒரு பசுமையான நிகழ்ச்சி. திண்ணைப் பள்ளிக் கூடம் போவதாகப் போக்குக் காட்டித் தெருக் கோடியில் உள்ள சிறு கொட்டகையில் ஒளிந்து கொள் வேன். ஆண்டுதோறும் காமனுக்கு விழா எடுப்பதற்காக ஊரார்கள் சிறு கொட்டகை கட்டி அதன் முன் போய்க் கரும்பு, வாழை முதலியன நட்டு நவதானியம் வித்தி வழி படுவார்கள். இன்றும் அந்நிகழ்ச்சிகள் சிற்றூர்களில் நடைபெறுதலைக் காணலாம். அந்தக் கொட்டகையே என் திண்ணைப் பள்ளிக்குப் பதில் பலமுறை புகலிடம் தந்ததுண்டு. அதற்காக நான் எந்தத் தண்டனையும் அடைந்ததாக நினைவில்லை. திண்ணைப்பள்ளி ஆசிரியர் நான் தாயற்ற பிள்ளை என்பதற்காக என்னை மன்னித் திருக்கக் கூடும்.

தாயற்ற காரணத்தாலோ தந்தையின் சிறப்பாக என் பாட்டியின் அன்பாலோ நான் சிறு வயதில் விடாப்பிடிக் கண்டனாகவே இருந்தேன். என் சிற்றன்னை செல்லம்மாள் இன்னும் உயிர் வாழ்கிறார்கள். அவர்கள் நான் எந்தத் தவறு செய்தாலும் மறைத்து விடுவார்களே தவிர மனங் குமுற மாட்டார்கள். மாற்றாந்தாய்க்கு அவர்கள் ஒரு விதி விலக்கு.

## கல்வி நிலை

அந்தநாள் அரசாண்ட பிரெஞ்சுக்காரர்கள் புதுவையை எட்டுக் கொம்யூன்களாகப் பிரித்திருந்தனர். ஒவ்வொரு கொம்யூனிலும் சென்ட்ரல் ஸ்கூல் (Ecole Central) ஒன்று நடத்தப்பட்டு வந்தது. அதில் தொடக்க முதல் இறுதி வரை தமிழும் பிரெஞ்சு மொழியுமே கற்பித்து வந்தார்கள். நான் உருண்டோடும் கல்லைப்போல் வில்லியனூர், பாகூர், புதுவை ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளில் மாறி

மாறிப் படித்துக் கொண்டிருந்தேன். புதுவையில் நான் நான்காம் வகுப்புப் படிக்கும் போது பாவேந்தர் தமிழ் வகுப்பு நடத்தி வந்தார். நான் வில்லியனூரில்தான் நிலைத்துப் படிக்கத் தொடங்கினேன். அங்கே தலைமையாசிரியராக இருந்தவர் சி. சு. கிருஷ்ணன் அவர்களாவர். அவர் தமிழ்ப் பற்றும் பிரெஞ்சுமொழி வளமும் நிறைந்தவர். எல்லப்ப வாத்தியார், முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை ஆகியோர் என் வகுப்பிற்குத் தமிழ்ப் பாடம் நடத்தி வந்தார்கள்.

புதுவையில் பாவேந்தர் பாரதிதாசனால் என்னுள் இடப்பட்ட தமிழ் வித்து வில்லியனூர் தமிழாசிரியர்களால் செடியாக மாறியது. தலைமையாசிரியர் கிருஷ்ணனால் நீர் ஊற்றி வளர்க்கப்பட்டது. அது முதல் எனது தமிழுணர்வு மேலோங்கத் தொடங்கியது. வகுப்புகளை மேற்பார்வையிட வரும் தலைமையாசிரியர் எங்கள் செய்யுள் வகுப்பில் முதல் இரண்டடியைச் சொல்லிப் பின்னிரண்டடியைக் கேட்பார்; நானே முதலில் சொல்ல எழுவேன். "ஏய் முந்திரிக் கொட்டை உட்கார்" என்பார் தலைமையாசிரியர். மற்ற மாணவரிடமிருந்து பதில் வராத பின்னரே என்னைக் கூறச்சொல்வார். முழுச்செய்யுளையும் பிழையறப் பாடுவேன். தமிழாசிரியரும் தலைமையாசிரியரும் என்னைப் பாராட்டுவார்கள். அன்று நான் அடைந்த மகிழ்ச்சியை நினைத்துப் பார்க்கின் என் உள்ளம் விம்முகிறது.

அற்றை நாளில், E. S. L. C. யைப் போன்று 'செர்த்திபிகா' என்ற தேர்வு நடைபெறுவதுண்டு. அதில் குறிப்பிட்ட வகுப்பிலிருந்தே மாணவர்களைத் தேர்வுக்கு அனுப்புவர். வெவ்வேறு ஆசிரியர்கள் கண்காணிப்பில் புதுவையில் நடைபெறும் அத்தேர்வில் மொழிப் பாடம், கணக்கு, கட்டுரை, செய்யுள், இலக்கணம், சொல்வதெழுதுதல் ஆகியன எழுத்தாலும் வாய்மொழியாலும் இடம்பெறும். இதில் வெற்றி பெற்றோர்க்குச் சான்றிதழ்கள் வழங்கப்பெறும். இந்தப் பொதுத் தேர்வெழுத நான் குறிப்பிட்ட வகுப்பிற்கும் கீழ்

வகுப்பிலிருந்தே செல்ல அனுமதிக்கப்பட்டேன். ஆசிரியர்கட்கு என்மீது அவ்வளவு நம்பிக்கை. 1928இல் அத்தேர்வில் முதலாவதாக வெற்றியும் பெற்றேன். கீழ் வகுப்பிலிருந்தே நான் ஒருவன் மட்டும் தேர்ச்சி பெற்றதனால் என்பாட்டி, தந்தை, ஆசிரியர்கள் யாவர்க்கும் பெரு மகிழ்ச்சி. மாணவர் முதல் யாவர்க்கும் இனிப்பு வழங்கினேன்.

விடுமுறை நாட்களில் வில்லியனூர் கோவிலில் உள்ள திருக்குளமும் தெற்கே ஓடும் தாமிரபரணி ஆறும் என்னால் என்னென்ன தொல்லைகள் பட்டனவோ? அவற்றை நினைத்துப் பார்க்கின் வெட்கமும் மகிழ்ச்சியும் விரிவான் போல் தோன்றுகிறது. அது அந்நாள் இளமைத் துடுக்கின் இனிய விருந்து.

அடுத்த நான்கு ஆண்டும் தொடர்ந்து படித்து வந்தேன். துடுக்குத்தனம் மிகுதியாக இருந்தும் படிப்பில் மட்டும் என் ஆசை வளர்ந்து கொண்டே வந்தது. காரணம் அடுத்தத் தேர்வு முழுக்க முழுக்க பிரெஞ்சு மொழிப்பாடங்கள். கணக்கு, கட்டுரை, சொல்வதெழுதுதல், இலக்கணம், இலக்கியம், விஞ்ஞானம் முதலிய பாடங்களைப் பிரெஞ்சு மொழியிலேயே பயில வேண்டும். அப்பொழுது என் வகுப்பிற்குத் தனித்தனியே பிரெஞ்சுமொழியாசிரியர்கள் வருவார்கள். அதில் குறிப்பிடத்தக்கவர் சிமோனேல். அவர் பாரிஸ் சென்று படித்த இலக்கியப் பட்டதாரி. என் வகுப்பிற்கு அவரே பிரெஞ்சு இலக்கியப் பாடங்கள் நடத்தி வந்தார். அவர் நடத்தும் பாடம் இனிமையாக இருக்கும். அவர் பிரெஞ்சுச்செய்யுளை விளக்கும் முறையைக் கேட்டுக் கேட்டுப் பிரெஞ்சுக் கவிதைகளின் மேல் மிகுந்த ஈடுபாடு எனக்கு வளர்ந்தது. அவர் அடிக்கடி "உன் மண்டையைப் பார்த்தால் கவிஞர் Edmon Roskan சாயல் போலத் தோன்றுகிறது" என்பார்.

அவர் இன்று இல்லையென்றாலும் அவர் சொன்ன அந்தச் சொற்கள் என்காதில் இன்றும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. நினைத்துப் பார்க்கின் அன்று நான்

கவிஞனாவேன் என்று கனவு கூடக் கண்டதில்லை. ஆனால் தமிழ்க் கவிதைகள் மேலும் பிரெஞ்சுக் கவிதைகள் மேலும் எனக்கு ஈடு இணையற்றதொரு பிடிப்பு உண்டாகி இருந்தது.

1932 ஆம் ஆண்டு Certificate Etude primoure Elimantaire Francaise என்ற பிரெஞ்சுத் தேர்வில் வெற்றிபெற்றேன். மீண்டும் புதுவையில் சென்றுதான் படிக்க வேண்டும். அவ்வாறே புதுவை கல்வே கல்லூரியில் சேர்ந்து படிக்கத் தொடங்கினேன்.

என் சிறு வயது முதலே மரக்கறி உணவென்றால் எனக்கு ஒரே வெறுப்பு. என் பாட்டியால் புலால் உணவு ஊட்டியே வளர்க்கப்பட்டவன் நான். மாதம் ரூபாய் 10க்கு எனக்கு உணவளிக்குமாறு புதுவை கிருஷ்ணன் நாயர் மிலிட்டரி ஓட்டலில் என் தந்தை எனக்கு உணவு ஏற்பாடு செய்திருந்தார். அவருக்கோ ஊதியம் மாதம் 15 ரூபாய் தான். அந்த நிலையில் என்னைக் கல்லூரியில் படிக்க வைக்க அவர் என்னென்ன தொல்லைகள் பட்டிருப்பார் என்று நினைத்துப் பார்க்கின் மிகுந்த வேதனை அடைகிறேன். அவர்தம் கடமை உணர்வை எண்ணிப் பெருமைப் படுகிறேன்.

என் தந்தைக்குத் தெரிந்த ரொட்டிக்கடைக்காரர் வீட்டு மாடியில் நான் தங்கிப் படிக்க ஏற்பாடாகி இருந்தது. அந்த இடம் எனக்குப் பிடிபடவில்லை. இரண்டொரு மாதங்களில் வேறொரு உறவினர் வீட்டில் தங்கிப் படித்து வந்தேன். அங்கும் நான் நிலையாக இருக்க முடியவில்லை. கடைசியாக உணவு விடுதிக்கு அண்மையில் இருந்த திருமுடி நடராச செட்டியார் வீட்டு மேல் மாடியில் ஓர் அறையில் நான் தங்கிப் படிக்க ஏற்பாடு செய்திருந்தார் என் தந்தை. அந்நாளில் வெளியூரில் இருந்து வந்து தங்கிப்படிக்கும் மாணவர்கட்கு இலவசமாகப் புகலிடம் தரும் அன்புள்ளம் உடையவர் திருமுடி நடராச செட்டியார். பலருக்கு உணவும் கொடுத்துப் படிக்க வாய்ப்பளித்த வள்ளல் அவர்.

திருமுடி நடராச செட்டியாருக்குப் பிள்ளைகள் மூவர். மூவரும் சிறுவர்கள்; குறும்பு நிறைந்த விளையாட்டுப் பிள்ளைகள். தொடக்கப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தனர். நினைத்துப் பார்க்கின் என் இளவயதுக் குறும்பை விட அவர்கள் குறும்பு மிக மிகக் குறைவானதே. இன்றும் என் பிரெஞ்சு அகராதியில் அவர்கள் ஏடுகளைக் கிழித்திருப்பதைக் காணலாம். அதனைப் பொன்னே போல் போற்றி வருகிறேன். அவர்கள் மூவரையும் தூக்கித் தூக்கி விளையாடிய நினைவு என்னுள் பசுமையாக நிலைத்திருக்கின்றது. தந்தையைப் போலவே திருமுடி சேதுராமன் அவர்களும் தமிழ்ப் பற்றோடும் பண்பாட்டோடும் பிறர்க்குதவி வாழும் பெற்றியை நினைத்துப் பார்க்கின் என் உள்ளம் பேருவகையடைகிறது.

நான் கல்வே கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். என்னோடு என் பிறந்த ஊராகிய வில்லியனூரில் இருந்து செட்டியார் பிள்ளையாண்டான் ஒருவரும் படித்துக்கொண்டிருந்தார். பெயர் நினைவில் வரவில்லை. எங்களுக்கென்றே இரண்டு மேசைகள் நாற்காலிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. மாடியில் சிறு சிறு தொட்டிகளில் இரோசாச் செடிகள் பூத்துக் குலுங்கும் அப்பூக்களை இட்டு வீட்டில் கடவுளை வணங்கிய பின்னரே செட்டியார் காலை உணவருந்துவார். மொட்டை மாடியில் கீற்றுக் கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டிருக்கும்; அதில்தான் இரவு உணவுக்குப் பின் திருமுடி நடராச செட்டியார் படுக்க வருவார். எங்கள் அறையை நோட்டமிடுவார். என்னோடு என் ஊர்க்காரர் ஒருவரும் தங்கியிருந்தார். ஆனால் அவர் பயின்ற கல்விக் கூடத்தில் முழுக்க முழுக்கப் பிரெஞ்சு வகுப்புகளே நடக்கும். அது Collge Colonial ஆகும். இரவில் நாங்கள் படிக்கவில்லையென்றால் கடுமையான அன்புக் கட்டளைகள் பிறப்பிப்பார். அறிவுரைகள் தருவார். எனக்கு அவர்மீது அளவற்ற பற்று ஏற்பட்டது. தொடர்ந்து கல்வே கல்லூரியில் பயின்றேன்.

கல்லூரியில் பிரெஞ்சு தமிழ் வகுப்புகள் தவிர ஆங்கில வகுப்புகளும் நடக்கும். ஆங்கிலப் பாடவேளையில் வகுப்பை விட்டு மறைந்து விடுவேன். ஆங்கில வகுப்பை அசட்டை செய்ததை இன்று நினைத்து வேதனைப் படு கின்றேன். தமிழ் பிரெஞ்சு வகுப்புகளை ஒன்றைக் கூட நான் விட்டதில்லை.

1933ஆம் ஆண்டின் இறுதியில் வில்லியனூரில் என்னுடன் படித்த முஸ்லீம் நண்பர் மஜீது தொடர்ந்து படிக்க வசதி யின்மையால் வீட்டிலிருந்தே தமிழாசிரியர் தேர்வுக்குப் படிக்க எண்ணி தமிழ்ப்பாட நூல்கள் வாங்கினார். எனக் கும் அந்த நூல்களே துணைப்பாடமாகையால் எனது கல்லூரித் தமிழ் அறிவை அந்த முஸ்லீம் நண்பர்க்கு அவ்வப் போது பகிர்ந்தளிப்பது வழக்கம். அதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியும் உண்டாயிற்று. வியாழன், ஞாயிறு ஆகிய வாரத்தின் இரண்டு விடுமுறை நாட்களிலும் இது நிகழும்.

நினைத்துப் பார்க்கின் சாதிமத வேறுபாடுகள் வேரூன்றியிருந்த அந்தக் காலத்திலும் என் தந்தையார் எனக்கு ஆத்தீகப்பற்றை ஊட்டியிருந்த போதிலும் எனக் குச் சாதியைப் பற்றிய மதத்தைப் பற்றிய விருப்பு வெறுப்பு கள் கிடையாது. எல்லாமத மாணவர்களும் என்னுடன் பயின்ற காரணத்தால் அந்தப் பொது நோக்கு ஏற்பட்டிருக் கலாம். நான் முஸ்லீம் கிருத்துவ மாணவத் தோழர் களோடு நெருங்கிப் பழகி அவர்கள் வீடுகளில் உணவும் உண்டிருக்கிறேன். ஆனால் இவையெல்லாம் என் தந்தைக் குத் தெரியாது. நான் தாயற்ற பிள்ளை என்பதாலும் கண்டித்தால் கோபித்துக்கொண்டு உணவுண்ண மாட் டேன் என்பதாலும் என் தந்தை தெரிந்தும் தெரியாத வர் போன்றே நடந்து கொள்வார்.

நண்பர் மஜீத் வறுமையின் காரணமாக அஞ்சல் பட்டு வாடா செய்யும் தொழிலை ஆங்கிலேயர் ஆட்சிக்குட் பட்டிருந்த சென்னை மாநிலம் விக்கிரவாண்டியில் ஏற்றார்.

அவர் படித்து வந்த அந்தத் தேர்வுக்கு இரண்டு வாரத்திற்குள் பணம் கட்டி விண்ணப்பிக்க வேண்டும். எனக்கும் அத்தேர்வெழுத விருப்பம் உண்டாயிற்று. அத்தேர்வில் தமிழோடு பிரெஞ்சும் சரிபாதி கலந்திருக்கும் என் விருப்பத்தை என் தந்தையாரிடம் கூறினேன். அவர் கண்டிப்பாக மறுத்து விட்டார். மனச்சோர்வோடு புதுவைக்குத் திரும்பினேன்.

எனக்குப் புகலிடம் அளித்த திருமுடி நடராச செட்டியார் என் மனநிலையைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். அவர் என் மீது மிகுந்த பற்றுடையவர்; தன் பிள்ளைகளில் ஒருவனாக என்னையெண்ணிப் பாதுகாத்தவர். மாலை கல்லூரியிலிருந்து திரும்பி வந்தபோது பரிவாக என்னை அழைத்து நான் நேற்றிலிருந்து கவனிக்கின்றேன் உன் குறும்புத்தனமும் குறுநகையும் காணவில்லையே? என்னடா உனக்குக் கவலை? உன் 'தந்தைக்கும் உனக்கும் தகராறா என்று பரிவாகக் கேட்டார். நான் மறுமொழி ஒன்றும் சொல்லாமல் இருந்து விட்டேன். அவர் இரவு மாடிக்குப் படுக்க வரும்போது வழக்கம்போல் என் அறையை நோட்டம் விட்டார். நான் படிக்காமல் ஏதோ சிந்தித்துக் கொண்டிருக்கிறேன் என்பதை அவர் புரிந்து கொண்டிருக்க வேண்டும். கட்டிலில் படுத்துக்கொண்டே என்னை அழைத்தார். "என்னடா நான் இரண்டு நாட்களாகக் கேட்கிறேன் ஒன்றும் பதில் சொல்லாமல் இருக்கிறாய் என்னிடம் சொல்லக்கூடாதா அவ்வளவு பெரிய இரகசியமோ என்றார்."

அவரது பரிவான சொற்களின் முன் என் நெஞ்சம் நெகிழ்ந்தது. யாவற்றையும் அவருக்கு விளக்கிக் கூறினேன். எனக்குள்ள பிரெஞ்சு மொழியறிவு இத்தேர்வுக்கு அதிகமானதே. ஆனால் தமிழ்மொழியறிவுக்குச் சிறிது முயன்றால் போதும் என்றேன். இதற்காகவா கவலைப்படுகிறாய்; போய்ப் படு! பணம் நான் தருகிறேன்; நாளைக்கே

அத்தேர்வுக்குரிய சான்றிதழ்களைத் தயார் செய் என்றார். நினைத்துப் பார்க்கின் அன்று நான் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லையென்பேன்.

பணம் கட்டும்போது சிறு சிக்கல் ஏற்பட்டது. என் தந்தை நகரமன்றத் தலைவர்முன் கையொப்பமிட்டுச் சான்றிதழ் பெற்றுத்தர வேண்டும். ஆனால் தந்தையிடம் எப்படிக் கூறுவது என்று தயங்கிக் கொண்டிருந்தேன். இந் நிலையில் அதற்கும் அவரே வழி செய்தார். என்னைப் பாதுகாப்பவர் என்ற முறையில் கையொப்பமிட்டுச் சான்றிதழ் வாங்கித் தந்தார். நினைத்துப் பார்க்கின் அப் பெருந்தகையின் பேரன்பிற்கு எனதிருகைக்கூப்பின்றி அவருக்கு நான் எதை ஈடுசெய்ய முடியும்? தேர்வுக்குப் பணம் கட்டி முடித்தேன். அடுத்து தமிழறிவை வளப் படுத்திக் கொள்ளும் வாய்ப்பெண்ணி நடந்தேன்.

பாவேந்தர் மாணவர்கட்கு இலவசமாக இரவில் தன் வீட்டில் தமிழ் வகுப்பு நடத்திக் கொண்டிருந்தார். நானும் அதில் பங்குகொண்டு முறையாகத் தமிழ் பயின்று வந்தேன். பாவேந்தர் கற்பிக்கும் முறையே தனிச் சிறப்புடைய தாகும். நினைத்துப் பார்க்கின் அவர் கற்பித்த முறையும் கருத்தளித்த முறையும் என்னைத் தமிழில் ஈடுபடுத்திக் கொள்ளும் திருப்புமுனையாக அமைந்தது என்று இன்றும் பெருமைப்படுகிறேன்.

முறையே இலக்கண இலக்கியங்களை அவரிடம் நன்கு பயின்றதன் காரணமாக 1934 ஆம் ஆண்டு எழுதிய B.I தேர்வில் வெற்றி பெற்றேன். இதற்காகப் பெரிதும் மகிழ் வடைந்தவர்கள் இருவர். ஒருவர் திருமுடி நடராச செட்டியார். மற்றொருவர் எனதாசான் கவியரசர் பாரதிதாசன். இவர்களை என்றும் என்னால் மறக்க முடியாது. நான் மீண்டும் பிரெஞ்சுப் பட்டதாரியாவதற்கு அக்கல்லூரியிலேயே படித்துக் கொண்டிருந்தேன். ஆனால் எனக்கேனோ தமிழில் ஏற்பட்ட ஈடுபாடு பிரெஞ்சு மொழி யில் ஏற்படவில்லை.

## வாழ்வும் பணியும்

1935 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் என் தங்கை ஆண்டாளின் நன்மைக்காகவும் சிற்றன்னை செல்லம்மாள் அவர்களின் விடாப்பிடித் தூண்டுதலுக்கும் ஆட்பட்டு ஆதிலட்சுமி என்ற உறவுக்காரப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டேன். என் தங்கைக்கும் எனக்கும் ஒரே நாளில் சேலிய மேட்டில் திருமணம் நடந்தது.

என்மனைவி சிற்றூர் எழுதத் தெரியாதாள்
பொன்னைப் பொருளை அறிவாள்: புகழறியாள்
அன்னாளின் ஊக்கம் எனக்கூக்கம் ஆகிடுமோ
பின்னாள் செயலெதுவோ பேச்செடுக்க வேண்டாம்!

இரண்டாண்டுகள் வேலை கிடைக்காமல் தந்தையின் உழைப்பில் உண்டு ஊர் சுற்றிக் கொண்டிருந்தேன். அந் நாளில் எதை மறந்தாலும் தமிழ் இலக்கண இலக்கியத் தொடர்பை மறவாமல் நாட்களைக் கடத்திக் கொண்டிருந் தேன். பாரதிதாசன் பாடல் என்றால் எனக்கு உயிர். அவர் கவிதை நூல்கள் ஒவ்வொன்றையும் பன்முறை படித்து மகிழ்வேன்.

1937 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 15 ஆம் தேதி தற்காலிகத் தமிழாசிரியர் பதவியை முன்னாள் புதுவை நகர மன்றத்தலைவர் மறைந்த இரத்தினவேலுப் பிள்ளைஎனக்கு வாங்கித் தந்தார். நான் முதலில் ஆசிரியப் பணியைத் தொடங்கியது உழவர் கரை பேட்டில் ஆகும். அப்பொழுது எனக்கு ஊதியம் 25 ரூபாய். அன்றைய விலைவாசியில் அதிலேயே மாதம் ரூபாய் பத்து மிச்சம் பிடிக்கலாம். நினைத்துப் பார்க்கின் அன்றைய விலைகளுக்கு இன்றைய விலைகள் தாறுமாறாய் ஏறியுள்ளன.

ஒன்பது மாதத்திற்குப் பின் அதாவது 24-9-1937 இல் நுழைவுத் தேர்வு (Concours) வந்தது. அந்நாட்களில்

இன்று போன்று பத்துத் திங்கள் B. T. பயிற்சியோ இரண்டாண்டுகள் ஆசிரியப் பயிற்சியோ இல்லை. இரண்டாண்டுகள் ஆசிரியர்கள் வகுப்பு நடத்தி முடிப்பதோடு எழுத்து, வாய்மொழித் தேர்வு மற்றும் அரை நாள் வகுப்பு மேற்பார்வைக்குப் பின்னரே B. Tக்குச் சமமான C. A. P. தேர்வில் வெற்றிபெற வேண்டும். அதன் பின்னரே ஊதிய உயர்வுகள் கிடைக்கும். அப்பொழுதெல்லாம் ஆசிரியர் பயிற்சிக்குத் துணை புரியும் தமிழ் நூல்களே கிடையாது. பிரெஞ்சு நூல்களைக் கற்றே தமிழில் விடை எழுத வேண்டும்.

இந்த C. A. P. ஆசிரியப் பயிற்சித் தேர்வில் 1940 ஆம் ஆண்டு வெற்றி பெற்றேன். பல ஊர்களுக்கு மாற்றலாகி என் ஆசிரியப் பணி நடந்துகொண்டே இருந்தது. இந்த நாட்களில்தான் கவிதை எழுத வேண்டும் என்ற உணர்வும் தமிழ் இலக்கியங்களைப் பயில வேண்டும் என்ற வேட்கையும் மன்றங்களில் இலக்கியச் சொற்பொழிவு ஆற்ற வேண்டும் என்ற துடிப்பும் ஏற்பட்டது. எனக்கென்னவோ பாரதிதாசன் நூல்களில்தான் தனிவெறி. அவரது நூல்களைப் பலமுறை திரும்பத் திரும்பப் படித்து மகிழ்வேன். அவரைப்போல எளிய நடையில் இனிய பாடல்கள் எழுத வேண்டுமென்ற உணர்வால் உந்தப்படுவேன். நினைத்துப் பார்க்கின் அந்நாட்களெல்லாம் பசுமையான நாட்களாகவே எனக்குத் தோன்றுகின்றன. 1942 ஆம் ஆண்டு முதல் 1944 ஆம் ஆண்டு வரை புதுவையை அடுத்த இரெட்டியார் பாளையத்தில் ஆசிரியப்பணி புரிந்து கொண்டிருந்தேன்.

அப்பொழுது மதுரையிலிருந்து கோ. தா. சண்முக சுந்தரம் என்பவரை ஆசிரியராகக் கொண்டு ஆதித்தனாரால் நடத்தப்பட்ட "தமிழன்" என்ற திங்களிதழ் வெளி வந்து கொண்டிருந்தது. அதில் பாரதியார் பிறந்த நாளுக்காக—"பாரதி நாள் இன்றடா பாட்டிசைத்து ஆடடா" என்ற பாடலை "பாரதி நாள்" என்ற தலைப்

யில் எழுதியிருந்தேன். அப்பாடலே நான் எழுதிய முதற் பாடலாகும், என் விருப்பப்படி பாடல் வெளிவந்தது. ஆசிரியரிடமிருந்து பரிசு ரூ 10ம் பாராட்டுக் கடிதமும் வந்தன. என் புகைப்படமும் வாழ்க்கைக் குறிப்பும் கேட்டு எழுதியிருந்தார் ஆசிரியர். மறுவெளியீட்டில் என் புகைப் படமும் வாழ்க்கைக் குறிப்பும் வந்தது. அதோடு "இவர் பாடல் எளிமையும் இனிமையும் மிகுந்தன; ஏதோ ஓர் இலட்சிய வெறியில் பாடுகிறார்; இவர்க்கு நல்ல எதிர் காலம் உள்ளது." என்ற தமிழன் ஆசிரியரின் பாராட்டுரை யும் வந்தது.

முதற் பாட்டுக்குக் கிடைத்த பாராட்டு என்னை மேலும் தமிழனில் தொடர்ந்து பாட்டெழுதும் துணிவைத் தந்தது ரங்கசாமி என்ற என் இயற்பெயரின் முதலெழுத்தை யும் கடைசி எழுத்தையும் சேர்த்து "ரமி" என்ற புனை பெயரில் 'தமிழனில் தொடர்ந்து பாட்டெழுதலானேன். தமிழன் ஆசிரியருக்கு ரமி என்ற புனை பெயர் பிடிக்காமற் போய் "வாணிதாசன்" என்ற புனைபெயரில் எழுதுங்கள் என்று அன்புக் கட்டளையிட்டார்.

பாரதிதாசன், வாணிதாசன் — பலமுறை இச்சொற் களைச் சொல்லிப் பார்த்தேன். ஆசிரியர் பெயர் பாரதிதாசன்; மாணவர் பெயர் வாணிதாசன்; பாரதியும் வாணியும் கலைமகளைக் குறிக்கும் சொற்கள்தாமே. வாணிதாசன் என்ற புனைபெயரை ஏற்றுக் கொண்டு தமிழன் ஆசிரியரின் விருப்பத்தை நிறைவேற்றுவதென முடிவு செய்தேன். அன்று முதல் வாணிதாசன் என்ற பெயரே எனக்கு நிலைத்து விட்டது. எனது பாடல்களைத் தமிழன் பத்திரிகைக்குப் பிறகு 'பொன்னி', 'காதல்', முதலான பத்திரிகைகள் வெளியிட்டு வந்தன. திராவிட நாடு, முத்தாரம், முரசொலி, மன்றம், குயில் போன்ற பல ஏடுகளில் எழுதியுள்ளேன். நான் அதிகமாக எழுதியது புதுக்கோட்டை பொன்னி ஏட்டில் என்பதை என்னால் மறக்கமுடியாது. பாராட்டுக் கடிதங்கள், ஊக்கக் கடிதங்

கள் பலரிடமிருந்து கிடைத்துக் கொண்டிருந்தன. நினைத்துப் பார்க்கின் அன்றைய மனப்போக்கு வேறு. இன்றைய மனப்போக்கு வேறு. அன்று கவிஞனைப் பாராட்டினார்கள் பரிசளித்தார்கள். இன்றோ கவிதை எழுதக் கேட்டு மலரை அழகுபடுத்தி விற்கின்றனர். கவிஞனைக் கடைக்கண்ணால் கூடப் பார்ப்பது கிடையாது.

நான் புதுவைக்கு அண்மையில் பணிபுரிந்த காரணத்தால் கவியரசரிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. சீர்திருத்த எண்ணங்கள் அவர் தொடர்பால் ஏற்பட்டுத் தழைத்தன. அவர் நடத்தி வைக்கின்ற தமிழ்த் திருமணங்கட்கெல்லாம் நானும் அழைத்துச் செல்லப்படுவேன். திருமணமானவன் என்ற காரணத்தால் நானும் மணமக்களைப் பாராட்டி வாழ்த்துவேன். ஆன்ற தமிழிலக்கிய மேற்கோள் காட்டி மணமக்களை வாழ்த்துவேன். என் தமிழறிவைக் கேட்டுப் பாவேந்தர் பூரித்துப் போவார். திருமண விருந்தில் அவர் பக்கத்திலே உட்கார்ந்து கொள்ளச் சொல்வார், என் மீது அவருக்கு அவ்வளவு பரிவு உண்டு. அவர் நடத்திய திருமணங்களில் நான் கலந்து கொள்ளாததே கிடையாது. அடிக்கடி அவர் வீட்டுக்குச் செல்வேன். நான் எழுதும் பாடல்களைக் காட்டுவேன். சில திருத்தங்கள் செய்து தருவார். அவர் திருத்திய படிகளை இன்றும் நான் உயிரினும் மேலாகப் போற்றி வருகிறேன்.

பாவேந்தர் ஒருமுறை 'உனக்கு எளிய முறையில் எழுத வருகிறது. ஆனால் நடை படியவில்லை. என் கவிதைகளைப் படித்து வா' என்று கூறினார். அன்று அவர் கூறியது இன்றும் எவ்வளவோ பயனுடையதாகவே தெரிகிறது. மறைந்த பாவேந்தர் என்னிடம் நேரில் சொல்லாமல் மற்றவரிடம் என்னைப் பலப்பல பாராட்டி எனக்கு ஆர்வமூட்டி வந்தார்.

ஒன்றரை ஆண்டுக்குப்பின் அதாவது 1944 ஆம் ஆண்டு காரைக்காலுக்கு மாற்றப்பட்டேன். என்னோடு ஆசிரியர்

சிவ. கண்ணப்பா அவர்களும் மாற்றப்பட்டார். இங்கு ஒன்றை நான் அவசியம் குறிப்பிட்டாக வேண்டும். அவர் தந்தை சிவகுருநாதன் புதுவை இலப்போர்த் பெண்கள் பாடசாலையில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து வந்தார். பாடசாலை நூலகத்திலிருந்து சங்க கால இலக்கண இலக்கிய நூல்களை அவர் வாயிலாகப் பெற்று தமிழறிவை வளர்த்துக் கொண்டேயிருந்தேன்.

காரைக்காலில் பல இலக்கிய நிகழ்ச்சிகளில் பல தமிழறிஞர்களோடு நானும் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவேன். கற்றறிந்த அறிஞரோடு நாமும் கலந்து கொள்கிறோமே என்ற பயம் எனக்கு ஏற்பட்டதேயில்லை. துணிவோடு கலந்து கொள்வேன். இரவில் காரைத் தமிழன் பர்களும் நானும் தொல்காப்பிய அறிவைப் பகிர்ந்து கொள்வோம்.

பலர் என் சொற்பொழிவைப் பாராட்டினர். என் போல் பணிபுரிந்த தமிழாசிரியர் சிலர் இவரென்ன தமிழில் பெரிய பட்டதாரியா? எங்களைப் போல் B. T. தானே என்று குறை கூறியதுண்டு.

தமிழ்ப்பட்டதாரி வித்வானுக்குரிய தமிழறிவை நான் வளர்த்துக் கொண்டிருந்ததென்னவோ உண்மை, ஆனால் அவர்கள் கூறுவது போல் வித்துவான் பட்டம் நான் பெற வில்லையே என்ற ஏக்கம் என்னை உறுத்திக் கொண்டே யிருந்தது.

பல ஏடுகளுக்கும் நான் கவிதைகள் எழுதிக் கொண் டிருந்தாலும் காஞ்சியிலிருந்து அறிஞர் அண்ணாவால் நடத்தப்பட்ட திராவிட நாடு இதழுக்கு எழுத வேண்டு மென்ற எண்ணம் காரைக்காலில் பணிபுரியும்போதுதான் ஏற்பட்டது. "விதவைக்கொரு செய்தி" என்ற தலைப்பில் நான்கு வெண்பாக்கள் எழுதி திராவிட நாடு இதழுக்கு அனுப்பியிருந்தேன். அன்றிருந்த நிலையில் என்பாடல் வெளியிடப்படுமோ என்னவோ என்ற அய்யமே என்னுள்

இருந்தது. ஆனால் என்பாடல் உடனே திராவிட நாடு முகப்பட்டையில் வெளிவந்திருந்தது. அண்ணாவின் பாராட்டும் தொடர்ந்து எழுதுமாறு கடிதமும் வந்தன.

நினைத்துப் பார்க்கின் நான் அன்றடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. தொடர்ந்து திராவிட நாடு, விடுதலை, புதுக்கோட்டையிலிருந்து வெளி வந்த பொன்னி முதலிய ஏடுகளுக்கு எழுதிக் கொண்டிருந்தேன்.

1945 ஆம் ஆண்டு பாகூர்ப் பாடசாலைக்குக் காரைக் காலிலிருந்து மாற்றப்பட்டேன். என்னுள் தமிழ்ப் பட்ட தாரியாக ஆக வேண்டும் என்ற எண்ணமும் தொடர்ந்து வளர்ந்து கொண்டேயிருந்தது. தமிழாசிரியராகப் பணி புரிந்தால் தொடர்ந்து Entrance, Preliminary, Final ஆகிய தேர்வுகளை எழுதலாம் என்பதோடு கல்லூரியில் பயிலாமல் வீட்டில் பயின்றே தேர்வெழுதலாம் என்ற சலுகையும் இருந்தது. நான் ஒரே மூச்சில் இரவோடு இரவாகக் கண் விழித்துப் பயின்று ஆண்டிற்கு ஒரு தேர்வு என எழுதி 1948 ஆம் ஆண்டு வித்துவான் பட்டம் பெற்றேன். அன்றிருந்த பிரெஞ்சு அரசாங்கம் வித்துவான் பட்டம் பெற்ற தமிழாசிரியர்கட்கு ரூபாய் 10 ஊதியத் தோடு கூட்டிக் கொடுத்தும் வந்தது. பட்டதாரியானது, ரூபாய் பத்து கூடுதல் ஊதியம் பெற்றது ஆகிய இரட்டைப் பயனை அத்தேர்வில் நான் பெற்றேன்.

நான் வித்துவான் பட்டதாரி என்ற காரணத்தாலும் பிரெஞ்சு மொழி கற்றுள்ளேன் என்ற காரணத்தாலும் நான் பயின்ற கல்வே கல்லூரிக்கே 1948 ஆம் ஆண்டு தமிழ்ப் பேராசிரியராக மாற்றப்பட்டேன். அங்கே நான் கிட்டத்தட்ட மூன்றாண்டுகள் பணிபுரிந்தேன். நினைத்துப் பார்க்கின் அந்த மூன்றாண்டுக் காலமே என்னை இன்றுள்ள கவிஞன் நிலைக்கு மேம்படுத்திய பொற்கால மாகும். அந்த மூன்றாண்டுக் காலத்தில் கருத்து வேற்றுமை யால் நான் பல தொல்லைகள் அடைந்தாலும் முன்னேற்றம் அடைந்ததே அதிகமென்பேன்.

பின்னர் நான் பல ஊர்களுக்கு மாற்றலாகி ஆசிரியப் பணி புரிந்தேன் என்றாலும் எங்கும் மனைவி மக்களை அழைத்துக் கொண்டு போய்க் குடும்பம் நடத்திய தில்லை. என் தந்தை அரசாங்க வேலையிலிருந்து ஓய்வு பெற்று சொந்த வில்லியனூர் வீட்டை இழந்து முடக்குவாத நோயோடு சேலியமேட்டிற்கே குடி பெயர்ந்தார்.

எனக்குத் தாயூரும் பாட்டியூரும் சேலியமேடே ஆகும். அவ்வூரிலேயே என் இளமைக் காலத்தைக் கழித்தேன். அங்கே நான் ஒரு குடிசை வீட்டை விலை பேசி வாங்கிக் குடும்பம் நடத்தி வந்தேன். வழக்கம் போலவே புதுவையிலுள்ள உணவு விடுதியிலேயே உண்டு பணி புரிந்து வந்தேன். விடுமுறை நாட்களில் சேலியமேடு வந்து போவேன்.

கல்லூரி ஓய்வு நேரங்களில் பாரதிதாசன் மகன் மன்னர் மன்னன் (கோபதி) நடத்தி வந்த கடையிலும் பாவேந்தர் வீட்டிலுமே பொழுதுபோக்குவேன். அந்த நாட்களெல்லாம் எனக்கு எவ்வளவோ பயனுள்ள நாட்களாக இருந்தன. நினைத்துப் பார்க்கின் அந்த நாட்கள் தான் என் தமிழறிவையும் கவிதையாக்கும் திறனையும் வளர்த்தன என்று கூறவேண்டும், அதற்குப் பெருந்துணை புரிந்தவர் எனதாசான் கவியரசர் பாரதிதாசனே யாவார்.

28—5—1950 இல் கோயமுத்தூரில் பெத்தாம் பாளையம் பழனிசாமி பலர் கூட்டுறவோடு முத்தமிழ் மாநாடு மூன்று நாட்கள் நடைபெற ஏற்பாடு செய் திருந்தார். அந்நிகழ்ச்சியில் மறைந்த நாவலர் சோம சுந்தர பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன், அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், என்.எஸ். கிருஷ்ணன், மதுரம், கே. ஆர். இராமசாமி போன்றோர் கலந்து கொண்டனர். இரவில் ஒவ்வொரு நாளும் நாடகம் நடைபெறும் கழகத் தோழர்களும் தலைவர்களும் பங்கேற்று நாடகம் நடத்தினர். ஒவ்வொரு நாடகத்திலும் அறிஞர்

அண்ணா பங்கேற்று நடித்த வேடத்தை நினைத்துப் பார்க்கின் அண்ணாவின் ஒப்பனையும் (வேடப் பொருத்தம்) நடிப்பும் என் மனதில் பசுமரத்தாணியெனப் பதிந்துவிட்டன.

மாநாட்டிற்குப் பாவேந்தர் அவர்களே தலைமை தாங்கினார்கள். அந்த மூன்று நாட்களில் ஒரு நாள் கவியரங்க நிகழ்ச்சியும் நடைபெற்றது. இப்பொழுதெல்லாம் எதற்கெடுத்தாலும் நடைபெறுகின்ற கவியரங்கத்தைப் போன்றதல்ல அது. அழகின் சிரிப்பு என்ற ஒரே தலைப்பை முன்கூட்டித் தந்திருந்தனர். ஒரே தலைப்பில் பல கவிஞர்களும் பாட்டெழுதிக் கொடுக்கவேண்டும். அப்பாடல்களில் ஆய்வாளர்கள் சிறந்த பாடல்களைத் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்குவர். மாநாட்டு மன்றத்தில் பாடச் செய்வர். நானும் அக்கவியரங்கில் பங்கு பெற்றேன். வெள்ளிக் கிண்ணப் பரிசும் பாராட்டும் பெற்றேன்.

நினைத்துப் பார்க்கின் மாநாட்டுக்குச் சென்ற பாவேந்தர் அவர்கட்குத் துணையாக நான் சென்றதையும் அவரோடு ஜி. டி. நாயுடு இல்லத்தில் தங்கியிருந்ததையும் அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளையும் எழுத பல ஏடுகள் போதா என எண்ணுகிறேன். ஆனால் ஒன்றை மட்டும் என்னால் குறிப்பிடாமல் இருக்க இயலவில்லை. அதாவது ஜி. டி. நாயுடு வீட்டில் நாங்கள் தங்கியிருந்தபோது எட்டயபுர அரச குடும்பத்தைச் சேர்ந்த பெருஞ்செல்வர் இருவர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களை அழைத்துப் போக வந்திருந்தனர். அவர்கள் உரையாடிக்கொண்டிருந்த போது பாரதியாரைப் பற்றிய பேச்சு வந்தது. பாவேந்தர் அவர்கள் பாரதியார் பாடலை பாரதியார் போலவே உணர்ச்சி மேலிடப் பாடிக் காட்டினார். நான் பாரதியாரைப் பார்த்ததில்லை. ஆனால் பாவேந்தர் பாடியபோது அவரது உணர்ச்சி மிகுந்த பாடலும் தோற்றமும் பாரதியாரைப் படம்பிடித்துக் காட்டின.

## படைப்பும் பதிப்பும்

நான் வித்துவான் தேர்வு எழுதுமுன்னரே பல தமிழ்க் கவிதைகளோடு பிரெஞ்சு மொழி இலக்கியங்களில் சில வற்றைத் தமிழில் மொழி பெயர்ப்புச் செய்திருந்தேன். குறிப்பாக 'விக்டர் வியுகோவால்' பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்ட 'ஆஞ்ஜெலோ' என்ற நாடகம் 'காதல் உள்ளம்' எனும் பெயரில் தமிழாக்கம் செய்யப்பெற்று 'கலை மன்றம்' இதழில் முழுவதும் தொடர்ந்து வெளி யிடப்பட்டது. அடுத்து மாப்பாசானின் சிறுகதை யொன்றை 'பெரிய இடத்துச் செய்தி' என்ற பெயரிலும் நெடுங்கதையொன்றை 'வாழ்க்கை' என்ற பெயரிலும் மொழிபெயர்த்து ஏடுகளில் வெளியிட்டு வந்தேன். தொடர்ந்து சிறுகதை எழுதும் ஆசைகூட எனக்கு அப் போது எழுந்ததுண்டு. நினைத்துப் பார்க்கின் அந்தப் போக்கில் என்னை]ஏனோ நான் மாற்றிக் கொள்ளவில்லை. மாற்றிக்கொண்டிருந்தால் வளமான வாழ்வை அடைந் திருக்கலாம். கதைக்கு இருக்கின்ற ஆர்வம் கவிதைக்கு இன்று நாட்டில் இல்லை.

கலப்புத்திருமணம் செய்துகொண்டு சென்னையி லுள்ள மண்ணடி காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்த என் உறவினர் பட்டாக்கத்தி இராமசாமி என்பவரில்லத் திலும் என் கெழுதகை நண்பர் ந. அறிவழகன் தங்கியிருந்த பாரி நிலையத்திலும் வித்துவான் தேர்வெழுதச் செல்லும் போதெல்லாம் தங்குவது வழக்கம். சென்னைத் தொடர் பால் பல அரிய நண்பர்கள் எனக்கின்றும் உள்ளனர். அதில் குறிப்பிடத் தக்கவர்கள் வித்துவான் ந. அறிவழகன், புலவர் தில்லை. தா. அழகுவேலனார், செந்நீர்க்குப்பம் ஆசிரியர் செங்கல்வராயன் முதலியோராவர்.

ஆசிரியர் செங்கல்வராயனோடு மாமல்லபுரம் சென்றிருந்தேன். பல்லவர்கள் சிற்பக்கலைக் களஞ்சிய மான மாமல்லையைச் சுற்றிப்பார்க்கப் பார்க்கப் பல

விசித்திரமான எண்ணங்கள் தோன்றின. பல அறை குறைச் சிற்பங்களின் காரணம் என்னவாக இருக்கக் கூடும் என்ற வினா என்னுள் எழுந்தது. அதன் விளைவே நான் எழுதிய "கொடிமுல்லை" என்ற கவிதை நூலாகும்.

உழைக்கின்ற அரிசனங்கள் வாழ்கின்ற சேரி பெரும் பாலும் சிற்றூர்களை யொட்டியே இருப்பதைக் காண லாம். நான் சேலியமேடு என்கின்ற சிற்றூரில் என் இளமைக் காலத்தைக் கழித்தவனாகையால் விளையாட் டாகச் சேரிக்கு அடிக்கடி போவேன். அவர்கள் வாழ்க்கை முறையைக் கண்டு பல முறை வாடியதுண்டு. நினைத்துப் பார்க்கின் இன்றுகூட அவர்கள் நிலை மேம்பாடடைந்த தாக எனக்குத் தோன்றவில்லை. அவர்கள் நிலையினை எண்ணியெண்ணி அவர்கள் நிலை உயரவேண்டுமென்கின்ற வேட்கையால் எழுந்ததே "தமிழச்சி" எனும் நூல்.

தமிழச்சி, கொடிமுல்லை ஆகிய இரு கவிதை நூல் களும் நான் வித்துவான் தேர்வு எழுது முன்னரே எழுதப் பட்டவையாகும். இவ்விரு நூல்களையும் வெளியிடுமாறு பல பதிப்பகங்கள் ஏறியேறி எனக்கும் என் அருமை நண்பர்களுக்கும் கால்கள் அலுத்து விட்டன. நினைத்துப் பார்க்கின் அன்று நான் மக்களிடையே அதிக விளம்பரம் ஆகாத கவிஞன். பதிப்பகத்தார் வரவு செலவு பார்க்கின்ற பண்பாளர்கள். என் நூலை வெளியிட அவர்கள் தயங்கிய தில் புதுமையில்லை.

என் நூலை வெளியிடச் செய்யும் முயற்சியில் நான் தளரவில்லை. தொடர்ந்து பதிப்பகப் படிகள் ஏறிக் கொண்டேயிருந்தேன். இறுதியாக நான் தொடர்ந்து எழுதி வந்த புதுக்கோட்டைப் பொன்னியின் ஆசிரியர் முருகு சுப்பிரமணியன் (இன்று இவர் மலேசியா தமிழ் நேசன் பத்திரிகையாசிரியர்) அவர்களின் உதவியால் புதுக்கோட்டைச் செந்தமிழ்ப் பதிப்பகத்தார் என் இரண்டு நூல்களையும் வெளியிட முன் வந்தனர். அவற்றுள்ளும் நான் தொடக்கத்தில் எழுதிய கொடி முல்லையை விட்டுப் பின்னர் எழுதிய தமிழச்சியை 1949

ஆம் ஆண்டு வெளியிட்டனர். நூலுக்கு நல்ல பாராட்டு தல்கள் கிடைத்ததால் 1950 ஆம் ஆண்டு கொடிமுல்லை என்ற நூலையும் வெளியிட்டனர். அவர்கள் என் நூல் களைத் தொடர்ந்து வெளியிடுவதாக இருந்தனர். பொன்னி ஏடு புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு மாற்றப் பட்டுச் சீரழிவுற்றது.

மாப்பாசானின் சிறுகதையொன்றைப் "பெரிய இடத்துச் செய்தி" என்ற பெயரில் பிரெஞ்சு மொழியி லிருந்து தமிழில் மொழிபெயர்ப்புச் செய்திருந்தேன். அதை 1951 ஆம் ஆண்டு சென்னை செல்வ நிலையத்தார் நண்பர் அறிவழகன் தூண்டுதலால் வெளியிட்டுதவினர்.

அடுத்து என்னால் எழுதப்பட்ட இசைப்பாட்டு நூல் "தொடுவானம்". அதை வேலூர் திராவிடன் பதிப்பக உரிமையாளர் கிருஷ்ணன் வெளியிட்டுதவினார். தொடர்ந்து என் நூல்களையெல்லாம் வெளியிட இருந் தார். நினைத்துப் பார்க்கின் வறுமை அவர்களையும் தொடர்ந்து விட்டது போலும். முன் கூறிய செந்தமிழ்ப் பதிப்பகம், செல்வம் பதிப்பகம், திராவிடன் பதிப்பகம் ஆகிய மூன்றும் சீரழிந்தன.

பாவேந்தர் பாரதிதாசன் நூல்களை வெளியிட்டுக் கொண்டிருந்த முல்லைப் பதிப்பகத்தின் பங்குதாரர் செல்லப்பச் செட்டியார் தனது உறவுத் தம்பி ந. பழனியப்பனோடு கூட்டுச் சேர்ந்து பாரி நிலையம் நடத்திக் கொண்டிருந்தார். சென்னை செல்லும் போதெல் லாம் பாரி நிலையத்தில் தங்கும் வாய்ப்பு ஏற்பட்டதால் பங்குதாரர் ந. பழனியப்பனோடு நெருங்கிய நட்பு ஏற்பட்டது.

பாரி நிலையத்திலிருந்து பங்குதாரர் ந. பழனியப்பன் பிரிந்து தன் சகலையோடு கூட்டுச் சேர்ந்து மலர் நிலையம் என்ற பதிப்பகத்தை நடத்திக் கொண்டிருந்தார். அவர் 1954 ஆம் ஆண்டு என்னால் எழுதப்பட்ட "எழிலோவியம்" என்ற நூலை மலர் நிலையம் வாயிலாக வெளியிட்டார்.

அந்நூலுக்குத் தமிழ்த் தென்றல் திரு. வி. க. சென்னைத் தமிழாசிரியர் மன்றத் தலைவர் தமிழ்த்தாத்தா மயிலை சிவமுத்து, பேராசிரியர் நாவலர் பசுமலை சோமசுந்தர பாரதி, முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதன் முதலியோர் நல்ல பாராட்டுதலை வழங்கியிருந்தனர்.

எழிலோவியம் எனக்கு நல்ல புகழையும் பெயரையும் மக்களிடையே உண்டாக்கித் தந்தது. 1954 ஆம் ஆண்டு மலர் நிலையம் என் கவிதைகளைத் தொகுத்து "வாணிதாசன் கவிதைகள்" என்ற நூலை வெளியிட்டது.

பாரிநிலையம் ஏற்பட்டது போல மலர் நிலையம் பிரிந்து வள்ளுவர்பண்ணை ஆயிற்று. அப்பெயரில் ந. பழனியப்பன் நூல் வெளியீடு செய்து வந்தார். அவர் "தீர்த்த யாத்திரை", "இன்ப இலக்கியம்", "குழந்தை இலக்கியம்" ஆகிய மூன்று நூல்களையும் 1959 இல் வெளியிட்டுதவினார். அதன்பின் அவருக்கும் எனக்கும் சிறு தகராறு காரணமாகத் தொடர்பற்று விட்டது. நினைத்துப் பார்க்கின் அந்தநாட்களெல்லாம் என் புகழ் ஓங்கிக் கொண்டிருந்த நாட்களாகும்.

திருச்சி அன்பக வெளியீட்டார் நான் பொங்கல் மலர்களுக்கு எழுதிய பொங்கல் வாழ்த்துப் பாடல்களைத் திரட்டி 1959 ஆம் ஆண்டு "பொங்கற் பரிசு" என்ற நூலை வெளியிட்டனர்.

வள்ளுவர் பண்ணையில் வேலை செய்து கொண்டிருந்த தா. முருகைய முதலியார் உறவினர் பலரோடு கூட்டுச் சேர்ந்து மனோன்மணி புத்தக நிலையத்தைச் சென்னையில் ஏற்படுத்தினார். அதிலிருந்து "சிரித்த நுணா", "இரவு வரவில்லை", "பாட்டுப் பிறக்குமடா" ஆகிய நூல்கள் 1963 ஆம் ஆண்டு வெளிவந்தன.

"இனிக்கும் பாட்டு", "எழில் விருத்தம்", "பாட்டரங்கப் பாடல்கள்" ஆகிய மூன்று நூல்களும் பாரி நிலையத்தின் வாயிலாக முறையே 1965, 1970, 1972 ஆகிய ஆண்டு

களில் வெளிவந்தன. தொடக்கத்திலிருந்தே பாரியின் புகழ் போல் பாரி நிலையம் சீரும் சிறப்பும் பெற்று வருகிறது. நினைத்துப் பார்க்கின் நான் சந்தித்த வெளியீட்டுரிமை யாளர்களுள் பண்பும், நேர்மையும் எளிமையும் நனிமிகுந்த வர் பாரி செல்லப்பச் செட்டியார் அவர்கள் என்று சொல்லிக் கொள்வதில் நான் பெருமைப் படுகின்றேன்.

நான் பல்வேறு கவியரங்குகளில் பங்கு கொண்டுள் ளேன். முப்பது கவியரங்குகளில் பாடிய பாடல்களின் தொகுப்பே "பாட்டரங்கப் பாடல்கள்" என்னும் நூலாகும். நினைத்துப் பார்க்கின் என்னைப் பெரிதும் ஊக்கியதும் பலர் பாராட்டைப் பெற்றதுமான பல கவியரங்கப் பாடல் கள் இன்றும் என் மனதில் மகிழ்ச்சியை ஊட்டிக்கொண்டே யிருக்கின்றன.

உட்கிடக்கையும் உணர்வும்

14—1—1952 இல் திருச்சி வானொலி நிலையத்தார் 'பொங்கல் விழா' கவியரங்கிற்கு என்னை அழைத்திருந் தார்கள். கவியரங்கிற்கு மறைந்த சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். "வாழ்க இளம் பரிதி" என்ற தலைப்பில் நான்பாடினேன்.

ஆசை மனையாட்டி! அன்பே இதைக்கேள்நீ!
மூசையிலே வைத்தெடுத்த பொன்னே முளித்தகதிர்
நீர்நிலங்கள் விண்ணை நிலைத்த பொருளையெலாம்
ஆட்டிப் படைப்பதுவும் ஆக்கம் விளைப்பதுவும்
வானம் முளைத்து வரும்பரிதிச் செய்கையடி

இல்லம் புதுக்கி எழில்புதுக்கி நீராடி
அல்லொத்த கூந்தல் அழகைப் பெருக்க
நறுநெய் தடவுக நன்றாக வாரிமுடி
புத்தாடை பூண்நீ மலர்சூடு நம்வீட்டுச்
சொத்தாம் குழந்தைகளைத் தூய்மைப் படுத்துகவே!

கூப்பிடு வாழ்வோர் அனைவரையும் கூப்பிடடி
காப்பெதற்கு கார்தந்த செல்வம் விளைபொருள்கள்
சாப்பாட்டைத் தேக்காதே சண்டை அதன்விளைவாம்
பங்காக்கி உண்போம் பசியேது பின்னாட்டில்?

கொண்டுவா யாழைக் குழந்தைகளைப் பாடவிடு
பண்டைத் தமிழ்வீரம் பாடட்டும் கேட்போம்
அரசர் மடிமேல் அரும்புலவர் செந்நாவில்
ஓங்கி வளர்ந்த உயர்தமிழைப் பாடட்டும்

ஊனுயிரை மக்கள் உணர்வை வளர்த்துவரும்
தேனாம் செந்தமிழைப் பாடட்டும் கேட்போம்
உனது குரலினிமை உன்மக்கள் சொல்லில்
கனிந்துளது ஆதலினால் கண்மணிகள் பாடட்டும்

இதுபோன்ற கவிதைச் சொற்றொடர்களைக் கேட்ட போதெல்லாம் தலைவர் சர். ஆர். கே. சண்முகம் செட்டியாரவர்கள் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். கவிஞர் வாணிதாசன் தமிழ்வெறியில் பாடுகிறார் எனப் பாராட்டினார்கள்.

நினைத்துப் பார்க்கின் நான் ஒன்பது கவியரங்கங்கட்குத் தலைமை ஏற்றுள்ளேன். சென்னையில் பூம்புகார்த்திடலில் இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. கவியரங்கிற்கு நான் தலைமையேற்றேன் என்பது குறிப்பிடத்தக்கது. மாபெரும் மக்கள் வெள்ளத்திடையே ''தமிழன்'' என்ற தலைமைக் கவிதையைப் பாடினேன்.

கிடைத்ததை உண்டே கிடப்பது வாழ்வின்
மடத்தனம் என்றே மனதில் நினைத்தான்
மனையறம் கண்டான்; மனைக்குறு மாட்சி
தனிமகள் கண்டான்; தழைத்தது வாழ்க்கை

அறிவைத் துணைக்குப் பலநாள் அழைத்தான்
நெறியை உணர்த்தி நெடும்புகழ் நாட்டிக்
கடலினைத் தாண்டிக் கயல்புலி வில்லை
இடமகல் அண்டையர் நாட்டின் இடையிலும்
நட்டான் தமிழன் மெய்ச்சீர்த்தியை நட்டானே!

வெற்பைக் குடைந்தெடுத்தே மேன்மை அழகுதரு
சிற்பம் படைத்தான் திகழோவியம் அளித்தான்
கார்வானை முட்டும் கலைகொழிக்கும் கோபுரமும்
தேரும் செழுந்தாது பொற்சிலையும் கண்கவரும்
ஊரும் தெருவும் உணவூட்டும் நன்செய்க்கே
ஏரியும் தாங்கலும் ஈந்தோன் தமிழனன்றோ?
கோட்டையும் கொத்தளமும் சூழுக்கே ஏங்காநல்
நாட்டையும் கண்டவன் நற்றமிழன் ஆகானோ?

சங்கம் வளர்த்தான் தமிழ்வளர்த்தான் சான்றோர்க்கே
எங்கும் பொருளை இறைத்தளித்துக் காத்தவன் யார்?
மங்காப் பெரும்புகழ்சேர் மாத்தமிழன் கற்றளி
எங்கும் கிடைக்கிறதே என்னஇதன் பொருளாம்?

பூம்புகார்த் திடலில் மக்கள் வெள்ளத்தின் மகிழ்ச்சி ஆரவாரமும் கைத்தட்டலும் இன்று நினைத்தாலும் என் மெய் சிலிர்க்கிறது.

## புகழ்வும் நெகிழ்வும்

நினைத்துப் பார்க்கின் எவ்வளவோ நிகழ்ச்சிகள் என்கண்முன் நிழலாடுகின்றன. 18—6—72 தென்னாற்காடு தமிழ்க் கவிஞர் மன்றம் எனக்குப் புதுவை நகர மன்றத்தில் பாராட்டு விழா எடுத்தது. அவ்விழாவை முன்நின்று நடத்திய பெருமை மன்றச் செயலாளர் என் கெழுதகை நண்பர் கவிஞர் க. பொ. இளம் வழுதியைச் சாரும். இவ் விழாவில் எனக்குக் கவிஞரேறு என்ற பட்டமும் வெள்ளிக்

கேடயமும் தந்து பாராட்டினர். விழாவில் தமிழக அறிஞர்களும் புதுவை அமைச்சர்களும் பங்கு கொண்டனர்.

புதுவைத் தமிழ்ச் சங்கமும் என்னைப் பாராட்டத் தவறவில்லை. அது புதுவை நகர மன்றத்தில் 6—5—'73இல் பாவலர்மணி என்ற பட்டத்தையும் வெள்ளிக் கேடயத்தையும் எனக்களித்து என்னைப் பாராட்டிச் சிறப்பித்தது. விழாவில் புதுவை அமைச்சர்கள் நகரத் தந்தை குபேர் முதலியோர் பங்கேற்று என்னைப் பாராட்டினார்கள். நினைத்துப் பார்க்கின் இவையெல்லாம் என் தமிழ்க் கவிதைகட்குக் கிடைத்த பரிசென்றாலும் எனக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து தமிழ் அறிஞர்களில் பலர் எனக்களிக்கப்பட்ட பாராட்டைக் கண்டு களிக்காமல் அமரர் ஆயினரே என்ற ஏக்கமே என்னுள் குடிகொண்டுள்ளது. சிறப்பாக எனதாசான் பாவேந்தர்; தமிழ் மக்கள்... ஆசான். அவர்,

வீழ்ச்சியுற்ற தமிழருக்கு வலியூட்டும் குன்றம்
மெல்லியரின் வாழ்விற்கு புரட்சிவழிப் பாட்டை
சூழ்ச்சியினால் வளர்ந்தமதக் கோட்டைக்கு வேட்டு
ஒருசிலரின் சொத்தாக இருந்ததமிழ் ஊற்றைத்
தாழ்ச்சியின்றி தமிழ்நாட்டு மக்களெலாம் உண்ண
எளிமையொடு சுவையூட்டிச் சரிசெய்த வள்ளல்
ஆழ்கடலில் முத்தொத்த அறிவுரையை நல்கும்
எனதாசான் கவியரசர் தமிழ்மக்கள் ஆசான்

சிரிக்கின்ற அழகெல்லாம் செஞ்சொல்லால் தீட்டிச்
செந்தமிழின் நயம்விளங்கச் செய்திட்ட ஆசான்
வரிப்புலியே இளந்தமிழா எனவிளித்து நாட்டில்
வளர்கொடுமை அறியாமை வறுமையினைக் காட்டி
ஒருநாளும் தயங்காதே தமிழ்வாளைத் தூக்கே
ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம் ஏற்றம்

குரைப்பாருக் கஞ்சாதே எந்நாளும் சொல்லும்
எனதாசான் கவியரசர் தமிழ்மக்கள் ஆசான்

இன்றில்லையே என் பாட்டைக் கண்டு களித்து வாழ்த்த என்கின்ற துயரமே தலைதூக்கி நிற்பதை நான் உணர்கிறேன்.

## குறிக்கோள்

என் குறிக்கோளெல்லாம் அவரவர் தாய்மொழி சீரும் சிறப்புமாக வாழ வேண்டும். சமுதாயம் சீர்திருந்த வேண்டும், ஏழை பணக்காரன் இல்லாத பொதுவுடைமை நாட்டில் நிலைபெற வேண்டும் என்பதாகும். என் பாடலில் பல இடங்களில் இக்கருத்தே வலியுறுத்தப்பட்டிருக்கும்.

"ஓங்குக ஓங்குகவே—தமிழ்
உலகோடே உயர்வாக நிலைபெற்று நீடுழி"!

"ஏங்கி மெலியும் ஏழை பாட்டாளி உழவர்கள்
இன்னல்களைந் துவாழ்வை நன்னிலை யாக்கும்
தமிழ்"

"தாழ்வு உயர்வுஎனும் சாதியும் நீக்கி
சஞ்சல மில்லாத வாழ்வைப் பொதுவாக்கி
ஏழை எளியவர் இல்லாத தமிழ்நாட்டை
இன்று சமைப்போம் வெட்டிவீழ்த்துவோம்
தமிழ்க்கேட்டை"

"உன்னை மறந்துநான் வாழ்வேனோ?—என்
உயிருக்குயிர் ஆகிய செந்தமிழே!—அமுதே
அன்னையை மறந்தாலும் அப்பனை மறந்தாலும்
அன்பு மனைவிமக்கள் அணைப்பை மறந்தாலும்"

……………"இந்த நாட்டில்
பழக்கத்தால் உயர்வு தாழ்வு
படைப்பினால் அல்ல தம்பி"

"விளைவினை மக்கள் எல்லாம்
பொதுவாகத் துய்க்கும் மேன்மை
முளைத்திடில் தமிழர் நாட்டில்
முளைத்திடும் இன்ப வாழ்வு".

இதுபோன்ற கருத்துகளும் இயற்கையின் படப்பிடிப்பும் என் பாடல்களில் ஆங்காங்கே நிறைந்திருப்பதைக் காணலாம். நான் பொருளுக்கோ புகழுக்கோ விரும்பிக் கவிதைகள் எழுதியதில்லை. அப்படியென்றால் நான் செல்வந்தன் என்பது பொருளல்ல. உணர்வு மேலிடும் போது என்னால் கவிதை எழுத முடிகிறது. தூண்டுதலால் என் விருப்பத்திற்கு மாறாகக் கவிதைகள் எழுத நேர்ந்தால் விறுவிறுப்பாகவும் ஓட்டமாகவும் கவிதைகள் அமைவதில்லை. அது என் இயற்கைப் பண்பு.

## உணர்வும் உறவும்

வயல் வெளியைச் சுற்றுவதும் குழந்தைகளுடன் விளையாடுவதும் கவிதை இயற்றுவதும் படிப்பதும் எனக்கு இன்பம் ஊட்டுவன. எனது கவிதைகளில் பெரும்பாலானவை நள்ளிரவில் பிறந்தவையே. எனக்கு விருப்பமானவை தனித்தமிழும் கவிதையும். நான் விரும்பாதவை மரக்கறி உணவும் பொய்பேசுவதும்.

நான் என் அய்ம்பத்தெட்டாமாண்டைக் கடந்து அய்ம்பத்தொன்பதாம் ஆண்டில் நடையிட்டுக் கொண்டிருக்கின்றேன். எனக்கு மாதரி, அய்யை, எழிலி, முல்லை, இளவெயினி என்கின்ற அய்ந்து பெண் மக்களும் நக்கீரன் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி பெருங்கிள்ளி என்கின்ற நான்கு ஆண்மக்களும் உள்ளனர். பெண்பிள்ளைகளில் முன்

நால்வர் திருமணமானவர்கள். அவர்கள் வாயிலாக எனக்குப் பதினேழு பேரப் பிள்ளைகள் உள்ளனர்.

கவிதைத் துறையில் என்மாணவர் என்று குறிப்பிடத் தக்கவர் வித்துவான் பா. முத்து. அவரால் இயற்றப் பெற்ற கவிதை நூல் "இயற்கை இன்பம்" என்பதாகும்.

## இன்றைய நிலை

இன்றுள்ள என் தாய் நாட்டின் நிலையை நினைத்துப் பார்க்கின் என் நெஞ்சம் கொதிக்கின்றது. அடிமையாய் நாம் வாழ்ந்த காலத்தையும் இன்று நாமே நம்மை ஆளு கின்ற காலத்தையும் சீர் தூக்கிப் பார்க்கின் ஏதோ ஓர் பயங்கர எதிர்காலத் தோற்றம் என் கண் முன் தோன்று கிறது. நிரந்தரமற்ற அரசியல் போக்கும் பண்பும் நேர்மையுமற்ற அரசியல் தலைவர்கள் பெருக்கமுமே நாட்டில் எங்கும் காணப்படுகின்றன.

விடுதலை பெற்று நாமே நம்மை இருபத்தாறு ஆண்டு களாக ஆண்டு வருகின்றோம். மற்ற நாடுகளைப் போன்று என்ன முன்னேற்றம் நாம் அடைந்துள்ளோம் என்கின்ற கேள்விக்குறியே தோன்றுகிறது. நம்முள் ஊறிப்போன சமுதாய ஊழல்கள்-சாதிமதப் பிணக்குகள், அறிவு விளக்க மின்மை, வறுமை, முதலியன நம்மை விட்டு அகன்றதாகத் தெரியவில்லை. மாறாக அரசியல் காழ்ப்பு, லஞ்ச ஊழல், பதவிப்பித்து போன்ற நாட்டைச் சீரழிக்கும் கொடுஞ் செயல்களே இன்று தலைவிரித்தாடுகின்றன. விலைவாசி உயர்வுகள், உணவுத் தட்டுப்பாடு, வேலையில்லாத் திண் டாட்டம் போன்ற கொடுமைகள் நாட்டில் மலிந்து விட்டன. விடுதலை பெற்றால் நாட்டில் பாலும் தேனும் வழிந்தோடும் என்று அன்று பறைசாற்றப்பட்டது. ஆனால் இன்று, எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று பாரதியால் பெயரிடப்பட்ட ஏழைகளின் பஞ்சப்பாட்டும்

பல்லிளிப்பும் கண்ணீருமே நாட்டில் மலிந்திருப்பதைக் காணலாம்.

நினைத்துப் பார்க்கின் இந்நிலை நாட்டில் நீடித்தால் எதிர்காலம் என்னாகும்? பயங்கர சூனியமே தோன்று கிறது. நாட்டையும் மக்களையும் அரசியலையும் சீரும் சிறப்புமாக நடத்திச் செல்லும் விடிவெள்ளிகள் கட்டாயம் இனித்தோன்றியே ஆகவேண்டும் என்று நான் விரும்பு கின்றேன். தோன்ற வாழ்த்துகின்றேன்.

## விழைவும் வேண்டுகோளும்

அண்மையில் என் அய்ம்பத்தொன்பதாம் ஆண்டு தொடக்கக் கவிதைமலர் வெளியிடப்பட்டது. அதற் கென்று க. பொ. இளம் வழுதி என்னைப் பேட்டி கண்டார்: என் விழைவு என்னவென்று கேட்டார்.

"சென்றது சென்றதுவே; என்றும் திரும்பாது;
நன்றே இனிபுரிக; நற்றமிழைத் தாய்மொழியை
ஊன்உடல்போல் ஓம்பி உலகமொழிக் கெல்லாம்
தேன்வழங்கச் செய்க; திருநாட்டு மக்கள்
பகுத்துண்டு வாழ்க; பகைநீக்கி வாழ்க;
தொகுத்துரைக்கும் நூலின் துணைகொள்க;
என்றென்றும்
ஒன்றிரண்டு பெற்றே உயர்குடியின் நற்பெயரை
என்றும் நிறுத்தல் இனிது!

எனும் எனது விருப்பத்தை மக்கள் நிறைவேற்ற வேண்டுமென்பதே என் வேண்டுகோள். மக்கள் துணை புரிவார்களாக! அதுவே எனக்கு என்றென்றும் நிலைத்து நிற்கும் பெருமகிழ்ச்சியாகும்.

எனக்கு ஒரு பேராசை உண்டு அதாவது,

"ஊருக்கே உழைப்பதுவும் ஊர்வாழும் மக்கள்
உயர்வுக்கே உழைப்பதுவும் நற்கவிஞர் வாழ்க்கை;
தேருக்கே அச்சாணி! திசைதிருப்ப முட்டு
தெருவெல்லாம் கொடுப்பதற்குத் திரண்டதோள்
வேண்டும்

காருக்கே யார்சொன்னார் கடல்நீரை மொண்டு
கழனியெலாம் வளமாக்க; நாம்வாழும் நாட்டில்
நேருக்கு நேர்நடக்கும் அறிவற்ற செய்கை
நெறிப்படுத்த என்பாடல் வழிவகுத்தால் போதும்!

அந்தியிலே கோயிலெலாம் மணியடிக்கக் கேட்பேன்
ஆனாலும் எனதுள்ளம் அமைதிகொள்வ(த்)தில்லை
சந்தியிலே கூடுகின்ற கூட்டம்போல் இன்றித்
தமிழ்மக்கள் தாய்நாட்டின் நலம்பேண வேண்டும்
பந்தியிலே தலைவாழை இலையிட்டே உண்போர்
பசிமீறக் கையேந்திக் கெஞ்சுகின்ற ஏழை
புந்தியிலே நிழலாடக் காண்கின்றேன் இந்தப்
போக்கிற்கெலாம் என்பாடல் வழிவகுத்தால்போதும்!

பாலுக்கே அழுங்குழவி பசிக்கேங்கு வோர்கள்
பாயின்றி இடமின்றி நிழலுறங்கும் கூட்டம்
நூலுக்கே வழியின்றிக் கைத்தறியால் வாழ்வோர்
நுணலைக் கூச்சலிட்டால் பசிநீங்கப் போமோ?
வேலுக்கே வேலெதிர்ப்பை விளைவிக்க வேண்டும்
விரைவினிலே மக்கட்கு நல்லுழைப்பைத் தூண்ட
தோலுக்கே உணர்வூட்டப் பகுத்தறிவை ஊட்ட
தூயதமிழ் என்பாடல் வழிவகுத்தால் போதும்!"

என்பதுதான்.

இறுதியாக நான் ஆன்வோரை வேண்டிக் கேட்டுக் கொள்வதொன்றுண்டு. அதாவது,

"ஆள்கின்ற நாற்காலி பொதுமக்கள் சொத்தாம்
ஆள்வோர்க்கே என்றென்றும் அதுவுரிமை ஆகா
மூளுகின்ற எதிர்ப்பிற்கோ கூச்சலுக்கோ அஞ்சி
முற்போக்குத் திட்டத்தைத் தள்ளிப்போ டாதீர்"

என்பதேயாகும்.

என் கவிதையைப் பற்றித் தமிழறிஞர் நாவலர் சோமசுந்தர பாரதி, தமிழ்த்தென்றல் திரு. வி. க., தமிழ்த் தாத்தா பேராசிரியர் மயிலை சிவமுத்து, பாவேந்தர் பாரதிதாசன், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் மு. கருணாநிதி போன்றோர் பாராட்டியுள்ளனர்.

என் பாடல்கள் ஆங்கிலத்திலும் ரஷ்ய மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுப் பாராட்டப் பட்டுள்ளன.

நேஷனல் ஹெரால்டு (National Herald) என்னும் ஆங்கில இதழிலும் மலேசிய ஏடுகளிலும் இலங்கை ஏடுகளிலும் என் கவிதையைப் பற்றி ஆய்வுரைகளும் பாராட்டுகளும் வெளியிடப் பட்டுள்ளன.

திரைப் படங்களில் பாடல்கள் எழுதக் கிடைத்த பல்வேறு வாய்ப்புகளை அஃது - நிலையற்றதெனக் கருதி மறுத்ததுண்டு.

இலங்கை சிங்கப்பூர் தமிழன்பர்களின் அழைப்பினை ஏற்றுச் செல்ல வேண்டிய வாய்ப்புகள் என் குடும்பச் சூழல் காரணமாகத் தள்ளி வைக்கப்பட்டன.

என்னைப்பற்றி இனி அதிகம் நான் சொல்ல விரும்பவில்லை. என் கவிதைச் சுவைஞர்களும் ஆய்வுரையாளர்களும் சொல்ல வேண்டியவை பல இருக்கலாம் என நான் நம்புகிறேன். அப்பொறுப்பினை அவர்களுக்கே விட்டு விடுகிறேன்.

வணக்கம்!

# வேட்கை

## வளமிகு வாழ்வுக்கு இலக்கியம் சமைப்போம்!

வான்வழங்கும் செம்பரிதி தைவருதல் கண்டோம்!
வளம்மிகுந்த தைக்கண்டோம்! வானொலியில் இன்று
தேன்வழங்கும் கவிபரங்கத் தலைமையினை ஏற்கும்
செந்தமிழர் தொகைப்பாட்டே! இலக்குவனார் ஐயா!
ஆன்வழங்கும் வளத்தோடு வயல்வழங்கும் நெல்லும்
அணியணியாய்ப் பெற்றுள்ள காவிரிசூழ் நாட்டீர்!
கான்வழங்கும் வண்டிசைபோல் கவிபாடு வோரே!
கைகூப்பி வாணிதாசன் வணங்குகின்றேன் ஏற்பீர் 1

இல்லறத்தை நல்லறமாய்ச் செய்திடுதல் வாழ்க்கை!
இட்டுண்டு பசிபோக்க இயங்கிடுதல் வாழ்க்கை!
நல்லறத்தைப் பெருக்கிடவே உழைத்திடுதல் வாழ்க்கை!
நாட்டினிலே முதலாளி தொழிலாளி என்ற
கொல்லறத்தைப் பொடியாக்கி வளமைமிகு வாழ்வின்
குறிக்கோளே மக்களினக் குறிக்கோளாய் எண்ணும்
வல்லறமே இன்றுள்ள மக்களின வாழ்க்கை!
வளர்த்திடுவோம் புதுநோக்கில் இலக்கியத்தை நாமே! 2

மக்களிடை நிலவுகின்ற செயல் நன்மை தீமை
மறிகடல்மேல் எழுதிங்கள் நீளருவி மேற்குச்
செக்கரிடை மலைச்சாரல், திரிகின்ற வேங்கை
தீந்தமிழை இசைக்கின்ற குயிலினங்கள் நீண்ட

எக்கரிடைக் கரையுடைத்தே பாய்கின்ற ஆற்றின்
இருமருங்கும் பழத்தோப்பு பார்த்துணர்ந்த உள்ளம்
சிக்கலிடை வீழாமல் கலைநயத்தைக் கூட்டித்
திரண்டெழுந்த சொற்பொருளே இலக்கியமென் போமே! 3

கன்னியைப்போல் கற்போர்க்குக் கனவெழுப்ப வேண்டும்!
குடிமனையின் இல்லாள்போல் இன்பதுன்பம் தாங்கி
முன்னாளும் நிகழ்நாளும் முறைப்படுத்த வேண்டும்!
முகம்கோணாத் தாயைப்போல் எதிர்கால ஆக்கம்
தன்னையே குறிக்கோளாய்க் கலையழகைக் கூட்டித்
தாய்நாட்டைத் தகுமுறையை உணர்த்திடுதல் வேண்டும்
பொன்னான வளமைமிகு வாழ்விற்கே சேர்க்கும்
புதுமைமிகு கவிதைகளே இலக்கியமென் போமே! 4

பன்னாளில் தீமூளா வெற்றடுப்பின் மீது
படுத்திருந்த பூனைகண்டு மனைமக்கள் கண்டு
முன்னாளில் மொழிகற்ற பெரும்புலவர் எல்லாம்
முடிமன்னர் கொடைபாடிப் போர்முரசம் பாடிச்
சின்னாளில் குறைகின்ற பொருள்பரிசு பெற்றே
தெருக்கோடி வணிகர்போல் வாழ்ந்துவர லானார்!
இந்நாளில் அவையெல்லாம் வளவாழ்வுக் கேலா!
எழுச்சிமிகு மனமாற்றம் வளர்ந்துவரு காலம்! 5

ஆண்டவனின் புகழ்பாடி அவன்நாடு பாடி
ஆக்கிவைத்த இலக்கியங்கள் அக்காலச் சொத்து!
மூண்டெழுந்த கடற்கோளால் முழுமையற்றுப் போக
முன்னோர்கள் சிலவற்றைத் தொகுத்துவைத்துப் போனார்!
மாண்டவனின் மனையாளாம் கண்ணகியை ஆன்ற
மாதவியை மேகலையும் சிலம்புமெடுத் தோதும்!
ஆண்டவனின் புகழ்பாடி நாயன்மார் ஆழ்வார்
அன்புநெறி இலக்கியத்தைச் சமைத்தார்கள் பின்னர்! 6

கல்லையும்நற் செம்பையுமே கசிந்துருகிப் பாடிக்
களித்திருந்தார் அன்றிருந்தோர்; சூழ்நிலைமைக் கேற்பப்
பல்தெரிய முன்காட்டிப் பசிகாட்டி ஏங்கும்
பஞ்சையனும் பாரதத்தின் முடிசூடா மன்னன்!
எல்லோரும் அரசாளும் வாய்ப்புடையோர் இதுதான்
இன்றுள்ள குடியரசின் பெருஞ்சிறப்பாம்! இங்கே
இல்லோரும் உள்ளோரும் இலையென்று காட்டும்
ஏற்றமிகு இலக்கியத்தை நாடடைய வேண்டும்! 7

பிறநாட்டான் நம்நாட்டில் பிழைப்புக்கு வந்து
பிரித்தாளும் சூழ்ச்சியால் நம்நாட்டை வென்று
மறநாட்டின் வளமெல்லாம் அவன்நாட்டில் தேக்கி
வறுமையைப் பரிசாக நமக்களித்துப் போனான்!
சிறைப்பட்ட நம்நாடு விடுதலையைக் காணச்
செந்தமிழால் பாரதியார் இலக்கியத்தைச் செய்தார்!
கறைபட்ட நம்நாடு விடுதலையைப் பெற்றுக்
கால்நூறு நல்லாண்டு காண்கின்றோம் வாழ்க! 8

நன்மைபல நம்நாடு விடுதலைக்குப் பின்னர்
நாடோறும் பல்துறையில் அடைந்துவரல் உண்மை!
நன்மைபல அடைந்துவரும் பிறநாடும் நாமும்
நானூறு காதவழி இடைவெளியில் உள்ளோம்!
தொன்மைபல எண்ணிஎண்ணி இதுபோதும் என்றே
தொடைநடுங்கி போல்வாழ்தல் அறிவாற்றல் ஆமோ?
வன்மைபல மேற்கொண்டே உழைப்பதற்குத் தூண்டும்
வளமான புதுநோக்க இலக்கியங்கள் தேவை! 9

பாவேந்தர் நாட்டிடையில் நிலவுகின்ற• ஒவ்வாப்
பழமையெனும் சாதிமதம் கைம்மைநிலை ஏய்த்தல்
நாவேந்தர் போலெதிர்த்தே நாட்டுநிலை காட்டி
நல்லதமிழ் மறுமலர்ச்சி இலக்கியத்தைச் செய்தார்!

மூவேந்தர் காலத்து முதற்கொண்டே இன்றும்
முடக்கொள்கை முளைக்காமல் வேரற்ற துண்டோ?
பூவேந்தர் இந்நாட்டு மக்களினம் நல்ல
புதுவாழ்வு வாழ்வதற்கே இலக்கியங்கள் தேவை! 10

காலமெனும் சுழற்காற்று கடல்சூழ்ந்த நாட்டைக்
கலகலக்கச் செய்வதையும் பின்னதையே மாற்றிப்
பாலூட்டி வளர்ப்பதையும் கண்டுவரு கின்றோம்!
பகுத்தறிவே சுழற்காற்று முன்னேற்றப் பாட்டை!
நூலறிவு பண்பாட்டின் நுழைவாயில்! அந்த
நுழைவாயில் கண்டுடனே பெருவாயில் என்னும்
கோலறிவு என்கின்ற கொடுமைமிகு ஆட்சிக்
குறைகூறும் இலக்கியத்தைச் சமைக்கமற வோமே! 11

ஆண்டுக்கிங் கொவ்வொன்று பிள்ளைகளைப் பெற்றே
அறிவற்றே நலமற்றே அழிகின்ற தாய்மார்
மூண்டுவரும் மக்களினப் பெருக்கத்தைக் கண்டே
மூதறிவு பெறச்செய்யும்; ஆணினத்தைத் தூண்டி
ஈண்டுள்ள பசிநோயை வறுமைமிகு வாழ்வை
இடித்துரைத்து மனமாற்றம் அறிவாக்கம் கொள்ள
வேண்டுகின்ற இலக்கியமே இனிநமக்குத் தேவை!
வெற்றுவேட்டால் பயன் என்னாம்? சிந்திக்க வேண்டும்! 12

கார்தவழும் நீள்வானில் காற்றுமழை மின்னல்
கடந்தேறி விண்கலத்தால் எதிர்நீந்திச் சென்று
சீர்தவழும் வெண்ணிலவில் காலூன்றி ஆய்வு
செய்கின்ற காலமிது! நம்நாட்டில் ஓர்பால்
வேர்தவழும் மரநீழல் அசையாமல் குந்தி
வெறும்பேச்சுப் பேசுபவர்; உழைக்காத சோம்பர்;
கூர்தவழும் அறிவாற்றல் அடையவழி செய்யும்
கொள்கைநிறை இலக்கியமே இனிச்சமைக்க வேண்டும்! 13

வான்பூத்த மீனினம்போல் எண்ணிலடங் காத
வளமெல்லாம் மக்கட்கே இனிநாட்டில் தேவை!
கான்பூத்த மலர்உண்ட வண்டினங்கள் போலக்
கவிபாடிக் கிடப்பதுவா நற்கவிகள் நோக்கம்?
கூன்பூத்த செயலறிவு நேர்க்கோட்டைப் போலக்
கொள்கையிலே பற்றோடு நிலைத்திருக்கச் செய்யும்
தேன்பூத்த சொற்பொருளால் யாப்பணியின் கூட்டால்
திசைமாற்றும் பொதுநோக்க இலக்கியம்ப டைப்போம்! 14

வாழ்கின்ற மக்கட்கு வளமைமிகு வாழ்வு
வந்தடைய வேண்டுமென்றே இன்றுள்ள ஆட்சி
சூழ்கின்ற அறிவின்மை கொடுவறுமைத் துன்பம்
தொலைப்பதற்குத் தொழிற்புரட்சி செய்கிறது! மக்கள்
ஆழ்கின்ற ஒத்துழைப்பைத் தரவில்லை என்றால்
அரசென்ன செய்தாலும் பலனென்ன கிட்டும்?
தாழ்கின்ற மனப்பான்மை மாற்றுகின்ற ஆன்ற
சாவாத இலக்கியத்தைச் சமைத்தளிப்போம் நாமே! 15

நிலைத்திருக்க வேண்டுமென்றே புலவோர்கள் என்றும்
நினைத்தெண்ணி இலக்கியத்தைச்சமைத்ததில்லை நாட்டில்!
நிலைத்திருக்கும் பொதுக்கருத்தை நினைவூட்டு கின்ற
நெஞ்சள்ளும் பாடல்கள் என்றென்றும் வாழும்!
உலைத்துருத்திக் கொல்லர்கள் உருவாக்கு கின்ற
ஒப்பில்லாப் போர்ப்படைபோல் உலகத்தை மாற்றும்
கலைவளத்தை நமக்களிக்கும் சாவாத சீர்த்திக்
கவிதைகளை நாம்படைத்தே இன்பமடை வோமே! 16

முன்னாளின் இலக்கியங்கள் நமக்குநனி உண்டாம்!
முடிமன்னர் காலத்து வாழ்க்கைக்கு நன்றாம்!
இந்நாளோ நாம்நமையே ஆளுகின்ற நாளாம்!
இன்றுள்ள சூழ்நிலைக்கு நாம்மாற வேண்டும்!

பொன்னான வளமைமிகு வாழ்வுக்குத் தாவப்
புதுக்கருத்தைப் பகுத்தறிவை மரபுவழி நின்றே
என்னருமைக் கவிஞர்காள்! குமுகாய மாற்ற
எழுச்சிமிகு இலக்கியத்தைச் சமைத்திடுவோம் வாரீர்! 17

நமையீன்ற தாய்நாட்டின் நானிலத்தி னூடே
நல்லியற்கை தருகின்ற நிலவளங்கள் உண்டே!
சுமைதாங்கி போல்பழத்தைத் தாங்குகின்ற தோப்பும்
தொங்குகின்ற தேனடையும் பரந்தவயற் காடும்
உமக்காக இருக்கின்றோம் எனச்சொல்லக் கேட்டும்
ஓய்ந்தொதுங்கி வாழ்கின்ற மக்களினம் உய்ய
அமைவாகச் சிந்திக்க அறிவூக்கம் கொள்ள
அழகுதமிழ் இலக்கியத்தைச் சமைத்திடுவோம் வாரீர்! 18

எத்தொழிலும் இழிவில்லை இவ்வுலகில்! வேலை
ஏதேனும் செய்யாமல் இருப்பவரே பேதை!
கைத்தொழிலைக் கற்றுக்கொள்! இழிவில்லை! என்றும்
கவலை இலை! வளமைமிகு, நல்வாழ்வு கூடும்!
சுத்திஎடுத் துழைப்பதுதான் ஒருசிலர்க்கே நாட்டில்
சொந்தமென நினைக்கின்ற கடுகுள்ளம் வேண்டாம்
தித்திக்கும் சொற்பாவால் கலைவண்ணப் பண்பால்
திருத்துகின்ற இலக்கியத்தைச் சமைத்திடுவோம் வாரீர்! 19

வளமான வாழ்வுக்குப் பலபொருள்கள் தேவை!
மரச்சாமான் நூலாடை மண்சட்டி பானை
குளம்குட்டை குட்டையிலே தூய்மைசெய்தே ஆடை
கொடுப்பவர்கள் கொத்தர்கள் முடித்திருத்து வோர்கள்
உளத்தாலே மனிதஇனம்; தொழில்செய்வ தாலே
உயர்வில்லை தாழ்வில்லை என்கின்ற எண்ணம்
கிளைத்திடவே செய்வதுதான் இன்றுள்ள தொண்டு!
கேடகற்றும் இலக்கியத்தைச் சமைத்திடுவோம் வாரீர்! 20

நல்வாழ்வு பெறுவதற்கே நல்லறிவு தேவை!
நல்லறிவு பெறுவதற்கே கற்றிடுதல் வேண்டும்!
பல்கலையில் பயிலுகின்ற மாணவர்கள் கூட்டம்
படிப்பைவிட்டுப் பிறசெயலில் பங்கேற்க வேண்டாம்!
வல்லோராய் வாழ்ந்தால் வளமைமிகும் வாழ்வும்!
மறவாதீர்! மறவாதீர்! எனவூக்கு கின்ற
சொல்லரிய மரபுவழி யாப்புவழி நின்றே
தூயதமிழ் இலக்கியத்தைச் சமைத்திடுவோம் வாரீர்! 21

இக்காலம் அறிவியலின் ஏற்றமிகு காலம்!
எழுகின்ற புதுமையினை எடுத்துணர்த்தும் காலம்!
மக்காக வாழ்வதுவோ நம்நாட்டு மக்கள்?
மற்றவர்கள் மதிப்பாரோ? நுண்ணறிவு தேவை!
செக்காட்டு வார்போலத் திரிவதையே விட்டுச்
சிந்தித்தே அறிவியலின் நுணுக்கத்தைக் கண்டே
முக்காட்டைக் கிழித்தெறியும் உணர்வூட்டு கின்ற
முத்தமிழில் இலக்கியத்தைச் சமைத்திடுவோம் வாரீர்! 22

பிறநாட்டைப் போல்நாமும் வளமைமிகு வாழ்வைப்
பெறவேண்டில் நம்நாட்டில் வாழ்கின்ற மக்கள்
மறவாமல் ஒரு செயலை மனம்கொள்ள வேண்டும்!
வளமான வாழ்வுக்கே அயராவு ழைப்புக்
குறையாமல் செய்திங்குக் குடியோம்பல் வேண்டும்!
குறிக்கோளை என்றென்றும் மக்களிடைத் தூண்டும்
நிறைவான பொருள்பொதிந்த நெஞ்சள்ளும் பாட்டால்
நிலைத்திருக்கும் இலக்கியத்தைச் சமைத்திடுவோம்
வாரீர்! 23

பூக்களிலே தேன்தேடும் பொறிவண்டைப் போலப்
பொற்கிண்ணப் பூப்பூத்த பூசணியின் பாத்தி
வாக்கினிலே காய்த்திட்ட வெள்ளரியின் கோட்டை
வாய்த்திருக்கும் அணிலைப்போல் அயராது நாளும்

நோக்கோடு தொழில்துறையில் உழைத்திருக்கத் தூண்டும்
நுண்மாண்பை நுழைபுலத்தை வளர்க்கின்ற ஆன்ற
பூக்காட்டுச் செந்தமிழால் சுவையின்பம் ஊட்டும்
புதுப்போக்கில் இலக்கியத்தைச் சமைத்திடுவோம்
வாரீர்! 24

பாராண்ட முடிமன்னர் மன்னவரின் கீழே
பணிபுரிந்த படைமறவர் அவரேவ லாளர்
சீராண்ட பெருஞ்செல்வர் தொழிலாளர் கூட்டம்
திண்டாடி வாழ்ந்திருந்த திக்கற்ற ஏழை
ஊராளத் துணைபுரியும் அறிவமைச்சர் பெண்கள்
உயிரினங்கள் கைக்குழந்தை பசிநோயில் ஒன்றாம்!
காராண்ட உலகத்தில் பகுத்துண்ணும் பண்பைக்
கற்பிக்கும் இலக்கியத்தைச் சமைத்திடுவோம் வாரீர்! 25

உண்டியின்றேல் உயிரில்லை; உடற்றசையும் இல்லை;
உலகத்தோர் பன்னெடுநாள் கண்டுவரும் உண்மை!
மண்டிவரும் வளமெல்லாம் ஒருசிலர்க்கா சொந்தம்?
வளமைமிகு வாழ்வுக்குப் பகுத்துண்ணும் பண்பைக்
கொண்டிடுதல் நூலோர்கள் தொகுத்தவற்றுள் எல்லாம்
குடியோம்பும் செயலுக்கே தலையென்று சொன்னார்
பண்டிருந்த ஆன்றோரின் பரிந்துரையை ஏற்றுப்
பயன்நல்கும் இலக்கியத்தைச் சமைத்திடுவோம் வாரீர்! 26

போதுமென்ற மனமேநல் பொன்செய்யும் என்று
புகன்றார்கள்; மகப்பேற்றுக் கதுபொருந்தும் இந்நாள்
போதுமென்றே ஒன்றிரண்டு நூல்களையே கற்றால்
புலமைவந்து சேர்ந்திடுமோ? அறிவாக்கம் உண்டோ?
போதுமென்ற மனம்பெற்றால் வளவாழ்வுக் கேற்ற
பொருள்மிகுதி ஏற்படுமோ? பிறநாட்டார் போலத்
தோதோடு நாம்வாழ, பிறர்துணைக்குப் போகப்
போதுமென்ற மனம்வேண்டாம்! அயராது ழைப்போம்! 27

மனஅமைதி அடைவதற்குப் போதுமென்ற உள்ளம்
வளரட்டும்; வரவேற்போம்; நாம்துறவி அல்லோம்!
இனஅமைதி செழித்திருக்கப் பிறர்நம்மை என்றும்
ஏய்க்காமல் விழித்திருக்கப் போதுமென்ற உள்ள
நினைவுக்கு நீள்உழைப்பை மறந்திருக்க வேண்டாம்!
நெறியோடு நம்நாடு பிறநாட்டைப் போலப்
பணம்பெருக்கிப் படைபெருக்கிப் பண்பூக்கம் கொள்ளப்
பாட்டிசைத்தே இலக்கியத்தைச் சமைத்திடுவோம்
வாரீர்! 28

நம்நாட்டின் விடுதலையை நாமடைந்து இன்று
நாலைந்தும் அய்தாண்டும் நாம்கடந்து விட்டோம்!
நம்நாட்டின் நில்வளமும் தொழில்வளமும் மற்றும்
நல்லறிவு நுணுக்கமதும் அயராஉ ழைப்பும்
அம்மட்டோ! பகுத்துண்ணும் செயல்சிறிதும் பெற்றோம்!
அதுபோதும் அதுபோதும் என்றிருந்து விட்டால்
பொம்மைகளின் திருமணம்போல் குடியாட்சி மாறும்!
புதுநோக்கில் இலக்கியத்தைச் சமைத்திடுவோம் வாரீர்! 29

வளமிகுநம் வாழ்விற்கு நாமடைந்த வெற்றி
வளமைமிகு பெருவெற்றி எனும்கனவு வேண்டாம்!
களம்கண்ட நம்தலைவர் விடுதலைப்போர் வீரர்
கனவுகண்ட வளமெல்லாம் கைக்கெட்ட வேண்டும்!
உளமார அயராதிங் குழைத்துழைத்து நாளும்
ஒளிமயமாம் வளமிகுநல் வாழ்வடைய என்றும்
இளைப்பாற எண்ணாமல் இனியதமிழ்ப் பாடல்
இலக்கியத்தைச் சமைத்திடுவோம்; இன்பமடை வோமே!30

*(இக்கவிதை திருச்சி வானொலியில் 14-1-'73 அன்று பொங்கற் கவியரங்கத்தில் பாடப்பட்டது.)*

# பாடுபடும் தொழிலாளி—கவிஞர்

வான்தாவும் நீள்தாழை உச்சி நீண்ட
மலர்தாவும்; மறிகடலின் கரையோ ரத்தில்
கூன்தாவும் புன்னையிலே வெண்பூ பூக்கும்;
குளிர்தாவும் நீளலைகள் முழக்கம் செய்யும்
தேன்தாவும் கழியெல்லாம் நீலம் பூக்கும்;
சீர்தாவும் கடலூரில் வந்து சூழ்ந்த
கான்தாவும் குயிலினங்காள்! கவிஞர் ஏறே!
களிதாவும் பெற்றோரே! தாய்க்கு லத்தீர்! 1

செந்தமிழால், கவிபாடித் தாய கத்தின்
சீர்சிறக்கச் செய்வதற்கே தென்னார்க் காடு
தந்தளித்த மாநாட்டில் பங்கு கொள்ளும்
தமிழ்ப்பெரியீர்! இளையோரே! உடன்பி றப்பே!
வந்துள்ள மாணவர்காள்! மங்கை நல்லீர்!
மாநாட்டுக் குழைப்போரே! உங்கட் கின்று
செந்தமிழால் எண்சீரால் கவிதை யாத்துத்
திருவிருத்த என்வணக்கம் செப்பி னேனே! 2

அலைகுடையும் கரைபோல மெல்ல மெல்ல
அருகிருந்து சிந்தித்துத் திட்ட மிட்டு
மலைகுடையும் கற்றச்சர் வாழைப் பிஞ்சாம்
வடித்தெடுத்த உளியெடுத்துத் தட்டித் தட்டிச்
சிலைகுடையும் செயல்பெரிதாம்; ஆனால் கன்னிச்
செந்தமிழால் பாப்புனைவோர் ஏடெ டுத்தால்
தலைகுடையும்; கண்குடையும்; பாட்டுத் தோன்றும்
தாதையிவர் கலையுலகத் தாதை யாமே! 3

எண்ணத்தை மற்றவர்கள் கண்முன் காட்ட
ஏடெழுதி ஓவியத்தில் அங்கு மிங்கும்
வண்ணத்தைச் சேர்த்துவைத்தால் போதும்; நீண்ட
வான்தாவும் கோபுரத்தின் மீது நல்ல

சுண்ணத்தை அப்பியப்பிக் காட்ட எண்ணும்
தோற்றத்தை நனியமைக்கக் கூடும்; பாட்டு
வண்ணத்தை யாத்திடுவோன் எங்கும் என்றும்
பிறக்கின்றான்; வளர்வதில்லை; மங்கா உண்மை 4

மன்றிருந்து வட்டாடு வாரைப் போல
வரிப்பந்தை உதைக்கின்ற மக்கள் போல
நின்றிருந்து பூப்பந்தைத் தட்டித் தட்டி
நிலம்வீழ்த்திக் கணக்கெண்ணி நிற்பார் போல
அன்றிருந்தே இன்றுவரை பாக்கள் யாத்தோர்
அரங்கிருந்து வட்டாடி யோரே ஆவர்!
"இன்றிருந்து நாளைவா" என்றே சொல்லும்
இன்கவிக்கும் யாப்பணிகள் என்றும் வேண்டும்! 5

கூன்நிலவு பிறைநெற்றிக் கன்னிப் பெண்கள்
குளிர்நிலவைப் போன்றிருந்தும் காட்ட கத்துத்
தேன்நிலவுச் சொல்லின்றேல் ஆடை இன்றேல்
சிலம்பின்றேல் அணிமணிகள் இன்றேல் என்னாம்?
கான்நிலவு போன்றதுவே பாட்டில் நல்ல
கற்பனையும் யாப்பணியும் இல்லை என்றால்!
வான்நிலவு புயற்காற்றால் இன்பம் உண்டோ?
மலர்த்தென்றல் நற்கவிதைப் பாட்டென் போமே! 6

கார்முட்டும் மலைத்தொடரில் கல்லில் தோன்றிக்
கடல்முட்டும் நிலப்பரப்பில் வற்றா தோடி
நீர்முட்டும் கால்வழியே நன்செய் புன்செய்
நிலமுட்டும் பேராறே ஆன்றோர் செஞ்சொல்
சீர்முட்டும் பாட்டாகும்; ஆன்றோர் பாடல்
திசைமுட்டும் புகழ்பரப்பும் என்றும் வாழும்!
வேர்முட்டும் பலாவாழை மாவும் கூட்டும்
மிகுசுவையும் கவிச்சுவைக்கு மிக்கப் போமோ? 7

முறையாக இலக்கணத்தைக் கற்க வேண்டும்,
முன்னூலும் பின்னூலும் ஓத வேண்டும்;
மறையாக இருக்கின்ற நன்னு ணுக்க
வழிமுறையை ஆன்றோர்வாய்க் கேட்க வேண்டும்;
குறையாக அமைந்திடுமோ பாடும் பாடல்
குளிர்பொன்னி வளம்சேர்க்கும்; மக்கள் நெஞ்சம்
கறையாக வழிசெய்யா; கத்து கின்ற
கடல்போன்ற பெருவளத்தைச் செய்யும் நீடே! 8

ஓடாத ஆறுண்டோ? விண்ணில் என்றும்
உலவாத காற்றுண்டோ? செங்காய் கோத
நாடாத கிளியுண்டோ? ஈன்ற அன்னை
நடுந்தெருவில் அடித்தாலும்! கூவி ஓடித்
தேடாத சிறுபிள்ளை உண்டோ? தாயின்
திருவினிலே கவிபாடும் ஆற்றல் பெற்றார்
பாடாத மனம்படைத்து வாழ்வ துண்டோ?
பாவலர்காள்! பாடிடுவோம்! என்றும் வாழ்வே! 9

தெருவுற்ற குப்பையினைக் கோழிக் குஞ்சு
சிறகடித்துச் சீய்த்துண்ணல் உண்மை! மற்றும்
மருவுற்ற நன்மலர்கள் நாற்றம் வீசி
வண்டினத்தை மருங்கேற்றுக் கொள்ளல் உண்மை!
கருவுற்ற உயிரினங்கள் ஈனல் உண்மை;
கார்பெற்ற நீள்வானம் பெய்தல் உண்மை!
திருவுற்ற பாவலர்கள் என்றும் பாடிச்
செந்தமிழைக் காப்பதுண்மை! பாடு வோமே! 10

முன்னோர்கள் நமக்களித்த காவி யங்கள்
முத்துவிளை கடல்போல இன்றும் உண்டாம்!
அன்னோர்கள் வறுமையிலும் பாடிப் பாடி
அகமகிழ்ந்தார்; அதுதானே அன்னோர் நோக்கம்!

பின்னோர்கள் விதிவிலக்கா? இல்லை! இல்லை!
பிறந்ததுவே பாப்பாடப் பின்னென் கண்டார்?
முன்னோர்கள் பின்னோர்கள் போல நாமும்
மூச்சுள்ள வரைபாடி வாழுவோமே! 11

செய்மொழியை நமையீன்ற காலை அன்னைத்
திருத்தமுற வாயூறச் சொல்லித் தந்த
தாய்மொழியைத் தமிழ்மொழியை முன்னர்க் கற்றுச்
சார்ந்துள்ள பிறமொழியைப் பின்னர்க் கற்று
வாய்மொழியைத் தமிழ்மறையை ஆன்றோர் விள்ள
மனமேற்றுப் பொருள்நாடி வாழ்க்கை நாடி
காய்மொழியை நனிவிலக்கிக் கங்குல் நீக்கும்
கவின்நிலவாய் என்றென்றும் வாழ்வோம் நாமே! 12

பழுத்திருக்கும் மரந்தேறிப் பரந்து சென்று
பசிஆறிப் பாட்டிசைக்கும் புட்கள் போல
விழித்திருக்கும் நேரமெலாம் பாட்டைப்பாடி
மெய்மறந்து வாழ்ந்திருப்போர் கவிஞர் எந்தச்
சுழித்திருக்கும் ஆற்றினிலும் எதிர்த்து நீந்தத்
துணிந்தவர்கள்! அஞ்சாதோர்! கொடுமை கண்டால்
பழித்திருப்போர்! பகைத்திருப்போர்! பிறருக்காகப்
பாடுபடும் தொழிலாளி கவிஞர் ஆமே! 13

இருட்டறையில் இருப்போர்க்கும்
எரிவிளக்கில் படிப்போர்க்கும்
எங்குள்ளோர்க்கும்

தெருட்டுகின்ற நல்லறிவைச்
செந்நெறியைச் செந்தமிழால்
செவியுள் ஊட்டிக்

குருட்டுணர்வைப் போக்கிடுவோர்
கொடுமையினைச் சாடிடுவோர்
கொள்கை வீரர்

மருட்டலுக்கே அஞ்சாதார்
மாக்கவிஞர்! அவர்வாழ
வாழும் நாடே! 14

(தென்னார்க்காடு மாவட்டத் தமிழ்க்கவிஞர் மன்றத்தினர் தமது முதல் மாநாட்டைக் கடலூர் வள்ளலார் அரங்கில் 9-1-'71இல் நடத்தியபோது கவிஞர் தலைமை யேற்றுப் பாடிய தலைமைக் கவிதை இது.)

## ஒக்கும் பிறப்பு-ஒவ்வாச் சிறப்பு

குறிஞ்சி :

வான் எழுந்த பிள்ளைமதி
மலைஎழுந்த நீளருவி!
மலர்பூஞ் சாரல்

தேன் எழுந்த வட்டஇறால்
செழுமுகிலின் கருநிலவு!
திகழும் உச்சி

கூன் எழுந்த மலைத்தொடரில்
குரல்கொடுக்கும் மழைக்களிறு
கொல்லும் வேங்கை

ஊன் எழுந்த பிறப்பொக்கும்!
ஒவ்வாத சிறப்பென்றே
உணருவோமே! 1

முல்லை :

புரிமுற்றி நீண்டிருக்கும்
புதுக்கயிறு போற்கொடிகள்
பூத்துத் தாவி

உரிமுற்றிக் கவைக்கிளைகள்
உயர்ந்திருக்கும் மரமேறும்
ஒளிசேர் முல்லை

வரிமுற்றிக் காண்குயிலும்
வண்புறவும் பசுங்கிளியும்
வாய்த்த மூச்சு

சரிமுற்றி இருந்தாலும்
தகுசெயலின் சிறப்பென்றாய்ச்
சாற்றப் போமோ? 2

மருதம் :

கரைதேக்கி வான்தந்த
காா்தேக்கி மதகிடையில்
கால்கள் தேக்கி

நுரைதேக்கி வருநீரால்
நுகம்தேக்கி வயலினிலே
நுணலை தாவ

வரைதேக்கி நீள்கரும்பு
மணிச்செஞ்நெல் வளர்கின்ற
வாழ்க்கை ஒக்கும்!

உரைதேக்கிப் பயனளிக்கும்
ஒப்புயர்வில் ஒவ்வொன்றின்
உயர்வு வேறே! 3

நெய்தல் :

நெடுவான நிறம்பெற்று
நீளலைகள் கரைமோத
நீண்ட தாழை

மடுவான நீள்கழியின்
வயல்பூக்கும் வெள்ளுப்பும்
வளரும் மீனும்

தொடுவான நெய்தலிலே
தோன்றினவே! பிறப்பொக்கும்!
தூய நன்மை

படுவான உலகத்தில்
பயனளிக்கும் நிலைவேறு;
பண்பும் வேறே! 4

பாலை :

சீர்பழுத்த காதலியின்
சிலம்பொலியை அல்லுபகல்
சிந்தை எண்ணி

நீர்பழுத்த குளக்கரையில்
நின்றிருந்தே உறவாடி
நிலைத்த இன்பப்

பேர்பழுத்த குழந்தைகளின்
பிறப்பொக்கும்! சிறப்பொவ்வா
பிறப்பின் மேன்மை

ஊர்பழுத்த சிறப்பன்றி
ஊன்பழுத்த சிறப்பென்றே
உள்ளு வாரோ? 5

மலையிடையில் பிறந்துஉயிர்
மக்களினம் செடிகொடிகள்
மரங்கள் யாவும்

அலையிடையில் பிறந்தனவும்
அடர்வான நீள்விசும்பில்
அமைந்த யாவும்

நிலையிடையில் பிறப்பொக்கும்
நீள்சிறப்பில் ஒவ்வாதாம்
நெடுநாள் உண்மை!

தலையிடையில் மனிதஇனம்
தம்செயலின் சிறப்பின்றித்
தழைத்தி டாதே! 6

கடல்சூழ்ந்த உலகத்தில்
கல்தோன்றி மண்தோன்றாக்
காலம் தொட்டே

உடல்சூழ்ந்த மனிதஇனம்
உயிர்சூழ்ந்த பிறப்பொக்கும்!
உண்மை! உண்மை!

அடல்சூழ்ந்த வெற்றியினை
அடைந்தோர்கள் பலருண்டாம்
ஆனால் என்றும்

மடல்சூழ்ந்த மண்ணுலகில்
மாப்புகழை அழியாமல்
வளர்த்தார் வேறே! 7

மொழிவகுத்தோர் முன்னோர்கள்
மூளுகின்ற ஒலியெல்லாம்
முறையே செய்து

வழிவகுத்தார்; ஒலிக்கேற்ற
வரிவடிவை அமைத்திட்டார்
மக்கள்; ஆனால்

பழிவகுத்தார் சில்லோர்கள்
பண்பில்லாக் கீழ்மக்கள்;
படைப்பில் ஒன்றே!

விழிவகுத்தார் துறைதோறும்
மேன்மைபெறு வாழ்விற்கே
மேலோர் ஆமே! 8

பிறப்பினிலே சாதிபல
பிறப்பித்து வாழ்ந்தாலும்
பிறந்து பின்னர்

இறப்பினிலே வீழாமல்
எவரிருந்தார் எந்நாட்டில்
என்று கேட்டால்

சிறப்பினிலே வாழ்கின்றார்
செத்தாரும்; அஃதில்லார்
சீர்த்தி என்னாம்?

மறப்பினிலே வாழாமல்
வாழ்வாங்கு வாழ்ந்திருக்கும்
வழிகாண் போமே! 9

பள்ளத்துள் நீர்நிலைக்கும்
பாருலகில் மனிதரெனப்
பல்லோர் கண்டோம்

உள்ளத்துள் நிலைத்திருப்போர்
ஓரிருவர் அன்றிமண்ணில்
உண்டோ? சொல்வீர்!

கள்ளத்துள் தூயநெறிக்
கருத்தேற நன் மருந்தைக்
கவியால் தந்த

வள்ளத்துள் தேன்பாய்ச்சும்
வள்ளுவனார் வாழ்கவென
வாழ்த்து வோமே! 10

# இன்பக் குடும்பம்

மனைவி :

ஆசைக்கு ஒன்று ஆஸ்திக்கு ஒன்று
அதுவே போதும் மச்சான்!—இரண்டு
அதுவே போதும் மச்சான்!
காசே இல்லாத கஷ்டக் குடும்பம்
கருத்தினில் நிறுத்து மச்சான்!—இதை நீ
கருத்தினில் நிறுத்து மச்சான்! 1

கணவன் :

குளத்தில் மூழ்கிக் கோயிலைச் சுற்றிக்
கும்பிடு போட்டாலும்—செல்லாத்தா!—நித்தம்
கும்பிடு போட்டாலும்
உளத்துக் கவலை மாற்றும் குழந்தை
ஒருசிலர்க் கில்லையடி!—செல்லாத்தா!—ஏனோ
ஒருசிலர்க் கில்லையடி! 2

மனைவி :

குழந்தை இல்லாட்டிக் குடும்பத்தில் மகிழ்ச்சி
குறைந்தா போகும்? மச்சான்!—எந்நாளும்
குறைந்தா போகும்? மச்சான்!
குழந்தை மிகுந்தா குடும்பத்தில் இன்பம்
குறைந்து போகும் மச்சான்!—வறுமை
நிறைந்து போகும் மச்சான்! 3

கணவன் :

நம்பிள்ளை நமைப்போல வளர்ந்து நிற்பான்
நமக்கேன் கவலையடி?—செல்லாத்தா—அதைப்பற்றி
நமக்கேன் கவலையடி?
பட்டுப் போகாமல் பழையது கொடுப்போம்!
பால்பழம் வேண்டாமடி!—செல்லாத்தா!—நமக்குப்
பால்பழம் வேண்டாமடி! 4

மனைவி :

பிள்ளை குட்டி பெருத்த நாட்டில்
பிழைப்புக்கு வழியேது? மச்சான்!—மக்கள்
பிழைப்புக்கு வழியேது?
வெள்ளம் போலப் பிள்ளை பெருத்தால்
விளைவுக்கு நிலமேது? மச்சான்—நாட்டில்
வீட்டிற்கு மனையேது? 5

அடுபசித் துன்பம் மடமை வறுமை
அளிப்பதே பல குழந்தை மச்சான்!—கவலை
அளிப்பதே பலகுழந்தை!
குடும்பக் கட்டுப் பாட்டு நிலையம்
குழந்தைத் துயர்ஒழிக்கும்!—மச்சான்—அங்குச்
சென்றால்
குடும்பத் துயர்ஒழியும்! 6

கணவன் :

பெண்ணே! கண்ணே! பெருமனை யாட்டி!
பேச்சிற் கினியவளே!—செல்லாத்தா!—அறிவுப்
பேச்சிற் கினியவளே!
உண்மை உணர்ந்தேன் அறிந்தேன் தெளிந்தேன்
உனக்கென்ன வேண்டுமடி?—செல்லாத்தா!—கேள்நீ
உனக்கென்ன வேண்டுமடி? 7

மனைவி :

மக்கள் இரண்டு பெற்றால் போதும்!
மகிழ்ச்சியில் வாழ்ந்திடலாம்!—மச்சான்!—நாம்
மகிழ்ச்சியில் வாழ்ந்திடலாம்!
மக்கள் குறைந்தால் வறுமை குறையும்!
வாழ்வின் வளம்பெருகும்!—மச்சான்!— நாட்டில்
வாழ்வின் வளம் பெருகும்! 8

இருவரும் :

இன்பக் குடும்பம் இரண்டொரு குழந்தை
இருக்கும் குடும்பம் என்போம்!—வளத்தைப்
பெருக்கும் குடும்பம் என்போம்!
அன்பும் அறனும் அறிவும் நிறைக்கும்
ஆன்ற குடும்பம் என்போம்!— புகழை
ஈன்ற குடும்பம் என்போம்! 9

# கருத்தடை வேண்டும்

பெருத்த மக்கள் இந்திய நாட்டின்
பெருநோய் ஆனாரே!— முத்தம்மா!—கொல்லும்
கொடுநோய் ஆனாரே!
கருத்தடை செய்வதே பொருத்தம் நாட்டின்
கவலை நீங்கிடுமே!— முத்தம்மா!
கவலை நீங்கிடுமே! 1

இந்த நாட்டில் பிறக்கும் குழந்தை
எண்ணிக்கை கூறட்டுமா?—முத்தம்மா!
எண்ணிக்கை கூறட்டுமா?
இந்த நாட்டின் பிறப்பு இறப்பின்
ஏற்றம் சொல்லட்டுமா?—முத்தம்மா!
ஏற்றம் சொல்லட்டுமா? 2

ஒவ்வொரு நாளும் சேலத்து மக்கள்
ஊருள் பிறக்கின்றார்!—இந்திய
ஊருள் பிறக்கின்றார்!
ஒவ்வொரு பத்து நாளும் சென்னை
ஊரார் பிறக்கின்றார்!—முத்தம்மா!
ஊரார் பிறக்கின்றார்! 3

பத்தாண் டுக்குள் பதினைந்து கோடி
மக்கள் பெருகிவிட்டார்!—முத்தம்மா!
மக்கள் பெருகிவிட்டார்!
செத்தவர் குறைவு பிறப்பவர் மிகுதி
செய்யும் வழியாதாம்?—முத்தம்மா!
செய்யும் வழியாதாம்? 4

ஆண்டுக்கு ஒன்றரைக் கோடி பிள்ளைகள்
அடுக்கடுக்காய்ப் பிறந்தால்—முத்தம்மா!
அடுக்கடுக்காய்ப் பிறந்தால்
வேண்டும் உணவும் வீடும் கிடைக்குமோ?
வேலை கிடைத்திடுமோ?—முத்தம்மா!
வேலை கிடைத்திடுமோ? 5

ஆலைகள், கற்கச் சாலைகள் கட்டியென்?
ஆக்கம் பலபுரிந்தென்?—முத்தம்மா
ஆக்கம் பலபுரிந்தென்?
மேலைய நாட்டினில் மக்கள் குறைவினால்
மேன்மையாய் வாழுகின்றார்!—முத்தம்மா! 6
மேன்மையாய் வாழுகின்றார்!

பிள்ளை பலபெற்ற தாயின் உடல்நலம்
பேணுதல் எப்படியாம்?—நற்றாயைக்
காணுதல் எப்படியாம்?
வெள்ளக் கொடுமையே பிள்ளைப்பெரு வெள்ளம்
வேறென்ன சொல்வதுவாம்?—முத்தம்மா!
வேறென்ன சொல்வதுவாம்? 7

அளவாய்க் குழந்தைகள் பெற்ற குடும்பத்தில்
அறிவு வளம்பெருகும்!—குழந்தை
அழகு வளம் பெருகும்!
பிளவு பொறாமை நோய்நொடி யாவும்
பேரற்று அழிந்துவிடும்!— பொருள்பல
சீருற்று ஓங்கிவிடும்! 8

நம்முடை இந்திய நாடோ வறுமை
நாடென் றறியாயோ?—முத்தம்மா!
நாடென் றறியாயோ?
செம்மையாய் வாழக் கருத்தடை வேண்டும்!
சிந்தித்துப் பாராயோ?—முத்தம்மா!
சிந்தித்துப் பாராயோ? 9

# இசைக்குரியார்

## அறிஞர் அண்ணா வாழியரே!

வானைப் போன்ற அறிவாற்றல்
    வாய்த்தோன்! அருங்குணம் வாய்த்தோனாம்!
தேனைப் பாய்ச்சும் செஞ்சொல்லான்!
    தெருண்டவர் வியக்கும் பேச்சழகன்!
ஊனை உயிரை நல்லுணர்வை
    ஊக்கும் தென்றற் பூங்காற்று!
ஆணே றழகன் எம்அண்ணா!
    அறிஞர் அண்ணா வாழியரே! 1

இருளைப் போக்க உலகினிலே
    எழுந்த தொடுவான் இளம்பரிதி!
உருளும் இடியென முழங்கிடுவோன்!
    ஊருக் குழைக்கும் பாட்டாளி!
வெருளும் நுகத்துக் காளைகளை
    மெல்ல அடக்கும் நல்லுழவன்!
அருளும் குணத்தோன் எம்அண்ணா
    அறிஞர் அண்ணா வாழியரே! 2

மக்கள் போற்றும் இளவேனில்!
    மாணவர் கற்கும் தொகைப்பாடல்!
சுக்குத் திப்பிலி மிளகென்னும்
    துயரைப் போக்கும் மாமருந்து!

திக்குப் புகழ்சேர் திராவிடத்தின்
　　தீரன்! விடுதலைப் போர்த்தலைவன்!
மக்கள் தலைவன் எம்அண்ணா!
　　அறிஞர் அண்ணா வாழியரே! 3

ஏழை செல்வன் இல்லாத
　　இன்பத் திராவிட நாடடைய
வாழ்வை இளமை முதற்கொண்டே
　　வகுத்தோன்! தம்பியர் தொகுத்தோனாம்
சூழும் கடலூர் திராவிடத்துத்
　　துணைவன்! விடுதலைப் படைத்தலைவன்!
வாழ்க அண்ணா! எம்அண்ணா!
　　அறிஞர் அண்ணா வாழியரே!! 4



---

இக்கவிதை 1964ஆம் ஆண்டு நவம்பருக்கு முன் எழுதப் பட்டது.

# நமதண்ணா வாழியரே!

சீர்மேவு காஞ்சித் திருமகன் அண்ணா செழுந்தமிழைப்
பார்மேவு மக்கள் மனத்தில் விளக்கிப் பசுமரம்சேர்
கூர்மேவு ஆணியெனக் கூறும் திறத்தோன்! குளிர்விழியோன்!
நீர்மேவு நீள்கடல் போல நிலைத்தண்ணா வாழியரே! 1

தேன்மிகு செஞ்சொல் திறத்தால் திசைமாறும் செந்தமிழர்
கூன்மிகு நெஞ்சைக் கொடுமை அரசைக் குடிகெடுக்கத்
தான்வளர் நாட்டில் தலைநிமிர் இந்தியைத் தட்டியோட்ட
வான்எழு ஞாயிறு வந்தான் நமதண்ணா வாழியரே ! 2

மக்கள் துயருறும் மடமை அரசியல் மாய்ப்பதுவே
மக்கள் பிறவியை வாய்த்தவர் கைக்கொள் அறச்செயலாம்!
மக்கள் அறிவை வளத்தை அரசைத் திருத்திடுவோன்
மக்கள் தலைவன்நம் அண்ணா மலைபோல வாழியரே! 3

சூழும் அலைகடல் முப்புறம் சூழ்ந்திடு தென்னகத்து
வாழ்வை அரசை வளஞ்செய் மலையிடை வந்துதித்த
ஆழ்கடல் ஞாயிறாம் அண்ணா தமிழர் தனித்தலைவன்
ஏழெட்(டு) அகவையை எட்டினன் வாழியர்! வாழியரே! 4

உலையில் கொதிக்கும் உணவாம் அரிசிநல் காய்கறிகள்
விலையை எதிர்த்துச் சிறையில் இருந்தே வெளிவந்தோன்!
கலையை வளர்த்தே தமிழை வளர்க்கும் கருத்துடையோன்:
மலையில் பிறந்த மருந்தாம் எமதண்ணா வாழியரே! 5

சந்தில் மறைந்தும் பசுத்தோல் அணிந்தும் தமிழ்ஒழிக்கப்
பொந்துப் புலியாம் புகவரும் இந்திப் புணர்மொழியை
எந்தத் திசையில் வரினும் எதிர்த்துச் சிறைபுகுந்து
வந்தவர் அண்ணா! அறிஞர்! வளத்துடன் வாழியரே! 6

மக்கள் மனத்துள் படிந்த பழமையாம் மாசுகளைச்
செக்கச் சிவந்தநற் செந்தேன் மொழியால் செவியுறுத்திச்
சிக்கல் அவிழ்க்கும் நமதண்ணா வாழியர்! நாலிரண்டு
திக்கில் புகழைப் பரப்பிச் சிறப்புடன் வாழியரே! 7

என்றும் அரசியல் ஏற்றம் அடைந்தால் இனிமைமிகும்!
நன்றே அரசியல் நாட்டிட வேண்டும் நலம்பெருகும்!
என்றே அமைச்சை அரசை அணுகி அறிவுரையாம்
பொன்றும் கருத்தைப் புகலும் அண்ணா வாழியரே! 8

உறங்கும் புலியாம் தமிழகம் வாழும் உடன்பிறப்பைக்
கறங்கும் முரசெனக் கற்றவர் கல்லார் மனம்பதிய
அறங்களைக் கூறி அரசியல் கூறி அறிவுறுத்தும்
திறஞ்சேர் முதலமைச்(சு) அண்ணா புகழுடன் வாழியரே! 9

முப்பால் முழுதும் படிக்கத் தமிழர் முனைந்துவிடில்
தப்பா(து) அறமும் அரசும் வளமும் தழைத்திருக்கும்!
எப்பார் உலகும் இனிக்கும் திருக்குறள் வள்ளுவரை
ஒப்பார் அறிஞர் நமதண்ணா ஒப்பாராம் வாழியரே! 10

புன்னகத் தீஞ்சொல் புதுமை எழுத்தால் புதுக்கருத்தை
நன்னிலை மக்கள் அடைந்திட நாடு வளம்கொழிக்கத்
தென்னக வால்டேர் அறிஞராம் அண்ணாநல் கீர்த்தியுடன்
இந்நாள் அய்ம்பதும் ஆறும் அடைந்தனர் வாழியரே! 11

மக்கள் பிறவியில் வாழ்ந்த கறுப்பர் வளமையெலாம்
திக்குத் தெரியாத் திசையினர் உண்டு திளைத்திருக்க
மக்கள் அடிமையை மாய்த்தவர் மாப்புகழ் லிங்கனும்தென்
மக்கள் உளம்நிறை லிங்கனும் எம்அண்ணா வாழியரே! 12

ஏழைப் பெருங்குடி மக்கள் உழைப்பை இருட்டடித்துப்
பேழை நிரப்பும் பெருந்தனக் காரர் பிழைதிருத்தி
வாழ வழியை வகுக்கும் தமிழர் முதலமைச்சர்!
வாழிய அண்ணா! அவர்வழித் தம்பிகள் வாழியரே! 13

---

*இக்கவிதை 1964 ஆம் ஆண்டு நவம்பருக்குமுன் எழுதப் பட்டது.*

# ஞாயிறு நம் அண்ணா!

வானேறி மலைதாவி மலைமுகட்டில் தோயும்
மறிகடலின் மறுபிறப்பாம் காரினங்கள்; நீண்ட
கூனேறிக் கொம்பொடிந்த குறுங்கழுத்து யானை
குன்றத்து மழைகண்டே குரல்கொடுக்கும்; சாரல்
மானேறிப் பிணை அழைக்கும்; மலராடும் தென்றல்;
வளர்புன்னைக் குறிஞ்சியிலே வாழுகின்ற மக்கள்
தேனேறிச் சொட்டுகின்ற செஞ்சொல்லும் வாழ்வும்
செழிக்கவரு ஞாயிறுநம் அண்ணாவே வாழ்க! 1

கொடிபடர்ந்த கிளைதாழ்த்தி மறியூட்டும்; ஆயன்
குழல்ஓசை கேட்டருகில் குதித்துவரும் குட்டி;
மடிபடர்ந்த காம்பிருந்தே வடித்தெடுத்த பாலின்
மணம்வீசும்; வரகுதினை மணம்வீசும்; முல்லை
அடிபடர்ந்த ஆய்ச்சியர்கள் அசைந்துநடை போட
அயலொதுங்கும் பெண்புறவு; முன்னாளின் இன்பம்!
மிடிபடர்ந்த நிலைமாற்ற நல்வாழ்வைக் கூட்ட
விண்ணெழுந்த ஞாயிறுநம் அண்ணாவே வாழ்க! 2

குளத்தினிலே குட்டையிலே தாமரைகள் பூக்கும்;
கூத்தடிக்கும் சிறுவர்போல் மீனினங்கள் துள்ளும்;
களத்தினிலே பிணை அடிக்கக் கார்முழக்கம் கேட்கும்;
கன்னியர்கள் காளையர்கள் கலைபயிலும் மன்றம்
உளத்தினிலே மகிழ்வூட்டும்; உணவுக்கா பஞ்சம்?
ஒப்பில்லா அவ்வாழ்வா இந்நாளின் வாழ்வு?
வளத்தினிலே வாழ்வடைய வழிகாட்ட வந்த
வானெழுந்த ஞாயிறுநம் அண்ணாவே வாழ்க! 3

கடலோடு தொடுவானம் கலந்திருக்கும்; நெய்தற்
கன்னியரும் காளையரும் மணல்மேட்டில் தாழை
மடலோடு மடல்சாய்க்க வரும்அலைகள் தாவும்;
வரிநண்டு வளையோடும்; புன்னைமலர் சிந்தும்;
திடலோடு கட்டுமரம் சிறுதோணி வற்றாக்
கடல்வளத்தின் சீர்பாடும்; இதுமுன்னாள் செம்மை!
குடலோடு குடலொட்டும் கொடுவாழ்வைப் போக்கும்
குன்றெழுந்த ஞாயிறுநம் அண்ணாவே வாழ்க! 4

விண்பூத்த மீனினமும் பூந்தென்றல், சோலை
வேய்பூத்த நீள்மலையும் மலைமுகட்டும் வானும்
கண்பூத்த விரிகடலும் எழுந்தெழுந்தே நீண்ட
கரைமோதும் வெள்ளலையும், திங்கள்ஒளி வீசும்!
பண்பூத்த என்கவிதை ஞாயிறொளி வாழ்வாம்!
பணக்காரர் பாட்டாளி பகுத்துண்டு வாழ
மண்பூத்த ஞாயிறுநம் நல்லறிஞர் அண்ணா!
பாலாற்று மணல்போல வாழ்கபல ஆண்டே! 5

இந்நாட்டில் வாழ்ந்திடுவோர், எழுத்தறிந்த மேலோர்,
இனியமொழி அருகிருந்தோ தொலைவிருந்தோ கேட்டோர்,
தன்னாட்டிற் கேஉழைக்கும் தற்பெருமை இல்லாத்
தனித்தலைவன், குணக்குன்று, காஞ்சிதந்த செம்மல்
தென்னாட்டு ஞாயிறெனச் செவிகுளிரச் சொல்வார்!
செந்தமிழ்போல் நமதண்ணா வாழ்கபல ஆண்டே!
எந்நாட்டுக் காரிருளும் ஒளிசெய்ய வந்த
இளம்பரிதி நமதண்ணா எனவாழ்த்து வோமே! 6

5—9—66

# சுவைகுன்றாச் சொல்லாளர் அண்ணா!


கடல்மல்லைத் திருநாட்டுக் காஞ்சிதந்த செம்மல்!
　　கற்றார்க்கும் கல்லார்க்கும் களிப்பேற்றும் நீண்ட
மடற்றாழை மலர்மணந்து வருந்தென்றற் காற்று!
　　வளர்புன்னைப் பூவிருந்து வண்டெழுப்பும் பாடல்!
இடமகன்ற தமிழகத்தின் இருள்போக்கி வானில்
　　எழுந்தசுடர்! மாற்றாரும் எண்ணியெண்ணி ஏங்க
நடமாடும் அறிவூற்று! தமிழகத்தில் வாய்த்த
　　நல்லமைச்சர் சுவைகுன்றாச் சொல்லாளர் அண்ணா! 1

அலைபிறந்த முத்தாரம்! அழகுமணிக் கோவை!
　　அடர்தென்னை மரத்தோப்பு! சுவைஇளநீர்க் காய்கள்!
மலைபிறந்த நீள்அருவி! மயிலாடு பாறை!
　　வள்ளுவனார் உலகளித்த குறட்பாக்கள்! நீண்ட
குலைபிறந்த செவ்வாழை! குளிர்ந்தமலர் ஓடை!
　　குழலோசை! தமிழ்நாட்டுக் கொடுமைக்கு வேட்டு!
கலைபிறந்த தமிழகத்தின் அரசுக்கு வாய்த்த
　　கதிர்க்கோமான் சுவைகுன்றாச் சொல்லாளர் அண்ணா! 2

முகம்தந்த இளஞ்சிரிப்பு! மூதறிஞர் நெற்றி!
　　முனிவில்லா ஒளிக்கண்கள்! முற்போக்கின் எண்ணம்!
அகம்தந்த தமிழ்ச்சுவையே அடுக்குமொழிப் பேச்சாம்!
　　அன்புள்ளம் அறச்செயலே அவர்வாழ்வின் நோக்கம்!
பகைதந்த ஏச்செல்லாம் பதறாமல் ஏற்கும்
　　பண்பாளர்! அன்பாலே பகைவெல்லும் தீரர்!
வகைதந்த அறிவாலே தமிழகத்தை ஆளும்
　　வழிகாட்டி! சுவைகுன்றாச் சொல்லாளர் அண்ணா! 3

கற்றவர்கள் வியக்கின்ற தனித்தமிழ்மா மேதை!
கலையுலகில் எழுத்துலகில் தனிப்பாதை கண்டோர்!
மற்றவர்கள் துயர்காணின் மனங்கலங்கும் சான்றோர்!
வாய்இனிக்கச் சுவைகுன்றாச் சொல்லாளர் அண்ணா!
வற்றாத பேராறும் வளம்கொழிக்கும் நன்செய்
மலைக்காடும் நனிநிறைந்த தமிழகத்தை ஆளப்
பெற்றெடுத்தோர் பெயர்வாழ்க! தமிழ்மக்கள் வாழ்க!
பெரும்புகழில் நமதண்ணா வாழ்கபல ஆண்டே!' 4

22—8—67



# காக்கும் கரம்!

செஞ்சொற் றமிழால் சிறுமை களையும் சிறுகதையில்
நெஞ்சினை அள்ளும் நிகழ்ச்சியைப் பின்னி நெறிமுறையே
வஞ்சியர் காளையர் வாழ்வினைச் செம்மை வழிப்படுத்தும்
விஞ்சையைக் காக்கும் கரமெங்கள் அண்ணா வியன்கரமே! 1

செம்பொன் உருக்கிச் சிலைசெய்யும் கொல்லர் திறன்மிகவே
அன்பைப் பெருக்கி அறிவைப் பெருக்கி அடர்ந்தபகைத்
துன்பம் விலக்கும் வழியை விளக்கித் துடிப்புமிகு
தம்பியர் காக்கும் கரமெங்கள் அண்ணா தனிக்கரமே! 2

குளத்தினைக் காக்கும் கரையினைப் போலக் குடிமுறையின்
வளத்தினைக் காக்க வழிமுறை காட்ட வருபகையின்
களத்தினை வெல்லக் கலைபயில் சாலையின் கட்டிளைஞர்
உளத்தினைக் காக்கும் கரமெங்கள் அண்ணா ஒளிக்கரமே! 3

பாட்டால் உலகப் பசியை விரட்டும் பணப்பெருக்கம்
ஈட்டி அளிக்கும் ஏழைக் குடும்பம் இனியமுகம்
காட்டக் களிக்கும் உழைப்பால் கவலைகொள் கன்னியர்மேம்
பாட்டினைக் காக்கும் கரமெங்கள் அண்ணா பனிக்கரமே! 4

மங்கும் உலகின் இருளைக் கிழித்திட வானெழுந்து
பொங்கு கடல்மிசைப் புத்தொளி வீசும் புதுநிலவாய்
எங்கும் தமிழை எதிலும் தமிழை இழையவிட்டே
மங்காது காக்கும் கரமெங்கள் அண்ணா மலர்க்கரமே! 5

அல்லும் பகலும் உழைத்து வயிற்றுக் கரிசியின்றித்
தொல்லை அடைந்தோர் மனமும் வயிறும் குளிர்ந்திடவே
கொள்ளை விளைவைக் கொடுத்துத் தமிழர் குடியரசை
எல்லெனக் காக்கும் கரமெங்கள் அண்ணா எழிற்கரமே! 6

காட்டைப் பிடித்த கரும்புகைத் தீயெனக் கால்நிறுத்தா
ஓட்டைக் குடிசை எரிந்திடக் கண்டே உளங்கலங்கி
நாட்டின் பெருங்குடி ஏழை விழியில் நகைமிளிர
வீட்டினைக் காக்கும் கரமெங்கள் அண்ணா விறற்கரமே! 7

பண்டைய வாழ்வும் வளமும் மிகுந்த பழந்தமிழோ
தொண்டியைப் போலத் தொலைந்ததை எண்ணித் துடிதுடித்தே
அண்டையர் நாண அருந்தமிழ் பேணி அரசியலில்
வண்டமிழ் காக்கும் கரமெங்கள் அண்ணா மழைக்கரமே! 8

வாக்கினைக் கேட்டு மனஇருள் ஓட்டி வருந்தமிழர்
வாக்கினைக் கேட்டு வழங்கி அரசின் மணிமுடியைத்
தூக்கினர்; சூட்டினர்; துள்ளினர்; தூய்மைத் தமிழரசைக்
காக்கும் கரமெங்கள் அண்ணாதுரை யின்நெடுங் கரமே! 9

28—8—'67

# அமைச்செனப்படுவது நினதே

இவரியா ரென்குவை யாயின், இவரே
தொண்டைநன் னாட்டின் துறைதொறும் கலங்கள்
நிறைத்துப் பொருளை நிறைத்துப் புகழைத்
தமிழக மிருந்தே தடங்கடல் தாண்டி
உலகுக் களித்த ஒப்பிலாப் பல்லவர்
ஆண்ட காஞ்சி அளித்த அண்ணா!
தென்னக முதல்வர்! என்னகத் தலைவர்!
உலகம் வியக்கும் ஒப்பிலா அறிஞர்!
பிறர்வாய் அடக்கும் பேச்சிற் பெரும்புலி!
வள்ளுவர் குறளின் உள்ளுறை பெரும்பொருள்!
தம்பியர் கண்ட தானைத் தலைவர்!
வரியைக் குறைத்து வறுமை குறைத்து
நெறியோ டாண்ட நீள்புகழ் மன்னர்
வளர்த்த சங்கத் தமிழின் மாண்பை
உலகத் தமிழர்க்(கு) குணர்த்திய செம்மல்!
இனியர் எளியர் எவர்க்கும் என்றும்!
செந்நெல் வயலும் செழுமலைக் காடும்
புன்னை மணக்கும் நெய்தற் பொருளும்
தன்னகம் கொண்ட தமிழக அரசை
உலகம் புரக்கும் ஞாயிறை ஒப்பக்
காக்கும் அண்ணா அமைச்சர் வாழியர்!
இதுநாள் ஆண்ட அமைச்சருள் எல்லாம்
அமைச்செனப் படுவது நினதே அத்தை!
பூவிரி நீள்கரை வற்றாக்
காவிரி போலக் காக்கநம் அரசே!

*திணை* : பாடாண் *துறை* ; இயன்மொழிவாழ்த்து·

2—2—'68

# புல்வராற்றுப்படை

கடலிடை எழுகதிர்த் திங்கட் காட்சி
மலையிடை ஒழுகும் அருவி வழங்கும்!
செங்கண் கருங்குயில் சிறகடி பட்டே
பொன்னுதிர் வதுபோல் பூக்கள் உதிரும்!
பூக்கொய் தோகையர் புதரிடை மயில்கள்!
கழையாடு கூத்தன் கல்லாக் கடுவன்!
முட்பலா தூக்கி முன்வரு மந்தி
முழவினை ஆர்க்கும் கூத்த முதியவள்!
மான்பயில் சாரல் மலைவழி தாண்டி
ஊணுக் காக ஒவ்வொரு நாளும்
பழுமரம் தேடும் பறவையைப் போலக்
கண்டதும் கேட்டதும் கற்றதும் எண்ணி
மண்டிய இருள்சூழ் மலர்தலை உலகில்
எண்ணி யெண்ணி இரவும் பகலும்
செஞ்சொல் உவமை சீர்தளை கூட்டிப்
பாப்புனைந் தளிக்கும் பைந்தமிழ்ப் புலவ!
அடர்கிளை இருந்தே ஆயன் இசைக்கப்
படர்புலம் மேயும் பால்மடிப் புனிற்றா
நல்கிய பாலும் நற்புளி மோரும்
ஆய்மகள் தருவள்! அருந்திய பின்னர்
மாமரச் சாலை வயல்வெளி கடந்தால்
தாமரைக் குளமும் தாங்கலும் காண்பாய்!
ஊருக் குழைக்கும் உழவர் குடியின்
சீரும் சிறப்பும் சென்றால் புரியும்!
ஏழைகள் எனினும் இன்முகம் காட்டி
வாழை விரிப்பர் வந்தோர் உண்ண!
விண்மீன் பூத்த விரிவான் போலத்
தண்ணீர் பூத்த தாமரைக் குளத்து
யானை முன்கை மானும் வராலும்
சேலும் செந்நெல் அரிசியும் கலந்த

பைஞ்சோ றளிப்பர்! பசியா றியபின்,
பொழுது விடியப் புட்போல் எழுந்து
தொழுது ஞாயிறைத் தொடர்க வழியை!
கடலலை தந்த சுவைக்கால் நண்டைத்
தொடரும் சிறாரும் தோணியும் காண்பாய்!
நீலக் கடல்மேல் நிமிரும் பரிதிக்
கோலத் தூடே நாவாய் கொணர்ந்த
கட்டு மரமும் கடல்தரு பொருளும்
கொட்டிக் குவித்த குரைகடற் கரையில்
கழியிடைப் பூத்த நெய்தல் விழியால்
எள்ளி நகைக்கும் இளம்பெண் ஒக்கும்!
புன்னை பூக்க முத்து சிரிக்கும்
சென்னைப் பட்டிணம் செல்க! ஆங்கே
தமிழக அரசைத் தாயக அரசை
அமிழ்தெனும் தம்பியர் அரசவை இருக்க
முதலமைச் சாகி முறைசெயும் மேலோன்
கச்சி யோனே! காட்சிக் கெளியன்!
இளைஞர் உளத்திடை எழுதா ஓவியம்!
கிளைஞர்க் கென்றும் கிளைப்பூங் காற்று!
வெஞ்சின மில்லான்! செஞ்சொல் மொழியான்!
அறிவியல் அறிஞன்! அரசியல் அறிஞன்
நெறிமுறை வழுவா நேர்மை யாளன்!
கறைஇலாத் திங்கள்! காய்கதிர் ஞாயிறே!
என்றும் யாண்டும் எவர்க்கும் இனியன்!
நன்றல தறியான்! நற்றமிழ் மேதை!
நிறைகடல் பாயும் நீளாறு போல
முறைவேண்டு வோர்க்கும் குறைவேண்டு வோர்க்கும்
வேண்டியார் வேண்டி யாங்கு விளைக்கும்
ஆண்டகை அறிஞர் அண்ணா!
மூண்ட குறைபல முடிப்பன் செலினே!

1—8—'68

# நாவலர் போற்றும் காவலன்

பாடுக புலவீர்! பாடுக நீடே!
நாடர சாளும் நம்முதல் அமைச்சை!
கத்து கடலும் கடலலை அருகில்
சிற்றுளி செதுக்கிய சிற்பச் சிறப்பும்
நனிசிறந் ததுவே நற்றமிழ்க் கச்சி!
கச்சி யோனே மெச்சும் அண்ணா!
உச்சி மாமலை ஆடும் மழைபோல்
தமிழக மடமை வறுமை தவிர்க்கும்
அமிழ்தினைப் போன்றோன் அறிஞர் அண்ணா!
மிடிமைக் கரிசி குடிமைக் கிருப்பு
நெடியோன் குன்ற நீள்பூம் புகாரைச்
சென்னையில் கவினுற இந்நாள் தேக்கித்
தென்னவர் சீர்த்தியை உலகுக் களித்தோன்!
வரிகூட் டாது மக்கள் அரசின்
உரிமை ஒழுங்கை விரிவு செய்தோன்!
விளைபொருள் படிப்படி ஏறிய விலையைக்
களைந்து வாழ்க்கைக் கொடுமையைக் களைந்தோன்!
அன்னை மொழியாம் கன்னித் தமிழை
இந்நாள் அரியணை அஞ்சா தேற்றியோன்!
நாட்டில் உழைக்கும் நலிமிகு ஏழைப்
பாட்டாளி மக்கள் பசிநோய்ப் பகைஞன்!
பெண்ணிற் பெருந்தகை அண்ணியர் இராணி
மனையின் விளக்காம் வாணுதல் கணவன்!
திங்கள் செந்தமிழ்த் தென்றல் மலர்போல்
எங்கள் முதலமைச்(சு) அண்ணா இனியன்
நாவலர் போற்றும் காவலன்!
பாவலர் பாப்போல் வாழ்கபல் லாண்டே!

2—8—'68

# மாலைவாங்கி வாயேன்!

மலையாடும் மாமயிலே! காஞ்சி அண்ணா
　　மனங்கவர்ந்து போனதினால் மையல் கொண்டேன்!
அலையாடும் சென்னைநகர் முதல மைச்சே!
　　அழுதழுது பசப்பேறி உணவும் இன்றிக்
கலையாடும் மலைச்சாரல் தவழு கின்ற
　　கார்கூந்தல் நின்னயந்தாள் என்றே சொல்க!
விலையாடும் மருதநிலச் செந்நெல் புன்செய்
　　விளைபொருள்கள் விருப்பம்போல் உண்ண லாமே! 1

மண்பூத்த மாமலரில் தங்கித் தங்கி
　　வாய்மடுத்த மதுமயக்கம் மண்டைக் கேறப்
பண்பூத்த அறுகால வண்டே! இந்தப்
　　பாராளும் முதலமைச்சர் அறிஞர் அண்ணா
விண்பூத்த ஒளிச்சுடரைக் கண்டிங் கோர்பெண்
　　மேனியெலாம் பசப்பேற உறக்கம் இன்றிக்
கண்பூத்தாள்: நின்னயந்தாள் என்றே சொல்க!
　　கார்முல்லை மலர்க்காட்டில் களிக்க லாமே! 2

குளத்தினிலே சிறகடித்து மூழ்கி மூழ்கிக்
　　குறுங்கெண்டைச் சேலுண்ணும் செங்கால் நாராய்!
உளத்தினிலே காதலெனும் தீயை ஏற்றி
　　ஊராளச் சென்றுவிட்டார் அறிஞர் அண்ணா!
வளத்தினிலே எக்குறையும் இல்லை! ஆனால்
　　வாழ்வில்லை எனக்கூறி வருக! மன்றல்
களத்தினிலே உன்னிணைக்கே ஏற்ற நல்ல
　　கண்கவரும் மணிதருவேன்! கவலை போக்கே! 3

கானகத்தில் பழங்கோதித் தளிரைக் கோதிக்
　　கண்சிவந்த கருங்குயிலே! கன்னி யர்க்குத்
தேனகத்தில் பாய்ச்சுகின்ற அறிஞர் அண்ணா
　　திசைநோக்கிச் சென்றிடுக! விடியற் காலை
வானகத்தில் திங்களைப்போல் அழகு மாறி
　　நின்னயந்தாள் வாழுகின்றாள் என்று சொல்க!
நானகத்தில் வழிபடுவோன் அறிஞர் அண்ணா
　　நயந்திடுவான்; நற்செய்தி கொண்டு வாயேன்! 4

மாலையிட்ட பைங்கழுத்த செங்கண் கிள்ளாய்!
　　மனக்குறையை நீயன்றிப் பின்யார் கேட்பார்?
காலையிட்ட செங்கதிரோன் அறிஞர் அண்ணா
　　கண்பட்டேன்; நிலைகெட்டேன்; காதல் கொண்டேன்;
ஆலையிட்ட கரும்பானேன்! அணுகிச் சென்றே
　　ஆட்கொள்ள வேண்டுதிநீ! மறுக்க மாட்டார்!
மாலையிட்ட மணநாளுக் கேற்ற நல்ல
　　மலர்மாலை எனக்கொன்று வாங்கி வாயேன்! 5

10—8—'68

# அண்ணா அறுபது

உலகில் பிறந்தே உயிர்வாழ்வோர் தம்முள்
விலையில் விரிசுடரே அண்ணா—மலையிடையில்
தோன்றிய மாமருந்தாய்த் தோன்றித் தமிழகத்தின்
சான்றோனாய் வாழ்ந்தான் தனித்து! 1

தனித்துத் தமிழகத்தின் தாழ்மையைப் போக்க
இனித்த தமிழ்பேசி என்றும்—மனித்தப்
பிறப்புப் பெருவாழ்வு பெற்றிடவே அண்ணா
அறத்தொடு செய்தான் அரசு! 2

அரசில் தமிழரசை நல்லரசாய் ஆக்கி
முரசறைந்து வாழ்த்தினான் மூத்த உரைசால்
நமதண்ணா நல்லறிஞன் பேரறிஞன் அண்ணா!
அமைதியின் தோற்றம் அறி! 3

அறிந்தார் அறியார் அறிவரே அண்ணா
நெறிநின் றொழுகிய நேர்மை!—வெறிகமழ்
பூஞ்சோலை உள்ளே புகுந்து வருகின்ற
காஞ்சி இளந்தென்றற் காற்று! 4

தென்றல் இனிமைநற் றேனினிமை வாய்ப்பேச்சில்
மன்றில் இனிக்கும் நமதண்ணா—முன்றில்
இளநகை இன்சொல் எவரெவர்க்கும் கூட்டும்
உளத்தோன் உயர்ந்தவனாம் காண்! 5

காண அறிவுமிகு கற்றோர்கள் நற்சிலையை
ஓணம் கலக்கும் கடல் ஓரம்—பேணிப்பின்
போற்றிப் புகழ்நட்ட பொற்பறிவன் அண்ணாவை
ஏற்றிப் புகழ்வோம் இனி! 6

இனியாரே அண்ணாவை இவ்வுலகில் காண்பார்?
தனித்தலைவன் தக்கோர்கள் போற்றும்—மனித்த
இனம்சிறக்க வாழ்ந்தோன் இனியன் தமிழர்
மனம்சிறக்க வந்த மழை! 7

மழைமோது நீள்குன்ற மாடத்துக் காஞ்சி
உழைபாய் மலர்க்காட்டின் ஊடே—கழையிடையின்
பின்னே எழுந்து வளரும் இளம்பரிதி
முன்காட்டும் அண்ணன் முகம்! 8

முகம்மறக்கப் போமோநம் மூதறிஞர் அண்ணா
அகம்நிறைந்து போன அறிஞன்—உகம்போற்றும்
அண்ணா வழிநடப்போம் அண்ணன் நமக்கெல்லாம்
விண்ணொளி வெய்யோனே யாம்! 9

ஆங்குறள்போல் தோற்றம்நல் ஆழ்ந்த பொருட்செறிவு
தாங்கி வருஞ்சொல் தமிழ்மறையே—ஓங்கு
புகழ்வளர்த்த அண்ணாவோ பூத்துக் குலுங்கும்
அகழ்வாரைத் தாங்கும் நிலம்! 10

தாங்கும் நிலமாகித் தம்பியரைத் தாங்கிவான்
ஓங்கல் இடைவந்த ஒண்சுடரே!—தீங்கின்றித்
தாய்மொழியைத் தாய்நாட்டைத் தக்கார் புடைசூழ
வாய்மை அரசாண்ட மன்! 11

மன்னர் மடிவளர்ந்த மாத்தமிழின் மேன்மையினைப்
பின்னர் வளர்த்த பெரியோனாம்—தென்னாட்டில்
ஏழை பணக்காரன் இல்லாப் பெருவாழ்வு
வாழ வழிவகுத்த வன்! 12

வன்செயலே வேண்டாதான் மக்கள் மனமென்னும்
நன்செய் விளைவித்த நல்லுழவன்—புன்செய்
இறையிலி செய்தோன் எமதண்ணா வாழ்வின்
மறைவால் மனம்வாடுதே! 13

வாடும் மனத்துள் மறையாத் திருவிளக்கு
நீடு புகழண்ணா நேர்மையோன்—நாடு
செழிக்கவந்த செஞ்சொல் மறவன் பகைநா
அழிக்கவந்த அன்புச் சுடர்! 14

சுடர்விளக் கேற்றியே தூய தமிழர்
படர்இருளைப் போக்கும் பரிதி—மடமை
விளைவால் மிகுந்தபல் வெவ்வேறு சாதிக்
களையைக் களைந்தவன் காண்! 15

*(கடலூர் நகர மண்டபத்தில் இலக்கிய வட்டச் சார்பில் 2—11—'69 அன்று அண்ணா அவர்களின் வீர வணக்க விழாவில் பாடப் பட்ட கவிதை இது).*



# விஞ்சு புகழில் விளங்கக் காண்பாரே!

இவரியா ரென்குவை யாயின், இவரே
தொண்டை நன்னாட்டின் துறைதொறும் கலங்கள்
ஆடி அசைந்து பாடிடு கடல்மேல்
அணியணி யாக அண்டிடு படகில்
வந்து குவியும் மணிபொன் செந்நெல்
முத்து தந்தம் முதிர்மலைத் தேக்கு
நிறைத்துப் பொருளை நிறைத்துப் புகழைத்
தமிழக மிருந்தே தடங்கடல் தாண்டி
உலகுக் களித்த ஒப்பிலாப் பல்லவர்
ஆண்ட காஞ்சி அளித்த அண்ணா!
தென்னகம் ஆண்ட முன்னாள் முதல்வர்!
உலகம் வியக்கும் ஒப்பிலா அறிஞர்!
பிறர்வாய் அடக்கும் பேச்சிற் பெரும்புலி!
வள்ளுவர் குறளின் உள்ளுறை உவமம்!
சங்க இலக்கியத் தீந்தமிழ்ச் சாறு!
குறுந்தொகை மெய்ப்பொருள் கூட்டும் தென்றல்!
தம்பியர் கண்ட தானைத் தலைவர்!
வரியைக் குறைத்து வறுமை குறைத்து
நெறியோ டாண்ட நீள்புகழ் மன்னர்!
வளர்த்த சங்கத் தமிழின் மாண்பை
உலகத் தமிழர்க் குணர்த்திய செம்மல்!
இனியர் எளியர் எவர்க்கும் என்றும்
பணிவுடன் இன்சொல் பகரும் மேதை!
வான்தொடு மலையும் மலையின் சாரல்
மானை வீழ்த்த வாங்கிய சிலையின்
கால்வழிச் செந்தேன் பாயப் பழுக்கும்
கனிமரத் தோப்பும் கதிர்முனை சாய்ந்த
செந்நெல் வயலும் செழுமலர்க் காடும்
புன்னை மணக்கும் நெய்தற் பொருளும்
தன்னகம் கொண்ட தமிழக அரசை

உலகம் புரக்கும் பரிதியை ஒப்ப
முன்னாள் காத்த முதல்வர்! அண்ணா!
அமைச்செனப் பட்டது நினதே அத்தை!
தமிழகம் வாழும் தம்பியர் மக்கள்
நெஞ்சம் திறப்போர் நின்னுரு
விஞ்சு புகழில் விளங்கக்காண் பாரே!

திணை : *பாடாண்* துறை : *இயன்மொழிவாழ்த்து*

1—8—'72

# கலைஞர் நாற்பத்தாறு

சீரார் திருக்குவளைக் கண்மணியே! செந்தமிழர்
ஊராள வந்த ஒளிக்கதிரே! — பேரார்
கருணா நிதியே! கலைஞனே! மூன்று
முரசொடு வாழ்க முனைந்து! 1

கத்து கடல்சூழ் கவின்சேர் திருக்குவளை
முத்துவேல் தந்த முதலமைச்சே! — புத்தம்
புதுமை அரசைத் தமிழரசைப் போற்றி
முதுகுரவர் வாழ்த்த முனை! 2

அஞ்சுகத்தாய் பெற்ற அறிவார் முதலமைச்சே!
செஞ்சொற் கலைஞ! திருநாடு—விஞ்சும்நல்
அஞ்சாமை கேள்வி அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமல் வாழ்க இனிது! 3

துள்ளித் திரிகின்ற காலம் துரைத்தனத்தார்
பள்ளிப் படிப்பின்மேல் பற்றொதுக்கி—உள்ளத்தில்
தாயகத்தின் மேன்மை தனைக்கொண்டாய்! வாழியவே!
காய்கதிர்நீ என்றென்றும் காண்! 4

ஏரோட்டு நல்லுழவர் ஏனல் விளைக்கின்ற
ஈரோட்டுப் பள்ளி இருந்தாய்ந்து —சீர்நட்ட
அண்ணா வழிவந்த ஆன்ற முதலமைச்சே!
பண்ணோடு வாழ்க படர்ந்து 5

அண்ணா வழிவந்த ஆரூர் எழுகதிரே!
பண்ணாகும் செந்தமிழ்போல் பாராண்டு—மண்ணில்
இளமையோ டின்றுபோல் என்றென்றும் நாட்டில்
வளமை பெருக்கியே வாழ்! 6

புத்தம் புதுமை பொலிகின்ற நற்புதுவைச்
சொத்தாய் உனக்களித்த சொத்துண்டாம்!—பித்தாய்!
அதுபழமை கண்டிருந்த புன்னாள் அறிவேன்!
புதுப்புகழில் வாழ்க பொலிந்து! 7

கல்லக் குடியில் கருத்தில்லார் கண்திறக்க
மல்லாடி வெற்றி மலைந்தோனே!—சொல்லாலே
கேட்போர்ப் பிணிக்கும் கிளைஞ! பழந்தமிழ்ப்
பாட்டாய்ப் பயன்விளைத்து வாழ்! 8

கல்லடியும் பட்டாய்! கருத்தில்லார் வாய்வந்த
சொல்லடியும் பட்டாய்! திருக்குவளை—நல்லாய்!
கலைஞனே! காக்கும் முதலமைச்சே! என்றும்
கலைபோல் வாழ்க கனிந்து! 9

கதையெழுதி மக்கள் கறையகல நல்ல
விதைவித்தி வாழும் விறலோன்!—புதைசேற்றைத்
தன்னடிமை யாக்கும் தமிழர் முதலமைச்சன்!
என்றென்றும் வாழ்க இனிது! 10

தோட்டப் புறம்புகுந்து தூய தமிழ்மொழியை
வீட்டிருந்தே ஓட்ட விரைந்துவந்த—கூட்டுமொழி
இந்திக்குச் செந்தீயை இட்ட கலைஞனை நாம்
வந்திப்போம்! வாழ்க மகிழ்ந்து! 11

நாட்டில் நிலைத்திருந்த நாற்சாதி நீள்கொடுமை
கேட்டும்கே ளாதிருந்த கீழோரின்—வீட்டில்
விளக்கேற்றி வைத்தாய்! விரிவுரை தந்தாய்!
வளம்பெற்று வாழ்க மகிழ்ந்து! 12

நாட்டு மலர்தவழும் நற்காற்றே! நற்றமிழர்
பாட்டுப் பயிலும்நற் பாவலனே!—ஊட்டி
வளர்த்த தமிழகத்தை வாழ்வித்தாய்! வாழ்க!
உளத்தில் நிறைந்தாய் உணர்! 13

கூத்தளித்துக் கொள்கைக் குறிவிளக்கி என்றென்றும்
நாத்தழும் பேறியசொல் நாவளித்துச்—சீர்த்த
மதிவிளக்கி இங்குள்ளோர் வாழ்க்கை வளத்தைப்
புதுப்பித்தாய்! வாழ்க பொலிந்து! 14

பெண்டுபிள்ளை நோயுறினும் பெற்றெடுத்த தாய் நாட்டின்
தொண்டு பெரிதென்னும் தூயோனே!—மண்டு
தமிழ்ப்பகையை வீழ்த்துநம் தாயின் மொழியே
அமிழ்தினும் மேலாம் அறி! 15

மற்போருக் கஞ்சான் வாழும் திருநாட்டில்
சொற்போருக் கஞ்சான் திருக்குவளை—விற்போர்
மறவன் கருணா நிதியாம்! வளமை
நிறைவோடு வாழ்க நிலைத்து! 16

இந்த உடலும் இதனின் இடையென்றும்
வந்தியக்கும் மூச்சும் வளமார்நம்—சொந்தத்
திருநாட்டை வாழ்விக்கச் செய்வதுவாம்! வாழி!
கருணா நிதியே கடன்! 17

உளம்நிறைந்த செந்தமிழர் ஒல்லும் வளத்தை
இளங்கோ இசைத்த சிலம்பைக்—களங்கமறக்
கற்றதனால் அன்றோ, கருணா நிதிவாழி!
பெற்றெடுத்தாய் பூம்புகார்ப் பேறு! 18

சென்னைத் துறைமுகத்துச் சீரில்லாப் புற்றரையில்
முன்னை அரசாண்ட மூவேந்தர்—அன்னைத்
திருநாட்டை ஆக்கித் திசைக்கறிவு தந்தோன்
கருணா நிதிவாழி காண்! 19

அண்ணாவின் தம்பியரில் ஆன்ற முதல்தம்பி!
கண்ணே! கருணா நிதியே! இம்—மண்ணாள்
முதலமைச்சே! வாழிநீ! முத்தமிழ் தீமை
எதுவரினும் அஞ்சா தெதிர்! 20

ஓடிப் பொருள்குவிக்கும் ஊர்தியெலாம் ஆட்சிக்குத்
தேடிப் பொருள்குவிக்கச் செய்தவன்யார்?—வாடி
வதங்கிய மக்கள் வயிறு நிறைய
உதவும் கலைஞரென ஓது! 21

புன்செய்ப் புலத்தின் இறையிலி செய்தோன்; என்
நெஞ்சில் நிலைத்த மறவனாம்!—கொஞ்சு
தமிழ்கூறு நம்அண்ணாச் சான்றோனின் தம்பி
அமிழ்தின் இனியவ னாம்! 22

மண்ணாள் முதலமைச்சன் வாய்திறந்தால் போதுமென
எண்ணிக் கிடப்போரை எண்ணுவதோ?—கண்ணின்
மணியாம் கருணா நிதிஎன்போன் காக்கும்
அணியாவான் நாட்டிற் கவன்! 23

நொதுமல் பகையென்று நோக்காது நாட்டில்
பொதுமை முறைசெய்யும் பொறப்ன்—இதுநாள்
அரசாள் முதலமைச்சன்! ஆன்ற கலைஞன்!
உரைசாலப் பெற்றான் உணர்! 24

பாடிப் பிழைக்கும் பறவையாம் பாவலர்க்குக்
கூடிப் பிழைக்கக் கொடுப்போனாம்?—ஈடில்
கலைஞன் கருணா நிதியே அமைச்சன்!
பலபெற்று வாழ்க படர்ந்து! 25

கல்லார்க்கும் கற்றோர்க்கும் காயும் கதிர்போல
எல்லார்க்கும் ஈயும் இயல்புடையோன்!—வல்ல
எனக்கேனோ என்னும் இயல்புடையார் வாழ்க்கை
மனக்கவலை மாற்றும் மருந்து! 26

வெள்ளத்தால் பாழ்பட்ட வேற்று நிலத்தார்க்கும்
வள்ளல்போல் வாரி வழங்குவோன்!—வெள்ளம்
குறையாக் குளிர்பொன்னி ஆற்றோன் கலைஞன்
நறைபோல் இனியனாம் நாடு! 27

தழைவற்றிப் பொய்கைத் தடம்வற்றி நாட்டில்
மழைவற்றி வாழ்கின்ற போழ்தும்—கழைச்சுவை
கண்டெடுத்து நல்கும் கருணா நிதியமைச்சன்
உண்டென் றறிவே உணர்! 28

முன்னேற்ற நற்கழகம் இந்நாள் முடிந்ததென
பின்னே முணுமுணுத்த பேதைகளை—இந்நாள்
தலைதாழ்த்தி வாயடைக்க வந்த தமிழ்மகனே
கலைஞன் முதலமைச்சன் காண்! 29

கட்டி வளர்த்துக் கருத்தில்லார் கைகோத்தே
இட்டு வரும்நல் இயல்புடையோன்—மட்டில்
அகழ்வாரைத் தாங்கும் அறிவுடையோன் என்றும்
புகழோடு வாழ்க பொலிந்து! 30

வேற்றார் நமையடுத்த மாநிலத்து மேலோர்கள்
போற்றிப் புகழும்நற் பொற்புடையோன்—மாற்றார்
மதிக்கும் முதலமைச்சன் மங்காத் தமிழுக்(கு)
உதித்த சுடர்என்(று) உணர்! 31

காட்சிக் கெளியான்; கடுஞ்சொல்லே கற்றறியான்:
வீழ்ச்சி அறியாத மேலோனே!—தாழ்ச்சித்
தளைவெட்டி வீழ்த்தித் தமிழகத்தைக் காக்கும்
உளத்தோன் கலைஞன் உணர்! 32

இன்றுள்ள மாணவர்கள் இன்பத் திருநாட்டை
நன்றே நடத்தும் நடைபயிலப்—பொன்றா!
வழிகாட்டும் எங்கள் வளமார் கலைஞன்
விழிநாட்டிற் கென்றே விளம்பு! 33

தமிழை அரசேற்றித் தக்கோர் வியக்க
நமதரசை ஆளுகின்ற நல்லோன்—நமையெலாம்
ஈன்ற தமிழ்த்தாய் உலகிற்கே ஈன்றளித்த
ஆன்றவிந்த நற்கலைஞன் ஆம்! 34

முரசறைந்து வாழ்த்தி முறைசெய்து காத்தே
அரசாண்டு வாழ்ந்தோர் அரசர்—உரைசால்
கருணா நிதியே! கலைஞனே! வாழும்
தரைபோல வாழ்க தழைத்து! 35

பார்வாழும் மக்கள் பசிநோய் மருத்துவன்
ஊர்வாழ் அமைச்சன் ஒருவன்காண்—சீரார்
கலைஞன் கருணா நிதியே! என் நெஞ்சில்
நிலைத்திருப்போன் வாழ்க நிலைத்து! 36

கண்ணின் மணியைக் கருணா நிதியைஎம்
அண்ணா வழிவந்த ஆண்மகனைப்—பெண்ணரசி
அஞ்சுகத்தாய் பெற்றாள் அவள்வாழ்க! வாழியவே
செஞ்சொற் கலைஞன் சிறந்து! 37

முத்துவேல் தந்த முனைமழுங்காக் கூர்வேலாம்
இத்தரையான் எங்கள் முதலமைச்சன்—பத்தரை
மாற்றுப் பசும்பொன்னாம்! மக்கள் உளமெல்லாம்
வீற்றிருப்போன் வாழ்க மிகுந்து! 38

அண்ணாவின் பின்னால் அரசியலில் என்றென்றும்
புண்ணும் புரையும் புகுமென்றார்—கண்ணிலெலாம்
மண்வாரிக் கொட்டி வளமார் திருநாட்டை
விண்கதிர்போல் செய்தான் விளம்பு! 39

நாட்டில் முரசொலித்து நற்றமிழர் வாழ்கின்ற
வீட்டுத் திருமகனாய் வீற்றிருப்போன்—ஈட்டு
நனிபுகழ்சேர் நல்லோன் கருணா நிதியே!
பனிமலைபோல் வாழ்க இப் பார்! 40

வள்ளுவனை ஈன்ற வளமார் தமிழ்நாட்டுப்
பிள்ளைகளில் அண்ணா பெரும்புகழோன்—உள்ளம்
இனிக்க அரசாளும் எங்கள் கலைஞன்
தனிப்பிறவி என்றிங்கே சாற்று! 41

நாமணக்கும் செஞ்சொல்லான் நல்லோர் வியக்கின்ற
தேமணக்கும் சங்கச் செழுந்தமிழ்ப்பா—மாமணக்கும்
பூமணத்தை வாரிவரும் புத்தம் புதுத்தென்றல்
காமணக்கும் முக்கனியாம் காண்! 42

பொன்னி வளநாட்டின் பொற்புடையோன் என்றென்றும்
கன்னித் தமிழ்மொழியின் காப்பாளன்—மின்னி
இடிக்கும் மழையே கலைஞன்! இனியன்!
குடிகாக்கும் செம்மலெனக் கூறு! 43

புன்னைப் பெருங்கானல் பூத்தவழ்ந்த தென்றலாம்
அன்னைத் தமிழரசி அன்புமகன்—இந்நாள்
கலைஞனாய் வந்தோன் கருணா நிதியே!
நிலைபெற்று வாழ்க நிலைத்து! 44

பூதத்தத் தேன்சொரியும் பொன்னி வளநாட்டின்
காதத்தும் வேங்கைக் கடும்புலிகாண்—ஓதுதமிழ்
மாய்க்க நினைப்போர்க்கு! வல்லோர்க்கும் நல்லோர்க்கும்
வாய்த்த மலையருவி வாழ்த்து! 45

நாற்பத்தா றாண்டு நலம்போல என்றென்றும்
மேற்போர்த்த வானின் விரிசுடராய்ப்—பாற்குடத்துப்
பேர்பெற்ற வாணிப் பெரும்புலவன் வெண்பாப்போல்
சீர்பெற்று வாழ்க சிறந்து! 46

* * * *

பாட்டெழுதி வாழ்க்கைப் பசிப்பிணியை ஓட்டாத
நாட்டில்வாழ் எம்போன்ற நற்கவிஞர்—வீட்டின்
வறுமையை மாய்க்கக் கருணா நிதியாம்!
பொறுமனமே சற்றே பொறு!

*கலைஞர் கவிதை மலருக்காக 2—11—'69*
*அன்று எழுதப்பட்ட கவிதை இது.*

# அஞ்சுகத்தாய் மகன் வாழ்க!

விண்பூத்த இளம்பரிதி கலைஞர் ஏறு!
    தமிழகத்தின் முதலமைச்சர்! வீசு தென்றல்!
பண்பூத்த சொல்லழகர்! நாட்டில் வாழும்
    பாட்டாளிப் பெருமக்கள் தோழர்! தஞ்சை
மண்பூத்த திருக்குவளை மைந்தர்! மக்கள்
    மனம்பூத்த நற்கருணா நிதியார்! நாட்டில்
புண்பூத்த நிலைமாற்றும் அரசை ஓம்பிப்
    புகழோடு பல்லாண்டு வாழ்க நீடே! 1

உண்ணீரின் குறைதீர்த்தார்: சிற்றூர், பேரூர்
    உழைப்பாளிப் பசிதீர்த்தார்; ஏழை மக்கள்
கண்ணீரின் குறைதீர்த்தார்; பரிசுச் சீட்டால்
    காசில்லாக் குறைதீர்த்தார்; வானம் பொய்க்கத்
தண்ணீரின் குறைகண்டு வறட்சி கண்டு
    தத்தளித்த காலத்தும் ஈன்றெடுத்த
பெண்ணீர்மைத் தாயன்பால் மக்கள் காத்துப்
    பேரரசை நடத்துகின்றார் வாழ்க நீடே! 2

நின்றுகுடி செய்திருந்த மனைஇல் லார்க்கு
    நிலமளித்தார்; வீடளித்தார்; அயலூர் எங்கும்
சென்றுவரு பேருந்தின் கட்ட ணத்துச்
    செலவைநனி குறைத்துவைத்தார்; கண்கள் காண
இன்றெங்கும் திருக்குறளை எழுதி வைத்தார்;
    இவரரசு நல்லரசாம் என்றே மக்கள்
மன்றெங்கும் முழங்குகிறார்; அமைச்சர் வாழ்க!
    அஞ்சுகத்தாய் மகன்வாழ்க! கலைஞர் வாழ்க! 3

ஆலைகளைத் திறந்துவைத்தார்; நீண்ட கூவ
ஆற்றினையும் மணக்க வைத்தார்; கற்கும் பள்ளிச்
சாலைகளின் புகுமுகத்தைத் திறதுங் வைத்தார்;
தமிழ்ப்புலவர் வாழ்வளித்தார்; மறந்தார் என்னை!
மாலையிலே காற்றாடும் பேரூர் சென்னை
மறிகடலின் கரையழகைத் திறந்து வைத்தார்;
வேலையிலே ஓய்வுபெற்றோர் தமக்கும் நல்கி
மேன்மையினைத் தமிழரசுக் களித்தார்; வாழி! 4

சொல்லடியும் கல்லடியும் பட்டார்; உண்மை!
தொண்டர்க்கிங் கிவையெல்லாம் பரிசா? சொல்வீர்!
வில்லடியும் வாளடியும் வாங்கி வாங்கி
விடுதலைக்கே வாழ்ந்தஇனம் தமிழர் என்போம்!
கல்லடியும் கசையடியும் தமிழைக் காக்கக்
கண்டவர்தான் நம்கருணா நிதியார்; வாழ்க!
எல்லையிலாப் பேரின்பம் கலைஞர் கண்ட
எம்கல்லக் குடிப்பெயரே! அமைச்சர் வாழ்க! 5

அண்ணாவின் புகழ்மணக்கும் கலைஞர் தம்பி
ஆளரசு நல்லரசு! ஏழை மக்கள்
கண்ணான தமிழரசு! பன்னூ றாண்டு
கழகத்தின் காப்போடு நிலைத்து நின்று
பண்ணான புகழ்பரப்பி மக்கள் காத்துப்
பார்புகழ நம்கருணா நிதியார் என்றும்
அண்ணாவின் வழிபற்றித் தமிழ கத்தின்
அரசாள வேண்டுமென வாழ்த்து வோமே! 6

6—2—'70

# என் பாடல் போல வாழ்க!

தமிழாய்ந்த தமிழ்ப்புலவர் அறிஞர் அண்ணா
    தந்தவழி வந்தவனே! முதல மைச்சே!
அமிழ்தொக்கும் பேச்சாள! ஆன்ற விந்த
    அடக்கத்தின் பெருவிளைவே! கலைஞர் ஏறே!
கமழ்தென்றல் பூங்காற்றே! முத்து வேலர்
    கைதவழ்ந்த நல்யாழே! நாற்பத் தேழில்
சுமைஅரசை ஏற்றாய்நீ! துவண்டி டாமல்
    துயர்துடைத்தாய்! ஏழைகளின் துணைவன் நீயே! 1

அழுத்தமுடன் தான்கண்ட அரிய செய்கை
    அறிந்தவனே உலகத்துள் அறிஞன் ஆவான்!
எழுத்தாளன் பேச்சாளன் என்று பல்லோர்
    இருந்தார்கள்; இருந்தாலும் என்ன கண்டோம்?
குழுத்தலைவன் குளிர்நிலவு கொள்கைச் செம்மல்
    தமிழகத்தின் முதலமைச்சன் குளிர்நீர் ஓடை!
எழுத்தறிந்த என்பாடல் போல நாட்டில்
    ஏற்றமுடன் என்றென்றும் வாழ்க நீடே! 2

9—6—'70

# இன்னும் பன்னூறாண்டிரும்!

வானக் கடல்மேல் வரும்ஓட ஞாயிறென
ஆனா துழைத்தே அறநெறியைப்—பேணும்சீர்
சென்னைத் தமிழ்நெறிச் செம்மல் சிவமுத்தே!
இன்னும் பன்னூறாண் டிரும்! 1

நாட்டுக் குழந்தைகள் நாடாள்வோர் என்றெண்ணிப்
பாட்டாலும் மாணவர்பண் பாட்டாலும்—காட்டும்சீர்
சென்னைத் தமிழ்நெறிக் காவல! தீந்தமிழ்போல்
இன்னும்பன் னூறாண் டிரும்! 2

தமிழுக்கே எந்நாளும் தண்டூன்றும் மேலோய்!
அமிழ்தூறும் செஞ்சொல் அறிஞ! இமைபோன்ற
கன்னித் தமிழ்நெறிக் காவல! வாழ்த்துகின்றேன்!
இன்னும்பன் னூறாண் டிரும்! 3

15—1—'65

# தாத்தா எனத்தமிழ் பாடுவனே!

தாத்தா! மயிலை சிவமுத்துத் தாத்தா! எனதுதமிழ்த்
தாத்தா! வயதிலும் கைத்தடி யூன்றித் தமிழ்க்குழைக்கும்
தாத்தா! வலிவும் வயதும் புகழும் தமிழ்ச்சிறுவர்
தாத்தாவிற் கேஎன்றும் தாத்தா எனத்தமிழ் பாடுவனே!

# சொற்பொழிவு மலை

வான்பிறந்த செங்கதிரும் மழையும் காற்றும்
மண்பிறக்கச் செய்தவுடன் உலகில் எங்கும்
ஊன்பிறக்க உடல்பிறக்க உடலின் ஊடே
உயிர்பிறக்கப் பிறந்துவந்த தமிழர் நாவில்
தேன்பிறக்கப் பிறந்ததுவாம் தமிழும் அந்தச்
செந்தமிழே மறைமலையாம்! நீல வானில்
கூன்பிறக்கும் நிலவினிமை மறைம லைத்தீஞ்
சொற்பொழிவு மலையென்றே கூறு வோமே! 1

சொற்கேட்டால் காதினிக்கும்; சொல்லில் தோய்ந்த
தூயபொருள் மாசகற்றும்; நாவில் என்றும்
கற்கண்டைக் கண்டதுபோல்இனிக்கும்; நெஞ்சில்
களிப்பேற்றி நெறிமுறையை விளக்கிக் காட்டும்;
நற்றொண்டைச் செய்யநமைத் தூண்டும்; தூய
நலக்கவிதை வளம்சேர்க்கும்; அறிவைச் சேர்க்கும்;
மற்றொருவர் இனிப்பிறப்ப துண்டோ பேச?
மறைமலையார் சொற்பொழிவு மலையென் போமே! 2

இனித்தமிழும் தழைத்திடுமோ? தனித்து நின்றே
இயங்கிடுமோ? எனப்பல்லோர் இளித்த போது
தனித்தமிழில் பலநூலும் பேச்சும் தேக்கித்
தந்தவர்யார்? மறைமலைபோல் எவரிங் குண்டாம்?
குனித்திருந்த தமிழ்மொழியும்; இடைபு குந்த
குறைமொழியும் வாழ்நாளில் விலக்கித் தள்ளி
மனித்த இனம் தலைநிமிரச் செய்த மாண்பு
மறைமலையார் சொற்பொழிவு மலையென் போமே! 3

வடமொழியும் தென்மொழியும் வந்து சேர்ந்த
ஆங்கிலமும் மாசறவே கற்றுத் தேர்ந்து
தொடர்மொழியின் நிலைவிளக்கித் தமிழர் வாழ்வின்
தொன்மையினைச் சொல்வளத்தைச் சமயப் பண்பைச்
சுடர்மொழியால் இருள்போக்கிக் கவிதைப் பேச்சால்
துறைதோறும் துறைதோறும் விளக்கிக் காட்டி
மடமொழியார்க் கறிவூட்டி வந்த எங்கள்
மறைமலையார் சொற்பொழிவு மலைஎன் போமே! 4

உள்ளத்தைத் துறப்பதுவே துறவின் மாட்சி!
உடையில்லாத் துறவியெலாம் போலி யாவார்!
பள்ளத்துக் கார்எருமை பூவை மாந்திப்
பகலெல்லாம் பால்சொரியும் வயல்கள் சூழ்ந்த
தெள்ளுதமிழ் நாட்டகத்தே இல்லி ருந்த
சீர்பெற்ற துறவியர்கள் பல்லோர் போல
வள்ளுவரைப் பின்பற்றி இல்லி ருந்த
மறைமலையின் சொற்பொழிவு மலையென் போமே! 5

20—3—'68

# சிதம்பரனாரே பிள்ளை!

வான்தழுவும் பனிபடர்ந்த வெள்ளிமலை வளர்ந்துநீண்டு
வடக்கில் நிற்கும்!
கூன்தழுவும் நீளாறு வற்றாது குளிர்மைதேக்கிக் குதித்துப்
பாயும்!
மான்தழுவும் கன்னியர்கள் மறத்தோளர் வாழ்ந்திருந்த
வளமார் எங்கள்
தேன்தழுவும் தாய்நாட்டை அயல்நாட்டார் சூழ்ச்சியினால்
சிதைத்தார் முன்னாள்! 1

பிள்ளையென்றால் உலகத்தில் தாய்வயிற்றை விட்டகன்று
பிறப்போர் எல்லாம்
பிள்ளைகளா? வ. உ. சி. ஒருவனைநான் என்றென்றும்
பிள்ளை என்பேன்!
கள்ளத்தை அறியாதோன்! பன்மொழியைக் கற்றுணர்ந்தோன்
கடல்போல வற்றா
உள்ளத்தில் தாய்நாட்டின் பற்றொன்றே என்றென்றும்
ஊறிப் போனோன்! 2

அல்லுடைத்த செஞ்சுடர்போல் இந்தியத்தாய் அடிமைநிலை
அற்றுப் போகச்
சொல்லுடைத்து வழக்காடித் துயர்கண்ட இடமெல்லாம்
துணையாய் நின்று
நெல்லுடைத்த அரிசியென உண்மைநெறி பன்னாளும்
நிலைக்கச் செய்தோன்
கல்லுடைத்தான் சிறையினிலே தாய்நாட்டின் கால்விலங்கைக்
களைவதற்கே! 3

மனைதுறந்து வளமைபல வழங்குகின்ற செயல்துறந்து
மனைவி மக்கள்
துணைதுறந்து துயர்துறந்து தோள்கொடுத்து நிற்கின்ற
சுற்றத் தோர்கள்
இணைதுறந்து தனையீன்ற தாயகத்தின் விடுதலையின்
ஏற்றத் திற்கே
தனைத்துறந்து கலம்விட்டோன்; செக்கிழுத்தோன் சிதம்பரனார்
தமிழ்மே லோனே! 4

அடலேறு சிதம்பரனார் அவனன்றோ இந்நாளில்
ஆன்றோர் போற்றும்
உடலுயிரில் என்றென்றும் ஊறிப்போன தாயகத்தின்
உயர்ந்த பிள்ளை!
கடலிடையில் கலம்விட்டான்; கடுஞ்சிறையும் கசையடியும்
கண்டான்; செக்கை
நடமாடு மாட்டைப்போல் இழுத்திழுத்து நலிந்தான்; தாய்
நாட்டிற் கென்றே! 5

முன்னாளில் தான்பிறந்த தாய்நாட்டின் கால்விலங்கை
முறிப்ப தற்கே
தென்னாட்டுத் திலகராய்ச் சிதம்பரனார் வ. உ. சி
திகழ்ந்தார்; அன்னோர்
முன்பாட்டின் நல்விளைவே நாம்பெற்ற விடுதலையாம்!
மூத்தோன் வாழ்த்திப்
பொன்போலக் காத்திடுவோம்; புதுப்பொலிவில் வாழ்ந்திடுவோம்
புகழ்சேர்ப் போமே! 6

8—9—'72

# கதைப்பாட்டு

## இதுதான் மருத்துவம்

''நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்'' —குறள்

உலகோர் ஏற்றும் உயர்ந்த பண்பு
கலகலப் பான கனிந்த பேச்சு
பலநூல் ஆய்ந்த பரந்த அறிவு
நகைமுகம் ஒளிவிழி நரைமுடித் தூய்மை
அனைத்தும் ஒருங்கே அமைந்த பெரியார்
மருத்துவ மனையை மாண்புடன் நடத்தி
மக்கட் பணியே வாழ்வென வாழ்ந்து
வந்தார்; அவரை வாழ்த்தார் இல்லை!

நோயைக் கேட்பார்; நோய்முதல் ஆய்வார்;
ஏற்ற மருந்துடன் இன்சொல் சேர்ப்பார்;
''கைவளம் உடையோர்; கையால் அள்ளிக்
கடுகே தரினும் கடுநோய் பறக்கும்''
என்று மக்கள் இன்றும் புகழ்வர்!

தென்னை நிழற்ற புன்னை மணக்க
சிறுசிறு பூச்செடி சிந்தை பறிக்க
ஆற்றங் கரையின் அருகில் அமைந்த
மருத்துவ மனைக்கு வந்தார் ஒருவர்
மருத்துவர் வந்த மனிதனை அழைத்து
செய்தி என்ன செப்புவீர் என்றார்
வந்தவர் சொந்த மகனைக் காட்டி

"பைத்தியம்! பைத்தியம்! பைத்தியம்! என்மகன்
இவன்நோய் தீர்ந்தால் என்னுயிர் நிலைக்கும்
படித்தவன்! பட்டம் பெற்றவன் அந்தோ!
கொடிக்கிவன் ஒருவனே! குறையைத் தீர்ப்பீர்"
என்று மருத்துவர் இருகை பிடித்தார்
ஒன்றும் இல்லா இடக்கை காதில்
ஒற்றி ஒற்றிக் குரலை உயர்த்தி
"ஈடக் ஈடக் ஈடக் டக்கென"
பைத்தியம் சிரித்துப் பாட லானான்
பைத்தியம் பார்ப்பவர் உளங்கவர் அழகன்!
பட்ட தாரி பன்மொழிப் புலவன்
பார்ப்போர் முன்னர்ப் பலமொழி பேசி
"ஈடக்" பாட்டை இயம்பி இயம்பி
எழுந்து சிரிப்பான்! இருவிழி தூக்கி
முறைப்பான், சிரிப்பான், முணறி அழுவான்
தாளம் சேர்த்துத் "தைதை" யென்றே
ஆடுவான்; பாடுவான்; அழுவான்; சிரிப்பான்!

மருத்துவர் வந்த பைத்திய மகனைப்
பரிவுடன் அழைத்தார்; பார்வையால் சிரித்தார்;
பேசிப் பார்த்தார்; பின்புற அறைக்குக்
கூட்டிப் போனார்; மருந்துகள் கொடுத்தார்;
பைத்திய மகனைப் பலநாள் தன்னிடம்
விட்டு வைக்க வேண்டும் என்றே
கூட்டி வந்த தந்தைக்குக் கூறினார்!

"எத்தனை ஆண்டுகள் என்மகன் உம்மிடம்
இருப்பினும் கலங்கேன்; என்மகன் பைத்தியம்
ஒழிந்தால் போதும்; ஒரேஒரு மகனிவன்"
என்று மருத்துவர் இருவிழி நோக்கி
"தீருமா பைத்தியம்?; தீருமா"? என்றே
திரும்பத் திரும்பக் கெஞ்சிக் கேட்டார்!

மருத்துவர் சிரித்து மணிஒலிப் பதுபோல்
''நம்புவோம் வாழ்வோம்! நன்மொழி! என்றார்!

பைத்திய மகனைப் பார்க்க அடிக்கடி
மருத்துவ மனைக்கு வருவார் தந்தை!
ஆண்டு மூன்றும் அகன்றன இடையில்!

பைத்திய மகனோ பைத்தியம் நீங்கிப்
படுத்துக் கொண்டே பலநூல் எடுத்துப்
படித்துக் கொண்டே இருக்கப் பார்த்தும்
அடிக்கடி இடக்கை அழகிய மணிப்பொறி
கண்ணில் ஒற்றிக் காதில் ஒற்றிப்
பார்த்துப் பார்த்துப் பலபல தன்னுள்
பேசிப் பேசி மகிழக் கண்டு
மருத்துவர் அருகில் வந்தார் தந்தை!

மகன்நோய் தீர்ந்த மகிழ்ச்சிப் பெருக்கில்
இருக்கும் தந்தைக் கின்முகம் காட்டி
''பைத்தியம் தீர்ந்தது; பையன் வாழ
வழிஒன் றுளது; மறுக்க வேண்டாம்''
என்று மருத்துவர் இயம்பத் தொடங்கினார்

படித்த மகனின் பைத்தியம் எதனால்
என்று பலநாள் எண்ணி எண்ணி
ஆய்ந்தேன்; காரணம் அறிந்தேன் விரைவில்,
கல்லூரி வாழ்வில் காதல் முளைக்க
அடிக்கடி பழகி அவனும் அவளும்
காதல் வாழ்வில் களித்து மகிழ்ந்தனர்
பிரிந்தனர்; பின்னர் பெரியோர் கலந்து
திருமண வாய்ப்பைத் தேடுவோ மென்றனர்
இடையில் அவளுக்கு இருமல் ஈளை!
வந்தது கண்டாள்; வாடினாள் கன்னி!
தன்நோய் தன்னரும் காதலர்க் கானால்
என்னா வதுவென எண்ணி மனத்துள்

காதலர்க் கொருநாள் கடித மெழுதி
மாங்குயில் கூவும் மாமரக் காவிற்கு
வருக வென்றாள்; வரவேற் றழுதாள்!
திருமண வாழ்வு சிதைந்ததென் றுரைத்து
மறக்கச் சொல்லி வணங்கிக் கெஞ்சினாள்!
மணிப்பொறி எடுத்துன் மகன்கைக் கொடுத்தாள்!
என்இதயம்போல் என்றும் ஒலிக்கும்
காதற் பரிசிது கைக்கொள் என்றாள்!
பிரிந்தனர் இருவரும் பேரிடி தலையில்
விழுந்தவர் போல வீடுவந் தடைந்தனர்
காதல் பரிசு கைமணிப் பொறியைக்
கண்ணெனக் காத்தான் கடத்தினான் நாளை
கைமணிப் பொறியும் களவு போனதுவே!

களவு போன கைமணிப் பொறியைத்
தேடினேன் தேடினேன்; பலநாள் தேடினேன்
கண்டு பிடித்துக் கொண்டு கொடுத்தேன்.
அறிவைப் பெற்றான் அகமகிழ் வடைந்தான்
இதுதான் மருத்துவம்! இதுதான் மருத்துவம்!
மகனின் வாழ்வு வளம்பெற வேண்டில்
காதலி இன்றும் கன்னிப் பெண்ணாய்
உன்மகன் நினைத்தே உயிர்வாழ் கின்றாள்
இருமல் ஈளை இல்லா தொழிந்தது
திருமகள் போன்ற அருமகள் அவளை
மணம்செய் என்றார் மருத்துவர்!
குணம்பெற்று மகனும் குடிசெய் தனனே!

# உலகப் பாடம்

வானை முட்டும் மாமலை உச்சி
தேனடை தொங்கும்! தேனடை உடைத்த
கோலின் வழியே குளிர்தேன் பாயும்!
குரங்குக் குட்டிகள் குந்திக் குடிக்கும்!
வண்டுகள் பாடும்! மான்வெருண் டோடும்!
அருவி முழக்கம் அடர்ந்த சாரல்
பூத்துக் குலுங்கிப் புதுமணம் பரப்பும்!
மலையடி வார மாநகர் ஒன்றில்
வாழ்ந்து வந்தார் மலைக்குகைச் சாமி!

காவி உடையும் கருமைச் சாந்தும்
பாதக் குறடும் பாய்புலித் தோலும்
பொன்பூண் இட்ட புதுமணி மாலையும்
அணிந்தே ஆண்டுக் கொருமுறை ஒருநாள்
மலைக்குகை விட்டு மாநகர் நோக்கி
வந்து மக்கட்கு வழங்குவார் வாழ்த்தே
அந்நாள் நன்னாள் அவ்வூர்த் திருநாள்!
ஒழுக்கம் விளக்குவார் உயர் அறம் விளக்குவார்
அடங்கா மனத்தை அடக்கும் இயல்பினை
விளக்குவார்! வேத விளக்கம் விளக்குவார்!
வெண்ணீறு அளித்தே விலக்குவார் நோயை
கன்னியர் தாய்மார் காளைகள் முதியோர்
வந்தே அவரடி வணங்கித் தொழுவார்!
கண்ணில் ஒற்றிக் கைதொழு திருப்பர்!
குறைசொலக் கேட்பார்; குறையினை மாற்றும்
மறைமொழி உரைப்பார் மலர்முகம் காட்டி
நரகத் தொல்லை நனிபல விளக்கி

மாநகர் மக்கள் மனக்கண் முன்னர்
திரைப்படம் போலத் தெளிய விளக்குவார்
ஒழுக்க உயர்வின் உரைபல நிகழ்த்துவார்!
மலைக்குகைச் சாமி மற்ற நாளெலாம்
கண்முன் தோன்றார் கடுந்தவம் இருப்பார்!
மாநகர் மக்கள் வாயெலாம் அந்த
மலைக்குகைச் சாமியை வாழ்கென வாழ்த்தும்!
மலைப்படி ஏறி மலைக்குகை சென்று
வணங்கும் மக்கள் கூட்டம் வரவரப்
பெருகி மலையின் பெருமை வளர்ந்ததே!
அவரிடம் பயின்ற அடிமலைச் சாமி
காளை வயதினர்! கருஞ்சிகைத் தாடி
கோல உருவினர்; குழைந்த சொல்லினர்
மாநகர் ஒவ்வொரு நாளும் வந்தே
''அறம்பல செய்மின்! ஆண்டவன் நினைமின்!
இறந்தால் கிடைப்பதோ இருபே ருலகம்
ஒன்று மோட்சம் உயர்ந்தவர்க் கதுவே!
நரகம் பிறிது நமக்கவை வேண்டாம்!
அல்லது செய்வோர் அங்கே புகுவர்
செக்கில் அடடா! செந்தீ வாயில்
அட்டைக் குழியில் அடுபாம் பிடையில்
இன்னல் பட்டே இருப்பார் நரகில்!''
என்று பலப்பல எடுத்து விளக்கிச்
சென்று மனைதொறும் சிற்றுரை நிகழ்த்தி
வருவார் மக்களின் மனமெலாம் மாற்றுவார்;
மலைக்குகைச் சாமி மாண்பை விளக்குவார்
திருக்குறள் விளக்குவார் செந்தமிழ் விளக்குவார்
சிறு சிறு கதையால் சிரிப்பை ஊட்டித்
தெய்வ வழியின் தெளிவு காட்டி
அறவழி நடக்க அடிக்கடி உரைப்பார்!

மாநகர் மக்கள் மனம்இடம் கொண்ட
அடிமலைச் சாமியின் அறிவுரை மதியாக்

கொடியன் ஒருவன் அவ்வூர்க் குடிமகன்
கொலைபல செய்வோன் கொள்ளை அடிப்போன்
மலையில் மறைவோன் மாநகர் மக்கள்
வீட்டில் புகுவோன் விளைச்சலைக் கவர்வோன்
சிறைக்குச் செல்வோன் சிறிதும் கலங்கான்
மூடன் முரடன் மூதறி வில்லான்
அவ்வூர் மக்கள் அவனைக் கண்டால்
அஞ்சுவார் அடங்குவார் அறுவடை எலிபோல்!
புலியினும் கொடியன்! புனைபெயர் மலைப்புலி!

ஒருநாள் அந்த ஊரின் கோடியில்
மரங்கள் அடர்ந்த மரக்கிளை தாழ்ந்த
குளத்தில் தாமரை குறுநகை புரியும்!
கன்றை ஈன்ற கருமை நாகு
குளத்தில் மூழ்கிக் கொம்பை உயர்த்தும்!
மாநகர்ச் சிறுவர் மரக்கிளை ஏறித்
திடுமெனப் பாய்ந்து சிறுகுளம் அதிரக்
குளித்து மணலைக் கொண்டு மகிழ்ந்தனர்!
மலைப்புலி வந்து மரநிழல் அமர்ந்தான்!
சிறுவரின் ஆடலில் திளைத்து மகிழ்ந்தான்!

அடிமலைச் சாமி அவ்வழி வந்தார்
மலைப்புலி கண்டார் மனநிலை கண்டார்
இதுவே நல்ல வேளைஎன் றெண்ணி
இன்முகம் காட்டி இளநகை பூத்து
மலைப்புலி அருகே வந்து சிரித்தே
''அன்ப! மலைப்புலி அருந்தமிழ் மகனே!
பன்முறை உனக்குப் பலப்பல சொல்லி
அல்லவை விட்டே நல்லவை செய்ய
அறிவுரை பலநாள் ஆற்றினேன்; மறந்தாய்;
மீண்டும் உனது மேன்மையை வேண்டி
ஆண்டவ னிடம்நீ அடைக்கலம் புகுவாய்!
பொய்கொலை திருட்டுப் புன்செயல் மறப்பாய்!

அறவழி நிற்பாய்! அடைவாய் மோட்சம்!
அல்லவை செய்வோர் அடைவார் நரகம்!
நரகம் கொடிது! நரகம் கொடிதென
அடிமலைச் சாமி அறவுரை நல்க
மாநகர்க் காவலர் மலைப்புலி தேடி
கைது செய்து கடுஞ்சிறை அடைக்க
வருவது கண்டான்; மலைப்புலி மலைத்தான்!
காற்றின் விரைந்தான் கார்தவழ் மலைத்தொடர்
சாரல் ஓடித் தலைமறை வானான்!
தொடர்ந்து செல்லத் துணிவிலாக் காவலர்
நின்றார்; திகைத்தார்; நெடுமூச் செறிந்தார்!
செய்வ தறியாது திரும்பினர் இல்லம்

ஆண்டுகள் இருபதும் அகன்றன இடையில்

ஒருநாள் மலைப்புலி உயர்மலைச் சாரல்
ஓடையைத் தாண்டினான்; உருண்டது பாறை
மண்டை உடைந்தது: மாண்டான் மலைப்புலி
காலத் தூதர் கடுகி வந்தனர்;
அவனுயிர் கொண்டு நரகம் அடைந்தனர்

எரியில் இட்ட எண்ணெய்க் கொப்பரை
நீண்டு நிமிர்ந்த நெருப்புத் தூண்கள்
இடிக்கிப் பொறிகள் இரும்புச் செக்கு
கருந்தேள் செந்தேள் கலந்த பள்ளம்
பாம்புப் புற்று! பாய்புலிக் கூட்டம்
வேழம் வெறிநாய் வேற்படை வீரர்
நிறைந்த நரகில் நின்றான் மலைப்புலி
மூலையில் செக்கில் மூச்சுத் திணறி
அடிமலைச் சாமி அழுவதைக் கண்டான்
அருகில் சென்றான் "அடிமலைச் சாமி!
உமக்கா நரகம்? உமக்கா நரகம்?
ஒழுக்க சீலரே உமக்கா நரகம்?
கொடுமை! கொடுமை!" என்றான் மலைப்புலி!

## 69

அடிமலைச் சாமி அவன்வாய் பொத்தி
"மலைக்குகைச் சாமியும் வந்துளார் நரகம்!
வாய்திற வாதே மறைவோம்" என்றார்
தலையைத் தாழ்த்தி மலைப்புலி
உலகப் பாடம் உய்த்துணர்ந் தானே! 125

# கைதி

மலைகள் முப்புறம்! மறிகடல் ஓர்பால்!
குலைமுதிர் வாழை கொடிபடர் தென்னை
செந்நெல் கரும்பு செழுங்கழை சோளம்
இந்நல் வளனும் இயைந்த பேரூர்
எங்கோ மூலையில் இருண்ட நாட்டில்
தங்கம் மண்ணில் மறைந்திருப் பதைப்போல்
மலையின் சாரலில் வளர்ந்து வந்ததே!

அந்த நாட்டு மக்கள் ஆமைகள்!
வளத்தைப் பெருக்க வறுமையை ஓட்ட
அறியும் அறிவே அறியா திருந்தனர்!
ஏய்த்துப் பிழைக்கும் நரியர்கள் எங்கும்
இருந்ததைப் போல இருந்தனர் அங்கும்!
அவர்களில் வலியோன் சுவர்கள் எழுப்பிக்
கோட்டை அமைத்துக் காட்டைத் திருத்தி
நாட்டின் அரசன் நானென் றிருந்தான்!
ஊமை மக்கள் உயர் அறிவு இல்லார்
அடங்கி ஒடுங்கி அவன்வழி நின்றே
உழைத்தனர்; அரசன் உண்ணக் கொடுத்தனர்!
கோட்டைச் செலவும் கொடிபடைச் செலவும்
நாட்டில் அதிகம்! நலிந்தனர் மக்கள்!
வரிமேல் வரியும் வளர்ந்ததே நாளும்!
நரிகள் கொழுத்தன! நாட்டில் வறுமை
நிறைந்ததே! ஆனால் அரசன் செலவோ
குறைந்ததே இல்லை! 'கொடுங்கள்! கொடுங்கள்!
பொன்னைக் கொடுங்கள்! பொன்னா லான
பொருளைக் கொடுங்கள்! பொன்னைத் திருப்பிக்
கொடுப்பேன் உண்மை! கொடுப்பேன் உண்மை!'

என்றே அரசன் எங்கும் சென்றே
மக்கள் முன்னர் வாய்திறந் துரைத்தான்!
அரசன் சொல்லில் அடக்கம் இருந்தது!
மக்கள் வாழ்வில் வறுமை வளர்ந்தது!
'மழையும் இல்லை! வளர்பயிர் இல்லை!
உழைத்தவர் பொருளை உண்டு திளைத்தோர்
அரசன் தயவை அண்ட வேண்டிக்
கொடுத்தனர் சிலபேர்! குறிக்கோள் இன்றியா
கொடுத்தனர் என்றே கூறினான் ஒருவன்!
'நாட்டின் நிலைமை நன்கறி யாத
மடையன்! மட்டி! மலைப்புற மிருந்தே
வரும்பகை அறியான்! வாயாடி!' என்றே
இடித்தே அவனை எல்லோரும் இகழ்ந்தனர்!
'எண்ணிப் பார்க்கும் இயல்பினன் அவனை
மண்ணில் விட்டால் வருமே விழிப்பு!
விழிப்பு வான்வரு விடிவெள்ளி யாகும்!
விடிந்தால் இருளோ வெற்றிகொள் ளாது!
பின்னும் இவனோ முன்னர்த் தேடிய
குழந்தையைக் கொன்ற கொலையாளி!' என்றனர்!
'சிறையே இவனைத் திருத்தும் சீரிடம்'
என்றனர் சில்லோர்! அரசன் எதிரில்
ஊரை ஏய்த்தே உழைப்பை ஏய்த்தே
உண்டு களிக்கும் உழையாக் கூட்டம்
பாரை ஆளும் அரசின் பாவைகள்
'சிறைஇங் கில்லை; சிறையில் தள்ளித்
திருத்த நினைத்தால் திருந்தான் இவனும்!
தலையை வெட்டித் தள்ளுதல் மேலாம்'
என்றனர்! அரசனும் 'அதுசரி' என்றான்;
தலையை வெட்டும் தகுபொறி வாங்க
அண்டை நாட்டிற் கனுப்பினான் ஆளை!
பொறியை வாங்கப் போனவன் வந்து
விலையைக் கூறினான்! விழித்தான் அரசன்!
'வீண்பொருள் செலவேன்? வெளிச்சிறை வைப்போம்!

கைதியை மறவர் காத்து வருவர்'
என்றனர்! அரசனும் ஏற்றுக் கொண்டான்!

ஆண்டுகள் சென்றன! அமைதியாய்க் கைதி
உண்டு கொழுத்தே ஊரின் நடுவில்
இருந்த வேலிச் சிறையில் இருந்தான்!
கைதியைக் காக்கும் செலவு வரவரப்
பெருகி வந்தது! பெரும்பொருள் அழிந்தது!
செய்வ தறியாது திகைத்தான் அரசன்!
அமைச்சன் ஒருவன் அரசனை அண்டிக்
'கைதியைக் காக்கும் 'காவ லாளை
நீக்கினால் கைதி நில்லாது ஓடுவான்'
என்றனன்! அரசனும் ஏற்றான் முடிவை!

வேலிச் சிறைக்குள் வெகுநாள் சென்றும்
கைதி ஓடக் கண்டார் இல்லை!
உணவுக் காக ஒவ்வொரு நாளும்
வந்தே உணவை வாங்கி உண்டு
வேலிச் சிறைக்கு விரைவான் கைதி!
கைதிக்குத் தப்பும் கருத்தே இல்லை!
அரசன் ஒருநாள் கைதியை அழைத்து
'விடுதலை அளித்தேன் வெளிச்செல்' என்றான்!
கைதி தலைமேல் கையைக் கூப்பி
'வேண்டாம் விடுதலை! வேண்டாம் விடுதலை!-
உணவும் உடையும் ஊரில் யாரே
தருவார் எனக்குத் தப்பித்துப் போனால்?
ஆனால் அரசே! அடியே னுக்குத்
திங்கள் தோறும் சிறுபொருள் கொடுத்தால்
இங்கில் லாமல் ஓடுவேன்' என்றான்!

திங்கள் தோறும் சிறுபொருள் அரசன்
கொடுத்தே வந்தான்! கொலைகாரக் கைதி
அமைதி யாக அண்டை
நாட்டில் வாழ்ந்து நாள்கடத் தினனே!

# பிறை மதி

## இயல் 1

பொன்னொளி மலைஇ டுக்கில்
புகுந்தது; நடுங்கித் தாவிக்
கன்னல்போல் பருத்த நாணற்
காட்டினுள் இடைபு குந்து
முன்னுள்ள பலாம ரத்தில்
மோதிற்று: சாரல் எங்கும்
பொன்மயம்! அந்தி வானம்
புறப்பாட்டுக்(கு) எடுத்துக் காட்டே! 1

காடெலாம் பூவின் தேக்கம்!
கழையெலாம் சிட்டின் கூச்சல்!
ஓடையின் அருகில் தாழ்ந்தே
உயர்ந்திட்ட மரத்தின் மீது
பேடையைப் பிரிந்த ஆணின்
பெருவிளி உருக்கும் நெஞ்சை;
கூடெலாம் அடடா காதல்
கொட்டங்கள் குடைந்து பாயும்! 2

மலையிடைப் பிறந்து பூத்த
மலரிடைக் கலந்து பச்சை
இலைசெடி கிளைகள் தாவி
இன்பத்தின் பெருக்கால் தென்றல்
அலைந்தது; வாரி வாரி
அளித்தது பூநாற் றத்தைக்;
கலைந்தோடி வானில் மேகம்
புதுப்புது அழகைக் காட்டும் 3

கலையின் செறிவாம் பசுங்காடு
காண மாலை வழக்கம்போல்
மலையின் அடுத்த நீள்சரிவில்
வந்தான் வீர பாண்டியனும்;
தலையை நிமிர்த்தி அந்திதரும்
அழகைக் கண்ணால் சரிபார்த்து
விலையில் இயற்கைப் பெருஞ்சுவையை
விழியால் உண்டு கிடந்தனனே! 4

குயிலின் இசையும் குளிர்காற்றும்
கொள்ளை கொள்ளும் பூங்குளமும்
அயலி லிருந்து துணிபிடித்தே
அழைக்கும் காட்டு முட்செடியும்
பெயலை அணைக்கும் வழிமலையும்
பின்னித் தாழ்ந்த நீள்கொடியும்
மயலை ஊட்டப் பாண்டியனும்
வாய்விட் டடடா! என்றனனே! 5

எங்கோ காட்டுப் புதரொன்றில்
இருந்து தமிழன் இசையூற்றைப்
பங்கு கொள்ளக் குயிலொன்று
பாடிக் கூவி அழைத்ததுவாம்!
மங்கும் ஒளியும் மணக்காற்றும்
மன்னர் மகனைப் பாண்டியனைத்
தங்க விட்டு விடவில்லை!
தமிழுக் கடங்கார் எவருண்டாம்? 6

வேறு

சாரல் அருகில் தழைத்த மரமல்லி
வேரில் உதிர்ந்த மலர்மேலே—சீர்பெற்ற
தோகை மயில்கள் அகவும்—துறையெல்லாம்
வாகை குரலை எழுப்புமே—ஆகம்
படிந்த சிறுமயிலைப் பக்கம் விலக்கி
மடிந்தவால் தூக்கும் மயில்!

## வேறு

கோட்டைப்பொன் எல்லாம் குளிர்நிலப் பட்டின்மேல்
மாட்டிவைத்த தைப்போல் மயிற்றோகை—ஈட்டி
முனைபோல் சிறுகொண்டை முள்பெற்ற கால்கள்
பனைவேர் எனப்படு மே!

## வேறு

அருகில் தோன்றும் அரண்மனை மணியும்
அந்தி அந்தியென்று அலறிக் களைத்தது!
மயிலும் பறந்தது; மயிலைத் தாவி
மனமும் பறந்தது: மலைக்கா டெங்கும்
குயிலைத் தாவும் குறவன் போலத்
தேடித் தேடிச் சென்றான் பாண்டியன்!
அங்கொரு பாறைமேல் தங்கி ஏரியில்
மாமயில் ஆடிற்று; வளர்எழில் ஆடிற்று!
எப்படி யேனும் இந்த மயிலை
மடக்கிப் பிடித்து மார்போ டணைத்து
அரண்மனைக் கெடுத்துப்போய் வளர்க்க நினைத்தான்
பூனைபோல் புதரில் மறைந்து மறைந்து
மயிலாடும் பாறை மறைவில் தங்கி
பாய்ந்து பிடித்தான் படரும் மயிலை!
அய்யோ என்றொரு அலரல்; மாமயில்
கையும் காலும் பெற்றதைக் கண்டான்;
வீர நெஞ்சம் வெலவெலத் ததுவே!
மெய்யெலாம் நடுங்க மேலெலாம் வியர்க்க
பொய்மயில் தமிழவேள் பொன்மயில் பிறைமதி
என்ப துணர்ந்தே எரிசுட் டவன் போல்
பொறுத்தருள் என்னைப் பொறுத்தருள் தவற்றை
என்றுகை கூப்பினான் இளமன் னனுமே!

மக்கள் பிழைத்தால் மன்னன் திருத்துவான்
மன்னன் என்பான் மன்னுயிர் ஓம்புவான்
மன்னன் பிழைத்தால் மன்னுயிர் என்னாம்?
என்றாள் பிறைமதி! இருவிழி நீலம்
கடையில் ஒதுங்கி அவள்கண் கண்டு
நடையைக் காட்டிக் காட்டி நகர்ந்ததுவே!
வெட்கினான் வீர பாண்டியன்; தன்னிடப்
பக்கத் திருந்த உடைவாள் பறித்துத்
திருத்தெனை இந்தா திருத்தெனக் கொடுத்தான்!
வாளை வாங்கினாள்; மலர்விழி தூக்கி
ஏற இறங்க இளவலைப் பார்த்தாள்!
போற்றி வீர! குற்றம் திருத்தக்
கொடுத்தாய் இவ்வாளை குற்றம் எனதாம்!...

*(கவிஞர் "பிறைமதி" என்ற பெயரில் காவியம் ஒன்று எழுத நினைத்துத் தொடங்கினார். ஆனால் மரணத்தை வெல்ல இயலா நிலையில் காவியம் முடிவு பெறாமல் நின்று விட்டது)*

## வாழ்த்து

# மலைத்தேன்!

காவேரி நாதன் எழுதும் கவிதைநற்
பாவேறி வந்த படிகண்டேன்! — மாவேறிக்
கோதும் குயிற்பிள்ளை கூட்டும் இளம்பாடல்
காதிற் கினிய கவி! 1

இளநீர் இயல்மிகு காவேரி நாதன்
'இளையர் கவிதை'யாம் ஏட்டின் விளைவே
''மலைத்தேன்'' வரக்கண்டேன்! சற்றே மலைத்தேன்!
மலைத்தேன் மலைத்தேனே யாம்! 2

காவேரி நாதன் கவிபாடி இன்னும்நற்
பாவேறும் சீர்கள் பயிலுகவே! — நாவேறும்
நற்றமிழ்போல் வாழ்க! நலம்பெறுக! என்றென்றும்
பொற்பறிவில் வாழ்க பொலிந்து! 3

30-6-70

*மலேசிய நாட்டுப் பொந்தியான் ஜோகூர் காவேரிநாதன் எழுதிய இளையர் கவிதை மலைத் தேனுக்கு வழங்கிய அணிந்துரைக் கவிதை இது.*

# சீர்பெற வேண்டும் செழித்தே!

பள்ளரும் மள்ளரும்
வெள்ளப் பெருக்கினைப்
பார்த்து மகிழ்ந்துகை
கோர்த்துக் குதித்துமே
பாடிக் களிப்பதே சந்தாம்!—கொட்டி
ஆடி இசைப்பதே சிந்தாம்! 1

தெள்ளு தமிழினில்
உள்ளம் பறித்திடும்
முந்தைத் தமிழ்மொழிச்
சிந்து வகையெலாம்
கன்னித் தமிழ்மகள் சொத்தாம்!—இசைப்
பொன்னித் துறைமுக முத்தாம்! 2

எண்ணத் துடிப்பினில்
வண்ணக் கலப்பினில்
பாவலர் சண்முக
சுந்தரம் பாடிய
உளங்கவர் தீந்தமிழ்ச் சிந்தும்—தெங்(கு)
இளநீர்ச் சுவைதர முந்தும்!

கோவலர் தீங்குழல் 3
பாவலர் சு. மா. ச.
கூவு குயிலிசை
மேவு தமிழ்மொழிச்
சிந்து வளர்ந்து தழைத்தே—மீண்டும்
சீர்பெற வேண்டும் நிலைத்தே! 4

25-9-'71

# குளிரிளநீர்ச் சுவைப்பாட்டு!

வானெழுந்த செங்கதிரோன் தொடுவான மீதும்
மாவாழை தென்னைபலா மரஞ்செடிகள் மீதும்
தேனெழுந்த பூமீதும் பொன்னொளியைப் பாய்ச்சும்!
சிறுகாலை வண்டிசைக்கும் என்றமிழை! வாழ்வை!
ஊனெழுந்த உணர்வோடு கா. வேழ வேந்தன்
உடனெழுந்த பைம்பாடல் இவ்வண்ணத் தோகை
கானெழுந்த கூட்டருவி! கனிபிழிந்த சாறாம்!
கவிஞர்சீர் மேன்மேலும் சிறக்கட்டும் நீடே! 1

வண்டுநிறை மலர்ப்பொய்கை; மலர்ப்பொய்கை யோரம்
வளர்ந்திருக்கும் மரந்தழுவி மலர்ந்திருக்கும் முல்லை!
கண்டுநிறை மகிழ்வடையும் கண்கொள்ளாக் காட்சி
களிப்பூட்டும் தீந்தமிழை என்னுயிராம் வாழ்வைக்
கொண்டுநிறை திருநூலாம் இவ்வண்ணத் தோகை
குளிர்இளநீர்ச் சுவைப்பாட்டைக் கா. வேழ வேந்தன்
மண்டுநிறை நிலைநாட்ட இனிமேலும் பாடி
வளமுட்டிப் பல்லாண்டு வாழட்டும் நீடே! 2

*1971 ஆம் ஆண்டு நவம்பருக்கும் டிசம்பருக்கும் இடையில் எழுதப்பட்டது.*

# தங்கப் பாடல்

புதுநோக்குப் புத்தெண்ணம் என்றே கூச்சல்
போடுகின்ற யாப்பறியாக் கூட்டம் கண்டேன்!
எதுநோக்கு வாழ்விற்குத் தேவை என்ன?
என்கின்ற நல்லெண்ணம் இல்லை இங்கே!
பொதுநோக்கு வேண்டுமெனக் கூறு கின்றார்!
புறப்பாடல் அகப்பாடல் கல்லார் ஆன்ற
மதுநோக்குத் தீந்தமிழாம் தங்கப் பாவால்
மறுமலர்ச்சிக் கவிகண்டேன், மகிழ்ச்சி கண்டேன்! 1

நான்கிழவன்; எனதன்பர் தங்கப் பாவோ
நல்லதமிழ்ப் பேரறிஞர்; கொள்கை வீரர்!
வான்கிழவன் வெய்யோன்போல் தமிழ கத்தின்
வளமைக்குப் பாடட்டும்; அவரின் பாடல்
ஊன்கிழவன் உணர்வுக்கு வலிவேற் றட்டும்!
ஊரேய்க்கும் கோழைகட்கு வழிகாட் டட்டும்!
கூன்கிழவன்; இந்நாட்டுப் பாட்டி மார்கள்
கொல்புலியாய் மாறட்டும் அவர்பாட் டாலே! 2

'பாடுகின்றேன்' என்கின்ற பாடல் கண்டேன்;
பைந்தமிழின் சுவைகண்டேன்! இந்த நாட்டில்
தேடுகின்றேன் நல்வாழ்வை என்று சொல்லும்
திருடனைத்தான் காண்கின்றேன்; அந்தோ! நாட்டில்
வாடுகின்றேன் என்கின்ற மக்கள் வாழ்வின்
வழிவகுக்கும் நற்பாடல் தங்கப் பாடல்!
சூடுகின்றேன் வாழ்த்துமுடி! பன்னூல் மேலும்
தோன்றட்டும்! தங்கப்பா! வாழ்க நீடே! 3

2-3-'74

# தமிழ் வீசும் கதிர்

வானில் ஒளியைப் பகல்வீசும் செங்கதிரும்!
கூனல் பிறையோ குளிர்நிலவில்—தேனில்
இனிக்கும் சுவையை இரவுபகல் அள்ளித்
தனித்தமிழில் வீசும் கதிர்! 1

தென்மொழியைத் தீந்தமிழைத் தென்னாட்டு நல்வாழ்வை
முன்னேறச் செய்யும் முழுமூச்சாய்—இந்நாளில்
வையத் திருள்போக்கி வந்த பகைநொறுக்கச்
செய்யும் கதிரே சிறந்து! 2

அண்டை அயலில் பிறமொழியில் ஆய்ந்தெடுத்துக்
கொண்ட புதுமையெலாம் கூறாக்கி—வண்டல்
இடும்பொன்னி வைகைபோல் என்றென்றும் வாரிக்
கொடுக்கும் கதிர்வாழ்க வே! 3

# நல்வாழ்வைத் தூண்டும் கவிகள்!

எண்ணச் சிறகுகள் என்கின்ற நூல்கண்டேன்
பண்ணின் சுவைசேர் பழம்பாடல்—மண்ணில்
சுவைசேர்க்கும் நல்வாழ்வைத் தூண்டும் கவிகள்
புவிபோல வாழ்க பொலிந்து! 1

தித்திக்கும் பாடல் செழுந்தமிழின் நல்லூற்று
பத்தெட்டுப் பாட்டின் படர்சாயல்—முத்துவிளை
தென்னாடு போலச் சிறந்தோங்கி நூற்கவிஞர்
எந்நாளும் வாழ்க இனிது! 2

நல்ல தமிழ்வளர்தல் நாட்டிடையில் இக்கவிகள்
சொல்லும் திறத்தால் துணிந்திடலாம்—பல்வளத்தில்
வாழ்க பழந்தமிழைப் போற்றி வளவாழ்வில்
சூழ்க தொகைப் பாடல் போல்! 3

# தந்தை பெயர் நாட்டுக!

சீர்மிகுத்த தென்னகத்தே வாழ்ந்திருக்கும் செம்மல்
கூர்மிகுத்த நல்லறிஞர் மாமயிலை முத்து
பேர்மிகுத்த முத்தெழிலன் பிள்ளைகளுக் கென்றே
வார்த்தளிக்கும் நல்லபாப்பா பாச்சுவைத்தேன் தேனே! 1

தாய்மடியை விட்டிறங்கிச் சார்ந்திருக்கும் பள்ளி
போய்மடியை நீங்கிடும்நல் புத்தம்புதுக் கல்வி
தாய்மடியைச் சூழ்ந்திருக்கும் கன்றுகளைப் போல
வாய்மடுக்கும் நல்லபாப்பா வாய்மணக்கும் பாட்டே! 2

முத்தெழிலன் முத்துமுத்தாய் இன்னும்பல நூல்கள்
புத்தெழில்சேர் பூவுலகில் பூநிறைந்த தேன்போல்
சத்தெனவே தந்துதவித் தந்தைபெயர் நாட்டி
இத்தரையில் நற்புகழில் வாழியர்பல் லாண்டே! 3

# எண்ணத் தூண்டும் ஏடு!

திங்கள் செஞ்சுடர் போன்றுமே உலகின்
கங்குல் போக்கிடும் சண்பகம் காண்போம்!
இங்கு வாழ்ந்திடும் தென்னவர் எவர்க்கும்
பங்கை நல்கிடும்! பைந்தமிழ் வாழ்த்தே! 1

அண்ணன் தம்பிகள் அன்பினை மறந்தோர்
திண்ணைத் தூங்கிகள் செந்தமிழ் மறந்தோர்
கண்ணை நற்றமிழ் காட்டியே மலர்த்தி
எண்ணத் தூண்டிடும் சண்பகம் ஏடே! 2

வாழ்ந்தோர் வாழ்ந்திட நல்வழி செய்யும்!
தாழ்ந்தோர் தாழ்ந்ததன் காரணம் விளக்கும்!
வீழ்ந்தோர்க் கென்றுமே மென்விரல் கொடுக்கும்!
ஆழ்ந்தே சண்பகம் நல்கிடும் அறிவே! 3

குறிஞ்சி நீள்மலைக் குன்றிடைப் பிறந்தே
நிறைந்த மாமலர்ச் சண்பகம் நெடுநாள்
மறைந்த மாத்தமிழ் நன்மணம் பரப்பிச்
சிறந்து வாழ்ந்திடச் செப்புவம் வாழ்த்தே! 4

வாழி தென்னவர்! வாழிய வாழ்கவே!
வாழி தாயகம்! வாழிய வாழ்கவே!
வாழி தாய்மொழி! வாழிய வாழ்கவே!
வாழி சண்பகம்! வாழிய வாழ்கவே! 5

# இன்றே போல் வாழ்க

வான்முட்டும் மலைமுகட்டில் மழைக்கூட்டக் காற்றலைக்கும்!
கூன்முட்டும் புகைச்சுருள்போல் குளிர்வானப் பரப்பெல்லாம்

கார்மேகம் தவழ்ந்தோடிக் கதிர்மறைத்துக் கொண்டிருக்கும்!
வேரிடையில் முள்போர்த்து வெடித்திருக்கும் பலாச்சுளையை

மந்திக்கு வாய்நிறைய வழங்கியுணும் ஆண்குரங்கு
செந்தேனை வாய்மடுத்த சிறுகுரங்குக் குட்டியெலாம்

கழையேறிக் கூத்தாடக் கலைபயிலும் தோகைமயில்!
விழைவேறி மதம்பெருக்கும் வெண்தேக்கு நிறைகாட்டில்

பிடிதழுவும் வெண்கோட்டுக் கருங்களிறு கண்டங்கே
இடைதழுவும் மானினங்கள் இயற்கைதரு நல்லின்பம்!

கனிநிறைந்த தமிழகத்தில் நல்லோர்வாழ் தென்னகத்தில்
கனிநிறைந்த நீள்தோப்பு! கயல்புரளும் நீள்வயல்கள்!

மண்ணிடையில் வளம்தேக்க வளைந்துவரும் நீளாறும்
பெண்ணையெனும் பெண்ணைதென் ஆர்க்காடு பெற்றுளதாம்!

தென்னார்க்கா டென்கின்ற கீர்த்திமிகு மாவட்டம்
பொன்னாலும் விளைவாலும் புலவர்நாப் புகழாலும்

நல்லோரை வல்லோரை நலஞ்சேர்க்கும் அறிஞர்களை
எல்லையின்றித் தந்தளித்தே இனப்பெருக்கம் கண்டதுவாம்!

வள்ளியோரில் காரியெனும் மாவள்ளல் பெருங்கொடையை
விள்ளுவதே இயலாதாம்! விரிவான மழைத்துளியாம்!

நற்கபிலர் பாடிவைத்தார்! நாம்மறக்கப் போவதுண்டோ?
பொற்பார்தென் னார்க்காடு புகழ்மிகுந்த நற்குடியில்

செய்யாத்துச் சீர்விண்ணும் பாளையத்தில் செழுமையொடு
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்திருந்த சீனுவாசச்

செல்வந்தர் திருக்குமரன் சந்திரகா சச்செம்மல்!
வல்லோர்கள் புகழ்கின்ற மனங்குளிரும் பேச்சாளன்!

தொடுவானை முத்தமிட்டுத் தொடர்ந்துவந்து நீள்புன்னை
அடிதழுவும் நீலநிற அலைகடலாம்! அவ்வலையின்

பாட்டோசை கேட்டிருக்கும் பனைமரத்து நீள்நாரை
மேட்டோரம் பூத்திருக்கும் வெண்டாழை மலரைத்தன்

இணையென்றே நினைத்தேங்கி இறகடித்துப் பறந்துவரும்!
துணைபிரியார் வாழ்நெய்தல் துறைசேர்ந்த கடலூரில்

வண்ணாரப் பாளையத்து மாதவனார் திருச்செல்வி
பெண்ணரசி சூடாமணியென்னும் பேரெழிலைக்

கலைபயிலும் குழந்தைகளைக் கனிமொழியால் நாடோறும்
விலையில்லா நற்கல்வி விருந்தூட்டும் விரிநிலவை

பெண்ணழகைக் கண்ணழகைப் பேச்சழகை நீலநிற
விண்ணழகை மாமலையில் விரியுமலர்ப் பூவழகை

மின்விளைத்து வளம்விளைக்கும் மிகுபுகழ்சேர் நெய்வேலி
மன்றல்செய் அழகொளிரும் திருமணமா மண்டபத்தில்.

தமிழரசை நடத்துகின்ற அமைச்சரிலே தகுதிமிகு
நமதமைச்சர் தென்னார்க்காட் டமைச்சராம் திருஇராமச்

சந்திரனார் தலைமையிலே தமிழறிஞர் பலர்வாழ்த்த
வந்திருப்போர் மனங்குளிர மணமக்கள் வாழ்கவென

மாலையிட்டு மணமுடித்தான்; வாமனைக்கு மாலையிட்டான்;
சேலையிட்டுத் திருச்செல்வி நம்சூடா மணிமொழியும்

என்றென்றும் இன்றேபோல் இணைந்திருந்து குடியோம்பி
நன்றாற்றிப் புகழ்வளர்த்து நல்லறிவுப் புதல்வர்கள்

ஒன்றிரண்டு பெற்றெடுத்தே உடல்வளத்தில் செல்வத்தில்
இன்றேபோல் வாழ்க இனிது.

20-8-'72

# தூய தமிழ் போல் வாழ்க!

வான நிறம்போல் மறிகடல்போல் இருகண்கள்
போன இடமெங்கும் புதுப்புனலாம்! அப்புனலை

இட்டுச்செல் கால்வாய் இடை இடையில் சேமையிலை
பட்டிச் சிவிறியெனப் பார்ப்போர் மனங்குளிரத்

தென்றற் சிறுகாற்றைச் செடிகொடிகள் மேலெங்கும்
அன்றலர்ந்த பூமணத்தை அண்டி வருவோர்க்கு

மன்றல் புரியும் மணமக்கள் வீட்டார்போல்
சென்ற விடமெல்லாம் செய்துகொண்டே யிருக்கும்!

வயலெல்லாம் செந்நெல்! வரப்பெல்லாம் நீள்தெங்கு!
அயலெல்லாம் கணுக்கரும்பு! அங்குமிங்கு மாகக்

கார்தேங்கி நிற்கும் கவின்சேர் மலர்க்கு ளங்கள்!
ஏர்நடத்தும் பாட்டோ இருசெவிக்கு நல்விருந்தாம்!

வான்முட்டும் கோபுரங்கள் வருவோர் வரவேற்கும்
தேன்முட்டும் பூக்கள் திருவிழிக்கு நல்விருந்தாம்!

அண்ணா மலையார் அமைத்துவைத்த பல்கலைகள்
கண்ணுடையோர் ஆக்கும் கருவூலம்! இத்தனையும்

காண்போர் மனங்கவரும் கவின்சேர் மணிமாட
மாண்புடைய தில்லை வளமாகும்! அவ்வளத்தின்

ஒளிசேர் பழங்குடியின் ஒப்பில்லாத் தோன்றல்
அளித்தளித்த செங்கை அறவோனாம் சுந்தரத்தின்

குடிவிளங்க ஆன்ற குளம்விளங்க வந்த
நெடியோனாம் திருச்செல்வன் சிதம்பரம் நெஞ்சள்ளும்

பாவலர்கள் போற்றும் பரமக் குடிச்செல்வி
காவல் திருவிளக்கை இராஜேஸ்வரிக் கண்ணைச்

சந்தான கிருஷ்ணன் தமிழ்மகளைப் பூங்கொடியை
இந்தநாள் இல்லாளாய் ஏற்றான் பலர்வாழ்த்த!

வானைத் தொடுகின்ற மாமலையின் உச்சியெலாம்
கானக் குயில்பாடிக் கார்தவழ்ந்து கொண்டிருக்கும்!

மழைபடர்ந்த வானில் எழுந்து வருமதிபோல்
கழைபடர்ந்த சாரல் சலசலக்கும் நீளருவி!

மாமலையி லேபிறந்து மன்னர் மடிதவழ்ந்து
பாமலைச் செஞ்சொற் பழம்புலவர் நாவளர்ந்த

கன்னித் தமிழ்த்தாயின் காற்சிலம்பும் குண்டலமும்
மின்னும் வளையும்நன் மேகலையும் செஞ்சொல்லும்

நாற்கூடல் மாடல் நடுத்தெருவு யாங்கணுமே
பாற்குடத்தில் தேன்கூட்டில் பல்லோர் பகிர்ந்தளிக்கும்

மதுரைத் திருநகரில் வணிகர் பெருங்குடியில்
புதுமைச் சுடர்வீசும் பொன்விளக்காம் கல்யாணி

சுந்தரத்தின் செல்வனாம் சூரிய மூர்த்தியை
இந்தநாள் மணமகனாய் இனிதேற்றாய் வாழியவே!

மணம்பெற்ற என்னருமை மணமக்காள் நீவிர்
மணநாள்போல் என்றென்றும் வாழ்ந்திடுக நீடே!

மனைநடத்தும் போது வரும்போகும் தொல்லைபல!
நினைவினிலே உப்பை நினைப்பீர்! சிறிதுப்பு

மிக்கினும் அன்றிக் குறையினும் ஆன்றசுவை
கைப்பேறிப் போகும்! கருத்தில் இதைக்கொள்வீர்!

உங்கள் பெயர்நிலைக்க ஒன்றிரண்டு தீஞ்சுவைச்
செங்கரும்புப் பிள்ளைகளைத் திருநாட்டிற் கேஅளித்துச்

சூழ்க பல்வளமும்! தூய தமிழேபோல்
வாழ்க என்றென்றும் மகிழ்ந்து!

12-7-'20

# புது மகிழ்வில் வாழ்க

செவ்வான் எழுபரிதி செல்லும் திசையெண்ணி
அவ்வழியே நோக்கும் நெருஞ்சிபோல்—கொவ்வை
இதழ்ப்பொன்னி! என்றென்றும் கொண்டான் குறிப்பில்
புதுமகிழ்வில் வாழ்க பொலிந்து! 1

வள்ளியம்மை என்னும் மலிநீர்ப்பூம் பொன்னியைக்
கொள்ளும் குணத்தோய் பழனியப்ப!—வெள்ளம்
உலகூட்டும் தன்மைபோல் உண்டிட்டு வாழும்
கலந்த மனையறமே காண்! 2

ஆன்ற குடிப்பிறந்த அன்பு மணமக்காள்!
ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும்—சான்றோர்
பலர்புகழ் நன்மக்கள் நாட்டிற் களித்தே
உலகொத்து வாழ்க உயர்ந்து! 3

28-6-'74

*'எனை வளர்த்த பொன்னி' எனக் கவிஞரால் கருதப்பட்ட பொன்னியின் ஆசிரியரும், கோலாலம்பூர் தமிழ் நேசன் ஆசிரியருமான திரு. முருகு. சுப்பிரமணியன் திருமகள் வள்ளியம்மை என்னும் பொன்னிக்கு 1-7-'74 இல் திருமணம் நடந்தபோது வாழ்த்திய வாழ்த்துப்பா! இதுவே 7-8-'74 இல் இயற்கை எய்திய கவிஞரின் இறுதிப்பா!*

# பல்சுவை

## பொன் மாலை!

வான்பரப்பும் பொன்னொளியை உண்டு—மாலை
வாய்குலுங்க நகைக்குமலர் கண்டு—கூன்
மாமரத்து நீள்கிளையில்
வந்தடைந்த பெண்குயில்கள் கூவும்!
ஆண்கள் தாவும்!

தேனையுண்ட வண்டினங்கள் சோலை—தனில்
செம்பரிதி சாயுமந்தி மாலை—முச்
செந்தமிழ்ப்பா அமிழ்துதந்த
தீஞ்சுவையைப் பாவலர்போல் மீட்டும்!
இன்பம் கூட்டும்! 1

முன்னிருக்கும் தென்னைமரக் காட்டில்—சிறு
முட்புதரின் முனைஅமைந்த கூட்டில்—பொன்
முட்டைகளைச் சிட்டிணைகள்
விட்டுவிட்டுக் காத்திருக்கும் காலை!
பொன் மாலை!

கன்னிமணப் பெண்நடக்கும் கூறு—போலக்
கரைஉராய்ந்து நகர்ந்துசெல்லும் ஆறு—முன்
கால்மடித்து நீரையுண்ணும்
கலைவிடுத்துப் பிணைஒதுங்கி ஊடும்!
துணை தேடும்! 2

செங்கருப்பங் காட்டெழுந்த நெருப்பு!—மேல்
செவ்வானம் ஏங்குகின்ற தவிப்பு—வான்
தீயணைத்து வந்த நிலா
திரையிடுமே கருஞ்சரிகைச் சேலை!
பொன் மாலை!

பொங்குகடல் நீள்இசையைக் கேட்டு—விண்
பூத்திருக்கும் மீனினத்தைக் காத்து—வெண்
சங்குநிறப் பிள்ளைமதி
தங்கிவிழித் தொளிவீசும் சாலை!
பொன் மாலை! 3

புன்னைமர நீள்கடலின் ஓரம்—கடல்
புரண்டுவரும் மாலைமங்கும் நேரம்—கரை
பூத்திருக்கும் தாழைமடல்
காத்திருக்கும் நாரையைப்போல்—நானே
இருந் தேனே!

என்னருகில் வந்துவிட்டாய்; இன்பம்!—நீ
இல்லையெனில் என்வாழ்வே துன்பம்!—இசை
எழுப்புகடல் போல்கவிதை
எழுப்பியதே என்னுளத்தில் வேலை!
பொன் மாலை! 4

24-11-'66

# என்றன் வீடு!

(கலித்துறை)

என்றன் வீடென இயம்பிடப்
போற்றிட ஏதுரிமை?
உன்றன் வீடெனும் உணர்வினை
உணர்த்திய உன்முன்னோர்
சென்ற செய்தியைச் செப்பிடச்
செவியினில் சேர்த்தாயோ?
என்றும் வீடெனும் இடமெலாம்
எவர்க்குமே இடமாமே! 1

சின்ன வீட்டினில் சேலிய
மேட்டினில் சிறாரோடு
முன்னம் வாழ்ந்ததை முதுமையில்
வாழ்வதை முறையாக்கி
இன்னும் ஏங்கிடும் என்மன
வியப்பினுக் கென்சொல்வேன்?
அன்னை தந்தையின் அன்புளம்
என்னரும் வீடாமே! 2

கன்று மாடுகள் கத்திடக்
கதவினில் கையூன்றிச்
சென்ற நாட்களின் செழுமையும்
வறுமையும் சிரித்தெண்ணி
இன்றும் நாளையும் ஏகிடு
மியல்பினை எண்ணாமல்
நின்றி ருக்கநான் நின்றிடும்
சிறுகுடி நீள்வீடே! 3

கோழி கூவிடக் குழந்தைகள்
உறங்கிட நீள்குப்பை
தாழி கூழடு புகையெனச்
சிறுபுகை தலைநீட்ட
மேழி ஏந்திய உழவரோ
வயல்வெளி மேவாமுன்
''வாழி செங்கதிர்'' வாழ்த்தினை
வழங்கிடும் என்வீடே! 4

சோம்ப லுற்றநான் தூங்கிடத்
தூங்கிடத் தூங்காத
ஆம்பல் போல்விழி அழகிய
பெயர்த்தியர் அண்டிவந்தே
தேம்பல் அன்னையர் சிறுகுளம்
சென்றவர் செயலெண்ணிக்
கூம்பல் நல்லிராக் குளிர்செயக்
குளிர்செயும் என்வீடே! 5

பொன்செய் செங்கதிர் புதரிடைப்
புகுந்திட எழுந்துவரு
விண்செய் விந்தையை வியந்திட
விடியலில் வெளிவந்தே
பண்செய் புட்களின் பாடலில்
அறிவைநான் பறிகொடுக்கப்
புண்செய் மக்களின் குறையினைப்
போக்கிடும் என்வீடே! 6

கன்று தாய்முலை முட்டிடக்
களிப்பினில் காரெருமை
நின்று பால்சொரி நிலையினில்
கொட்டகை நீண்டிருக்க
முன்றில் சிட்டிணை அணிலிசை
முழவயர் தெருத்திண்ணைத்
தென்றல் பாய்ந்திடச் சிரிப்பொலி
பாய்ந்திடும் என்வீடே! 7

நாயு றங்கிட நானுறங்
கிடச்சிறு நலங்கிள்ளித்
தாயு றங்கிடத் தழையிருள்
உறங்கிடத் தாழ்வெள்ளி
போயு றங்கிடப் பொன்னொளி
எழுந்திடப் புலர்காலை
வாயு றங்கிடாப் புள்ளினம்
வாழ்ந்திடும் என்வீடே! 8

வெள்ள மேவிய விரிமலர்
இளநகை மெல்லியலார்
உள்ளம் மேவிய உவகையின்
உருவொளி ஒண்சிறார்கள்
பள்ள நீரினில் படர்ந்திடு
பறவைகள்; கதிர்முன்னே
கொள்ளு மின்பமே குவித்திடு
குடிசையாம் என்வீடே! 9

கொடிய சைந்திடக் குளிர்மலர்
சிரித்திடக் குயில்கூவ
மடிக றந்திடப் பால்வளம்
வற்றிடாக் கொம்பெருமை
அடிபெ யர்த்திடும்; ஆனினம்
அடிக்கடி கன்றுன்னிக்
கடித ழைத்திடும் முகப்பகம்
கவின்மிகு என்வீடே! 10

9-7-'71

*குறிய மாவொடு கூவிளம் இருவிளம் காயொன்று அறிதி "காயது அந்தம் ஊர் தரும்" என்னும் விருத்தப்பாவின்படி காய்ச்சீர் இறுதியில் அமைந்த கலித்துறைச் செய்யுள் இது.*

# குயில்!

## (கலித்துறை)

தேன்மி குந்திடு திருமலர்
பூத்திடு செய்யின்
கூன்மி குந்திடு குளிர்நிழல் 1
ஆலிடைக் கூண்டின்
கான்மி குந்திடக் கரைந்திடு
காக்கைகள் கண்ட
வானி டையெழு மரக்கிளை
வளர்ந்தசெங் குயிலே!

ஏனெ ழுந்துநீ இரவிடைப்
பகலவன் எழாமுன்
தேனெ ழுந்திடு செழுங்கவிப் 2
பாவலர் பாட்டை
வானெ ழுந்துநீ வகையுளி
நீக்கியே வாயால்
கானெ ழுந்துமே பாடுதல்
கண்டனன்; களிப்பே!

பெற்ற தாயினைக் கூண்டிடைக்
கண்டிடு பேற்றை
உற்ற னமெனும் பொய்மையில் 3
மகிழ்ந்தனை; உண்மைச்
சுற்ற மாரெனக் காக்கைகள்
கூவியே துரத்தக்
கற்ற னையவ ரவரினம்
காப்பதே கடனாம்!

புள்ளி பெற்றனை ஓவியப்
　　பொறியென வுடலில்;
வெள்ள மாமலர் மேவிய
　　தேரையைப் போல்நீ
கள்ள மற்றனை; காவினில்
　　கூவிநீ குயிலே
உள்ள மீர்த்தனை உயிரையும்
　　கொடியவர் உணவே! 4

கூடு கட்டிடக் குடிசெயக்
　　கற்றிடாக் குயிலே!
பாடு பாவலர் பாவையர்
　　பற்றுமிக் கூரக்
காடு தாண்டியே காதலர்
　　கண்டுவந் துரைக்க
நாடு முற்றிலும் உன்துணை
　　நாடினர் என்னாம்? 5

இன்ப வாழ்க்கையில் இரண்டறக்
　　கலந்துமே யொர்[illegible]ம்
அன்பு வாழ்க்கையை அடைவதே
　　உயிரின ஆக்கம்!
துன்ப வாழ்க்கையின் தொடக்கமே
　　தனிக்குடி; வேண்டாம்
என்றுரைத்துநீ குடிசெயா
　　திருப்பதும் முறையோ? 6

கூசு கின்றனர் குமரிகள்
　　குயிலிளம் பிள்ளாய்!
காசு நாண்மலர் பிறப்பெனும்
　　வெண்டளைக் கவியோ?

மாசு போக்கிய வீணையில்
　　வடித்திடு பாட்டோ?
பேச வாய்த்தவுன் வாய்மொழிப்
　　பெற்றியைக் கண்டே! 7

கிள்ளை போலுனைக் கிளிமொழிக்
　　குமரிகள் கூண்டில்
தள்ளிப் பாலொடு மிகுபழம்
　　தந்துமே வளர்த்துக்
கள்ளை மீறிடு பேச்சினைக்
　　கற்றிட விழையார்!
கொள்ளை யின்பமாம் உன்மொழிக்
　　கூற்றுணர்ந் தோர்க்கே! 8

காடு சுற்றியே காவினில்
　　கிளைகளில் கண்ட
கூடு சுற்றியே காக்கையின்
　　கூண்டினில் முட்டை
தேடி யிட்டனை; ஆயினும்
　　செழுமரச் சோலை
கூடு கட்டிடக் குறியிலாக்
　　குறைபெருங் குறையே! 9

தெள்ளு தீந்தமிழ்ச் செழுங்கவி
　　வாணனைப் போன்றே
உள்ளம் பொங்கிட உணர்வுமே
　　லெழுந்திட நெஞ்சம்
அள்ளுறு பாட்டினை இசைக்கிறாய்
　　அடிக்கடி; ஆனால்
வள்ளல் யாருளார் இசைப்பொருள்
　　உணர்ந்துமே வழங்க! 10

9-7-'71

*"குறிய மாவொடு கூவிளம் இருவிளம் மாவொன்று அறிதி" என்னும் விருத்தப்பாவின் படி அமைந்த கலித்துறைச் செய்யுள் இது.*

# கலங்கவில்லை!

எதற்கும் கலங்கவில்லை—நான்
எதற்கும் கலங்கவில்லை! 1

மதுமலர் வண்டு
வானம் பாடி
வாழ்வதுபோல் வாழ்வேன்—இசைத்தே
வாழ்வதுபோல் வாழ்வேன்! 2

(எதற்கும்)

அன்னை இழந்தேன்
அப்பன் இழந்தேன்
அன்றும் கலங்கவில்லை—வறுமைக்
கென்றும் கலங்கவில்லை!
முன்னர்ப் புகழ்ந்தோர்
பின்னர் இகழ்ந்தோர்
மூடர் நனிகண்டேன்—வாழ்வில்
மூடர் நனிகண்டேன்! 3

(எதற்கும்)

ஈருயிர் இணக்கம்
இன்பப் பெருக்கம்
என்பார் உலகினிலே—காதல்
என்பார் உலகினிலே!
காரிருள் வானில்
நிலவைத் தேடும்
கதையாய்ப் போனதுவே—காதல்
கதையாய்ப் போனதுவே! 4



(எதற்கும்)

காய்ந்தால் என்னாம்
பேய்ந்தால் என்னாம்
கைப்பொருள் தொலைந்தென்னாம்—தேடிய
கைப்பொருள் தொலைந்தென்னாம்?
மாய்ந்தால் என்னாம்
வாழ்ந்தால் என்னாம்
மாற்றார் பகைத்தென்னாம்—கொடிய
மாற்றார் பகைத்தென்னாம்! 5

(எதற்கும்)

எதுதான் நடந்தால்
என்னதான் எனக்கே
என்றே சிரித்திருப்பேன்—நன்மை
என்றே சிரித்திருப்பேன்
புதுமையும் ஒன்றே
பழமையும் ஒன்றே
போனது வருவதில்லை—நடந்து
போனது வருவதில்லை! 6

(எதற்கும்)

நன்செய் விளைந்தென்?
புன்செய் விளைந்தென்?
நட்டவன் அறுப்பதில்லை—உழுது
நட்டவன் அறுப்பதில்லை!
என்செயல் வேறே
என்குறி வேறே
என்வழியும் வேறே! 7

27-7-'66

# நான் கண்ட கவிஞர்!

அன்னையை இழந்தேன் எட்டாம்
ஆண்டினில்; அழுதேன் இல்லை!
என்னைக்கொண் டவரி டத்தில்
எழுத்தோத விட்டார் என்னை!
அந்நாளில் கண்டேன்! வாழ்வில்
அவரேஎன் ஆசான்! தந்தை!
என்னைநீர் பொறுப்பீர்! நானோ
இருமுறை அழவேண் டும்மே! 1

பாரினைத் திருத்தும் ஆசான்!
பழமையைத் திருத்தும் ஆசான்!
சீர்தளை திருத்தி நல்ல
செந்தமிழ் திருத்தும் ஆசான்!
ஊர்கண்ட ஆசான்! என்றன்
உளங்கண்ட ஆசான்! இன்றோ
வேரற்றுச் சாய்ந்தார்! நெஞ்சில்
வேல்பாய்ந்து வேகின் றேனே! 2

மன்னர்மன் னனையும் மூன்று
மணிப்பெண்ணும் அறிவார் சில்லோர்!
மன்னர்மன் னனைப்போல் ஆசான்!
மனத்தினில் பயின்ற நாங்கள்
தென்மொழி மாண வர்கள்
சிறப்பிடம் பெற்றே வாழ்ந்தோம்!
என்சொல்வேன்! தமிழ் இழந்தேன்!
இருவிழி இழந்தேன் இன்றே! 3

தேன்சொட்டச் சொட்டஎன்றும்
செந்தமிழ்க் கவிதை யாத்த
நான்கண்ட கவிஞர் ஆசான்
நமைவிட்டுப் பிரிந்தார்! என்றன்
ஊன்சுட்டுத் தீய்ந்த தந்தோ!
உளம்சுட்டுக் கொதிக்கு தந்தோ!
வான்சொட்டும் தூறல் ஒக்கும்
மக்களின் கண்ணீர் வெள்ளம்! 4

பைந்தமிழ் வழிவந் தோரே!
பாவேந்தர் பயிற்றத் தேர்ந்த
செந்தமிழ் மாண வர்காள்!
செல்வங்காள்! மன்னர் மன்ன!
இந்தநாள் துணைபி ரிந்த
எமதன்னாய் பழனி யம்மா!
நொந்துளோம் பிரிவால்! நாமே
நோயினை மாற்று வோமே! 5

மனம்நொந்தே இங்குச் சூழ்ந்த
மாணவத் தோழ ரேறே!
இனம்நொந்த போழ்தி லெல்லாம்
நான்கண்ட கவிஞர் என்றும்
சினவேங்கை ஆன துண்டே!
செந்தமிழ் வாழ்ந்த துண்டே!
இனம்காப்போம்! தமிழைக் காப்போம்!
இதுவேநம் வேலை யாமே!! 6

24-4-'64

*பாரதிதாசனார் இல்லத்தில், அவர்தம் மாணவர்கள் ஆசிரியரைப் பாராட்டிய இரங்கல் நிகழ்ச்சியில் பாடியது.*

# சீர்ப்புதுவை

கடற்கரையில் நீள்தாழை
கரையோரம் புன்னைமலர்
இடமகன்ற சீர்ப்புதுவை வாருங்கள்!—தமிழ்
இன்கவிகள் பிறந்தவிடம் பாருங்கள்! 1

கல்லாதார் இல்லாத
கவின்மிகுந்த சீர்ப்புதுவை
வல்லோர்கள் வாழுமிடம் வாருங்கள்!—இருள்
மனமாசைப் போக்குமிடம் பாருங்கள்! 2

மேல்நாட்டுக் கலைவிளக்கம்
விளங்கவைக்கும் சாலைகளும்
தாலாட்டுக் கடற்கரையும் பாருங்கள்!—மேலைத்
தமிழறிஞர் மொழிபெயர்ப்பைக் கேளுங்கள்! 3

மருத்துவம்செய் நீள்மனைகள்
மாமுனிவன் தன்வந்திரி
கருத்துரைக்கும் பல்லோரைக் கேளுங்கள்!—அவர்
காட்டுகின்ற வழிநடந்து பாருங்கள்! 4

காவேந்து தென்னைமரக்
கடலோர வடதிசையில்
பாவேந்தர் கல்லறையில் குந்துங்கள்!—அவர்
பாடிவைத்த படிநடக்க முந்துங்கள்! 5

*1971ஆம் ஆண்டு சனவரிக்கும் மார்ச்சுக்கும் இடையே எழுதப்பட்டது.*

# சௌமிய ஆண்டுச் செய்தி

சூலகத்துக் கார்மேகம் வானில் ஓடித்
துறைதோறும் துறைதோறும் குளிர்மை சேர்க்கும்
காலகத்தை மருவாது வறட்சி தேக்கிக்
கடுங்கோடை ஆக்கியதால் கடந்தஆண்டுக்
கீலகத்தைச் சரிசெய்யும் சௌமி யத்தைக்
கிட்டிடுவோம்! வாழ்ந்திடுவோம்! பிறந்த ஆண்டு
வாலகத்தை நிறைத்திடுக! வறுமை நீக்க
வருகவென சௌமியத்தை வரவேற் போமே!

இவ்வாண்டு வள்ளுவர்க்கோ ஆயி ரத்தை
இரட்டிக்கும் புத்தாண்டாம்! வாழ்க! வாழ்க!
இவ்வாண்டு புத்தாண்டாம்! அண்ணல் காந்தி
இன்றிருந்தால் அவர்வயதோ ஒருநூ றாண்டாம்!
இவ்வாண்டு புத்தாண்டாம்! அறிஞர் அண்ணா
இன்றிருந்தால் அவர்வயதோ அறுப தாண்டாம்!
இவ்வாண்டு சௌமியமே மக்கள் வாழ்வில்
இன்பத்தை நிறைத்தருள்! வரவேற் போமே!

குளத்தினிலே நீர்நிறைக! குளத்தில் பூக்கும்
கொடிமலர்கள் மலிந்திடுக! நன்செய் புன்செய்
வளத்தினிலே பழுத்திடுக! காட்டில் மேயும்
மாடுகன்று கொழுத்திடுக! வறுமை இன்றிக்
களத்தினிலே வளம்பெருக்கி இங்கு வாழும்
கற்றோர்க்கும் மற்றோர்க்கும் வாரித் தந்தே
உளத்தினிலே அறநெறியை ஓம்பிக் காப்போம்!
ஒப்பில்லா சௌமியத்தில் வாழ்வோம் நாமே!

தன்னாட்டைப் பொன்னாட்டைத் தான்பி றந்த
　　தாய்நாட்டை அழிப்பதற்குச் சீறி வந்த
முன்னாட்டுப் பெரும்படையைக் கொள்ளி வைப்பை
　　முறியடிக்க இயலாத அரசை வாழ்வை
மின்னாட்டு வாள்வீச்சால் தனித்து நின்று
　　வெற்றிகொள்ளும் தறுகண்மை மிக்க வீரன்
எந்நாட்டும் புகழ்பரப்பி நாட்டைக் காத்தே
　　இருந்திறந்து போனசெய்தி கேட்ட துண்டாம்! 4

வான்பெய்ய புல்பூண்டு மரங்கள் தோன்றி
　　மலர்பெய்ய வண்டினங்கள் தேக்கி வைத்த
தேன்பெய்ய மலைமுகட்டில் நன்செய் புன்செய்
　　செந்நெல்லும் முக்கனியும் கறவைப் பாலும்
கான்பெய்யக் களித்திருந்த அந்த நாளும்
　　களிபெய்யக் கண்டிருக்கும் இந்த நாளும்
கூன்பெய்யும் பிள்ளைமதிப் பாணி பாணன்
　　குடியரசை வளம்செய்தார்; கேட்ட துண்டாம்! 5

நீர்தேக்கி நிலம்விளைத்து நிலத்தின் மீது
　　நெடுமாடக் கூடம்நல் கோட்டை கட்டி
ஊர்தேக்கி உயர்வானை முட்டு கின்ற
　　ஓங்கலிடைக் கல்பிளந்து சிலைகள் சிற்பச்
சீர்தேக்கிச் செங்கல்லால் கோபு ரங்கள்
　　திருக்குளங்கள் படித்துறைகள்; கோயில் முன்னர்த்
தேர்தேக்கி நல்வாழ்வின் செழுமை தேக்கிச்
　　சென றவர்கள் பலராவார்! கேட்ட துண்டாம்! 6

பொய்கூட்டிச் சுவைகூட்டிப் புளுகு கின்ற
　　திறமைமிகு போக்கற்ற புலவ ரெல்லாம்
மெய்கூட்டிக் கதைத்ததனால் நாட்டில் மக்கள்
　　விதிவிதியென் றேமாந்தே சோம்பல் உற்றார்!

சேறுகூட்டிக் குழப்புகின்ற எருமை போல
வாழ்ந்திருந்த நாட்களிலே அறிஞர் தோன்றிக்
கைகூட்டி மனத்திடையில் நிலவி வந்த
காரிருளைக் களைந்தார்கள்! கேட்ட துண்டாம்!

மனம்போல அரசாண்ட மன்னர், அன்னோர்
வால்பிடித்து வாழ்ந்திருந்த அமைச்சர், தம்மின்
இனம்போல வாழுகின்ற மற்றோர் எல்லாம்
எழுச்சியுற எண்ணாதார்; தன்னைக் கொல்லும்
சினம்போல ஒழுக்கமின்றி வாழ்ந்த மக்கள்
சீர்பெறவே நன்னெறியைப் பண்பைக் கோடைப்
பனம்போல நல்லறிஞர் வகுத்துத் தந்தார்!
பார்த்ததுண்டாம்! அவரவரின் தனிச்சிறப்பு!

நல்லரசு சௌமியத்தில் தழைக்கச் செய்வோம்!
நமக்குள்ளே பகையில்லா வாழ்க்கை செய்வோம்!
சொல்லரசின் வழிநடப்போம்! துன்பம் கண்டால்
துயர்நீக்க முனைந்திடுவோம்! தாய கத்தின்
வில்அரசாய் இளைஞரெலாம் வாழ்வோம்! பண்டை
வேல்வீரர் மரபினர்நாம் நாட்டைக் காப்போம்!
பல்லரசும் நல்லரசாய்ப் பகையே இன்றிப்
பல்லாண்டு வாழ்ந்திருக்க வகைசெய் வோமே!

3-4-'69

# செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

(எண் - பக்க எண்களைக் குறிக்கும்)


அ

அஞ்சுகத்தாய் 46
அடலேறு 60
அடுபசித் 21
அன்னை 83
அண்ணா 46
அண்ணாவின் 48, 51, 54
அரசில் 41
அல்லுடைத்த 59
அல்லும் 33
அலை குடையும் 10
அலை பிறந்த 31
அழுத்தமுடன் 55
அளவாய்க் 24
அறிந்தார் 54
அன்னை 97
அன்னையை 99
ஆங்குறள்போல் 42
ஆசைக்கு 20
ஆண்டவனின் 2
ஆண்டுக்கிங் 4
ஆண்டுக்கு 24
ஆலைகளைத் 54

இ

இக்காலம் 7
இந்த 23, 48
இருட்டறையில் 13
இருளைப் 25
இந்நாட்டில் 30
இல்லறத்தை 1
இவ்வாண்டு 102
இவரியா 35, 44
இளநீர் 77
இன்ப 95
இன்பக் 22
இன்றுள்ள 50
இனித்தமிழும் 52
இனியாரே 47
ஈருயிர் 97

உ

உண்டியின்றேல் 8
உண்ணீரின் 53
உலகில் 41
உலகோர் 61
உலையில் 27
உள்ளத்தைத் 58
உளம் நிறைந்த 48
உறங்கும் 28

எ

எங்கோ 74
எண்ணத் 81
எண்ணத் 78
எண்ணத்தை 10
எத்தொழிலும் 6
எதற்கும் 97
எதுதான் 98
என்றன் 91
என்றும் 28
என்னருகில் 90
ஏழை 26
ஏழைப் 28
ஏரோட்டு 46

ஒ

ஒவ்வொரு 23
ஓடாத 12
ஓடிப் 49

க

கட்டி 50
கடல் சூழ்ந்த 18
கடல் மல்லைத் 31
கடலிடை 36
கடலோடு 30
கடற்கரையில் 101
கண்ணில் 51
கணை 41
கத்து 46
கதையெழுதி 47
கரைதேக்கி 16
கல்லக் 47
கல்லார்க்கும் 49
கல்லையுநற் 3
கலையில் 74
கற்றவர்கள் 32
கன்னி மனப் 89
கன்னியைப்போல் 2
கன்று 91, 92
காட்டைப் 34
காடெலாம் 73
காடு 96
காய்ந்தால் 98
கார் தவழும் 4
கார்மூட்டும் 11
காலமெனும் 4
காவேந்து 101
காவேரி 77
கானகத்தில் 40
கிள்ளை 96
குயிலின் 74
குழந்தை 20
குளத்தில் 20
குளத்தினிலே 39
குறிஞ்சி 83
கூத்தளித்துக் 48
கூடு 95
கூன்-நிலவு 11
கொடி படர்ந்த 29
கொடிய 93
கோட்டைப் பொன் 75
கோவலர் 78
கோழி 92

ச

சந்தில் 27
சாரல் 74
சின்ன 91
சீர்பழுத்த 17
சீர்மேவு 27
சுடர்விளக் 43
சூலகத்துக் 102
செங்கருப்பங் 90
செஞ்சொற் 33
செந்தமிழால் 10
செம்பொன் 33
செவ்வான் 88
சென்னைத் 48
சொல்வடியும் 54
சொற்கேட்டால் 57
சோம்பல் 92

த

தமிழாய்ந்த 55
தமிழுக்கே 56
தமிழை 50
தமிழவற்றிப் 50
தன் நாட்டைப் 103
தனித்துத் 41
தாங்கும் 42
தாத்தா 56
தாய் மடியை 82

திங்கள் 83
தித்திக்கும் 81
துள்ளித் 46
தெருவுற்ற 12
தெள்ளு 78, 96
தென்மொழியைத் 81
தென்றல் 41
தேன்சொட்டச் 100
தேன் 27
தேன்மி 94
தேனையுண்ட 89
தோட்டம் 47

ந

நட்டு 47
நம் நாட்டின் 9
நம்முடைய 24
நமையீன்ற 6
நல்ல 81
நல்லரசு 104
நல்வாழ்வு 7
நன்செய் 98
நன்மைபல 3
நாட்டில் 47, 51
நாட்டுக் 56
நாமணக்கும் 52
நாயு 93
நாற்பத்தா 52
நான் கிழவன் 80
நின்று குடி 53
நீர்தேக்கி 103
நிலைத்திருக்க 5
நெடுவான 16
நொதுமல் 49

ப

பண்டை 34
பத்தாண் 23
பழுத்திருக்கும் 13
பள்ளத்துள் 19
பள்ளரும் 78
பன்னாளில் 2
பாட்டால் 33
பாட்டெழுதி 52
பாடிப் 49
பாடுக 38
பாடுகின்றேன் 80
பார்வாழும் 51
பாராண்ட 8
பாரினைத் 99
பாவேந்தர் 3
பிள்ளை 21, 24
பிள்ளையென்றால் 59
பிறநாட்டான் 3
பிற நாட்டைப் 7
பிறப்பினிலே 19
புத்தம் 47
புதுநோக்குப் 80
புரிமுற்றி 15
புள்ளி 93
புன்னைப் 52
புன்செய் 49
புன்னை மர 90
பூக்களிலே 7
பூதத்தத் 52
பெண்டு பிள்ளை 48
பெண்ணே 21
பைந்தமிழ் 100
பொங்குகடல் 90
பொய் கூட்டிச் 103
பொன்னி 52
போதுமென்ற 8

ம

மக்கள் 22, 25, 27, 28
மக்களிடை 1
மங்கும் 33
மண்ணாள் 49

மண்பூத்த 39
மதுமலர் 97
மருத்துவம் செய் 101
மலைகள் 70
மலையாடும் 39
மலையிடைப் 73
மழைமோது 42
மற்போருக் 48
மன்றிருந்து 11
மன்னர்மன் 99
மன்னா 42
மன அமைதி 9
மனம் நொந்தால் 100
மனம் போல 104
மனை துறந்து 60
மாலையிட்ட 40
முகம்தந்த 31
முகம் மறக்கப் 42
முத்து வேல் 51
முத்தெழிலன் 82
முப்பால் 28
முரசறைந்து 51
முறையாக 12
முன்னாளில் 60
முன்னேற்ற 50
முன்னோர்கள் 12
மேல் நாட்டுக் 101
மொழி வகுத்தோர் 18

வ

வடமொழியும் 58
வளியம்மை 88
வளமான 6
வளமிகுநம் 9
வன்செயலே 42
வள்ளியம்மை 88
வள்ளுவனை 51
வாடும் 43
வான 86
வாழ்கின்ற 5
வாழ்ந்தோர் 83
வான் எழுந்த 15
வான்தழுவும் 59
வான் தாவும் 10
வான் பரப்பும் 89
வான் பிறந்த 57
வான் பூத்த 5
வான் முட்டு 84
வானேறி 29
வானைப் 25
விண்பூத்த 30
வேற்றார் 50



**கவிஞரேறு வாணிதாசன்**

**தோற்றம் : 22-7-1915 மறைவு : 7-8-1974**

# ஏன் எழுதுகிறேன்?

நான் என் கவிதையின் வாயிலாகப் படிப்பவர்களுக்குச் சங்க கால இலக்கிய நினைவைத் தூண்ட ஆசைப்படுகிறேன் சங்க இலக்கியப் பொற்காலக் கவிதைகளைப் போல் மீண்டும் தரமான கவிதைகள் தோன்ற வழி செய்யவேண்டும். அதற்கான எதிர்காலக் கவிஞர்களை உண்டாக்க வேண்டும் என்பதே என் ஆசை. சங்க கால இலக்கியத் தனித் தமிழ்ச் சொற்களை எளிமையிலும் இடையிடையே ஒன்றிரண்டு புகுத்துவது இதன் காரணமேயாகும். எனக்கு இயற்கையின்மீது ஈடுபாடு மிகுதி. இயற்கைக் கவிதை அதிகம் எழுத ஆசைப்படுகிறேன்; எழுது கிறேன். என் பாடல் வாயிலாக வாசகர்களை நான் அடிக்கடி சிந்திக்கத் தூண்டுகிறேன். பொதுவாக முறையே படித்தோரும் படிக்காதோரும் சுவைக்க வேண்டும் என்ற குறியோடே நான் எழுதுகிறேன். (நன்றி—தினகரன்.)

மூவேந்தர் அச்சகம், இராயப்பேட்டை, சென்னை-14